Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

நவம்பர் 14 - 20, 2013

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1040



சவால்களின் நாயகன் அற்புதன்



# பறிக்கப்பட்ட நிலங்கள் மீட்கப்படுவது எப்போது?



# இலங்கை இந்திய உறவும் பொதுநலவாய மாநாடும்



# மலையக மக்களை வதைக்கும் சந்தா!

## பக்தியைப் பெருக்குங்கள்

மனிதப் பிறவி புதிதாக முதன்முதலாகக் கிடைத்ததல்ல. இதற்குமுன் எத்தனையோ பிறவி எடுத்தாகிவிட்டது. ஆத்மா அழிவற்றது. அது, மேலும், கீழும் போய்ப் போய் வருகிறது. கர்ம வினை தீர்ந்து, புண்ணிய பலன் ஏதாவது இருந்தால், இன்னும் கொஞ்சம் உயர்ந்த ஜென்மா கிடைக்கிறது.

இப்படி புண்ணிய பலன் கூடுதலாக, கூடுதலாக, பட்சி, பிராணி, பசு, மனிதன் என்று வரிசையாக பிறப்புவருகிறது. மனித ஜென்மாவில்கூட எத்தனையோ மனித ஜென்மா எடுத்து புண்ணியம் சேர்ந்திருந்தால், இந்த மனித ஜென்மாவிலும் சுகபோகங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. புண்ணிய காரியம் செய்வதற்கும் பிராப்தம் இருக்கவேண்டும். அது இல்லாவிடில், மனம் அதில் ஈடுபடாது. வேறு எதிலோதான் ஈடுபடும்.

உலக மாயையில் சிக்காமல், அஞ்ஞானம் விலகி, ஞானம் ஏற்பட்டு சர்வமும் ஈஸ்வர மயம், எல்லாமே பரம்பொருள் என்று எண்ணுகிற நிலையெல்லாம் வந்த பிறகுதான் முக்தி என்கிற மோட்ச சாம்ராஜ்ஜியத்தை அடையமுடியும். இப்போது அதன் எல்லைக்கோடு வரையிலாவது போகமுடியுமா என்பதுதான் கேள்வி. மகான்கள் தரிசனம், தெய்வபக்தி இவைகளை விருத்தி செய்துகொண்டே போனால், எப்போதோ, எந்தக் காலத்திலோ பகவானோடு சேர்ந்துவிடலாம். முயற்சி செய்யவேண்டும் நம்பிக்கை இருக்கவேண்டும்.

## ஆன்மீகம்

## தேவனை அடையும் தகுதி

ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்," என்றார் (மாற்கு 10:25) இயேசுகிறிஸ்துவின் இந்த உபதேசம் பல சமயங்களில் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. இந்த வசனத்தில் "ஐசுவரியவான்"...அதாவது பணக்காரன் என்றால் யார்?

சைக்கிளில் செல்பவரை விட, மோட்டார் சைக்கிளில் செல்பவரும், மோட்டாரில் செல்பவரை விட காரில் செல்பவரும் பணக்காரராக உலக வழக்கில் கருதப்படுகிறார். பணத்தின் அளவைக்கொண்டே ஒருவர் பணக்காரரா இல்லையா என்பது நிர்ணயிக்கப்படுகிறது. பைபிளில், யோபு, ஆபிரகாம், சாலமோன் போன்ற பல ஐசுவரியவான்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் பரலோகத்திற்கு செல்வது எளிதானதா? கடினமானதா?

இயேசுகிறிஸ்து ஐசுவரியவான்கள் பரலோகத்துக்குச் செல்லவே முடியாது என்று கூறவில்லை. கடினம் என்றுதான் சொல்கிறார்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்கு கொடு (மாற்கு 10:21) என்று ஒருவனிடத்தில் கூறிவிட்டு, "ஐஸ்வரியமுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" (மாற்கு 10:23) என்று தன் சீடரித்தில், நாம் மேலே பார்த்ததைக் கூறினார்.

தேவனுடைய சுத்த கிருபையே அவர்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

## அல்லாஹ்வின் உதவியை நாடு!


இன்று எம்மில் சிலர் எனக்கு எல்லாமே தெரியும். எதனையும் என்னால் சாதிக்க முடியும். பிறரது உதவி எனக்குத் தேவையில்லை என கூறுகின்றனர். இறைவனது விடயத்திலும் இவர்களின் போக்கு இவ்வாறுதான் அமைந்துள்ளது. இதற்குக் காரணம் இவர்களின் மனமே. ஏதேனும் இன்னல்களில் இவர்கள் அகப்பட்டுக்கொள்ளும் போதுதான் அல்லாஹ்வின் உதவி அவர்களுக்கு தேவைப்படுகிறது.

இந்நிலை எம்மிடமிருந்து மாறவேண்டும். எம்மை ஒரு கட்டுப்பாடான வாழ்க்கைக்குள் கட்டாயம் உட்படுத்திக் கொள்ளவேண்டும். நரகத்தை நோக்கி நமது நடவடிக்கைகள் சென்றுவிடாமல் சுவர்க்கத்தை நோக்கி நாம் செல்ல வேண்டும். அல்லாஹ்வின் விருப்பங்களே அவன் சிருஷ்டிக்கு விருப்புக்குரியவையாக இருக்கவேண்டும். இவைகள் இறைவனின் வெறுப்புக்குரியவையாக மாறிவிடக்கூடாது.

இவ்வுலகம் இனிமையானதும், பசுமையானதுமாகும். இதில் நீங்கள் எவ்வாறு செயற்படுகிறீர்கள் என்பதை பார்ப்பதற்காகவே அல்லாஹ் அதில் உங்களை தனது பிரதி நிதிகளாக ஆக்கினான். ஆகவே நீங்கள் அல்லாஹ்வின் உதவியே அனுதினமும் நாடவேண்டும்.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1037



### காத்திருப்பு!

பாராட்டுக்குரியது

மூணு வேளையும்
மூக்கு முட்ட
உண்டு பருத்த
உண்டி குறைக்கப்
பயிற்சி செய்கிறான்
போலும்...
திண்டுக்க
வழியின்றி
நிண்டுக்கக்
காலுமியங்காக்
கிழவன்
தெருவில் கிடக்கிறான்
வயிற்றுப்
பசியில்!

பாண்டியூர்,
பொன்.நவநீதன்.




## கவிதைப் போட்டி இல 1040



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18. 11. 2013
கவிதைப் போட்டி இல. 1040 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### ஏழைக்கு உதவு

பாதசாரியே!
பாதையில் படுத்துக்கிடக்க
பார்த்துக் கிடக்க
பார்த்து நீ செல்வது
பரம ஏழை
நாலு காசு அவருக்கு கொடுக்காமல்
நடையைக் காட்டுகிறாய்
எடுப்பான உன் தோற்றம்
இறைவனுக்கு தேவையில்லை
ஏழைக்கு உதவு
இறைவன் உனக்குதவுவான்!

எம்.சி. கலீல், கல்முனை - 05.

### பொதுநலவாய மாநாடு

பல கோடி ரூபா
செலவில்
பொதுநலவாய மாநாடு!
தெருக்கோடியில்
பட்டினியுடன்
தொடருது
என் பாடு!

ந.வர்ஷினி, மட்டக்களப்பு.

### இன்று - நாளை

நானும் இப்படித்தான்
நடையளந்தேன்
மிடுக்காய், கம்பீரமாய்
கர்வமுடன் - என்
கர்வத்தையடக்க இறைவன்
ஒரு நரம்பைச் சுண்டியிழுக்க
இன்று இப்படி அசையமுடியாமல்
வீதியில் கிடக்கிறேன்
இன்று எனக்கு - நாளை உனக்கு.

அ.சந்தியாகோ, கண்டி.

### சுரண்டல் காட்சி

சுரண்டப்படும் தொழிலாளர்
வர்க்கம் சுக்குநூறாகி
தொலைவில் ஒய்வெடுக்கும்
கவலைக்காட்சியும்,
சுரண்டிக்கொண்டிருக்கும்
சுரண்டல் முதலாளி ஒருவன்
இன்னுமொரு சுரண்டலை
சுகப்பிரசவம் செய்யும் வேகத்தில்
வீரநடை போடுகிறான்
அவன் சுரண்டிய எச்சம்
ஆடையும் இழந்து கிடக்குது,
ஒருவன் வாழ்கிறான்
பலர் மாய்கிறார் எனும்
கண்ணீர் காட்சியும் இதுதான்!

A.பாரிஸ், கட்டுக்கெலியாவ.

## உங்கள் பக்கம்

### நடத்துநரின் அசமந்தப்போக்கு

நுவரெலியாவில் இருந்து அம்பேவல நோக்கி பயணத்தில் ஈடுபடுகின்ற நுவரெலியா டிப்போவிற்குச் சொந்தமான இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்தின் நடத்துநரின் செயற்பாடுகள் மிகவும் அருவருக்கத்தக்க வகையில் இருக்கின்றன.

குறித்த பேரூந்தில் பயணிக்கின்ற பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், மதகுருமார்கள், அரச அலுவலர்கள் ஆகியோருடன் குறித்த நடத்துநர் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களுடன் அனுகுவதை குறித்த பேரூந்தில் பயணிப்பவர்கள் அனைவரும் அறிந்த விடயமாகும்.

உரியமுறையில் பயணச்சீட்டை வழங்காமல் சிலவேளைகளில் சரியான மிகுதித் தொகையும் வழங்கப்படுவதில்லை.

பயணிகள் தாங்கள் இறங்க வேண்டிய தரிப்பிடத்தை முன்கூட்டியே கூறினாலும் குறித்த தரிப்பிடத்தில் நிற்காமல் அதற்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ நிறுத்தி பயணிகளுக்கு சௌகரியங்களை ஏற்படுத்துகின்றார்.

இது தொடர்பில், இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என தினமுரசின் உங்கள் பக்கமூடாக வினயமுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எம்.அஷ்மன்,
அம்பேவல, நுவரெலியா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## வாசகர் சாலை

### சபாஷ்!

முரசின் வளர்ச்சி அற்புதமாக இருந்தாலும் அதன் கனதி மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இன்னும் அற்புதமான தகவல்கள், கட்டுரைகள் என்பவற்றை எல்லாம் சேர்க்கமுடியும். தினமுரசின் குறைகள் நிறைவுபெற வேண்டுமென்பதே எனது அவா. முரசில் பெறுமதி இல்லையென்று கூறவரவில்லை. ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது கனதி இல்லை. அவ்வளவுதான்.

சென்றவாரம் தேசபக்தியையும், இனஐக்கியத்தையும் உடைக்கும்விதமாக செயற்படுவதாக ஒரு கட்டுரை வெளிவந்தது. இவ்வாறாக கீழ்த்தரமான செயல்களைச் செய்பவர்களுக்கு இது ஒரு அடியான கட்டுரைதான். இக்கட்டுரையை எழுதிய மதியூகிக்கு ஒரு சபாஷ்!

கு.மோகனா, நெல்லியடி.

### பாப்பா முரசு படியுங்கள்!

தினமுரசு 1037ஆவது இதழில் இடம்பெற்ற பாப்பா முரசு பகுதியை படித்தேன். இதில் உங்களுக்குத் தெரியுமா? என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட தகவல்களை பார்த்தேன். இவற்றில் குடை பற்றி கூறப்பட்ட விளக்கத்தில் குடை மழைக்குப் பயன்படுத்தப்பட்டாலும் அது நிழலுக்கு உரியது. இலத்தீன் மொழியில் குடை என்ற, சொல்லுக்கு நிழல் என்று பொருள். இது எம்மில் எத்தனை பேருக்கு தெரியும்? பாப்பா முரசு படித்தவர்களுக்கு தெரியும். பலதும் பத்தும் அறிய பாப்பா முரசு படியுங்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05

### என்றும் நினைவுடன்...

முரசின் ஸ்தாபக ஆசிரியர் அற்புதனின் 14ஆவது நினைவஞ்சலியினைக் கடந்த வாரம் முரசில்கண்டதும் கனத்த இதயம் கடந்த காலங்கள் நோக்கி பின்னோக்கிச் சென்றதைத் தடுத்துவிட முடியவில்லை.

அந்தக் காலகட்டங்களில் அற்புதன் என்கின்ற தனிமனிதன்தான் தினமுரசின் அனைத்துப் பக்கங்களையும் வாராவாரம் ஜனனம் செய்கின்றார் என்ற உண்மை அறியாதபோதும் அவரினுடைய எழுத்துக்களில் இருந்த உயிரோட்டம் எங்களையெல்லாம் கட்டிப்போட்டு வைத்திருந்தது. அந்த ஜீவன்தான் வீழ்த்தப்பட்டது என்ற செய்திகேட்டதும் உற்ற உறவை இழந்ததுபோல் இதயம் விம்மி வெடித்தது. அதை இன்று நினைத்தாலும் அப்பப்பா...!


கே. அனுஷியா, வவுனியா.

### ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

அற்புதனுக்குப் பிறகு முரசின் வளர்ச்சி மிகவும் சிறப்பானது. பல சவால்களையும் தாண்டி அற்புதன் காட்டிய வழியில் முரசின் வழி தொடருவது பாராட்டத்தக்கது. அவர் மறைந்தாலும் அவரது எழுத்துக்கள் எம்மை வழிகாட்ட வைக்கின்றது. அவரின் எழுத்துக்களை இன்றும் நாம் வாசிக்கும்போது உயிர்த் துடிப்புள்ள ஏதோவொரு சிறப்பு இருப்பதாகவே தோன்றுகின்றது. அற்புதன் ஆத்மா சாந்தியடைய நான் பிரார்த்திக்கின்றேன்.

எஸ்.மதன், யாழ்ப்பாணம்.

# சர்வதேச அரசியல் நீரோட்டத்திற்கமைவான அரசியலையே நாம் பின்பற்றுகின்றோம்



**- ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்**

**மதிநுட்பமான அரசியல் வழிமுறையினைக் கையாள்வதனூடாகவே மக்களின் நல்வாழ்வுக்கும், பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் உதவமுடியும். இதையே இன்றைய சர்வதேச அரசியல் வழிமுறைகளும் வலியுறுத்தி வருகின்றன. அந்தவகையில் சர்வதேசத்தின் அரசியல் நீரோட்டத்திற்கமைவான நெறிமுறைகளையே நாமும் பின்பற்றிவருகின்றோம். அத்தோடு எமது அரசியல் பாதைகளை தவறானது எனக் குறிப்பிட்டவர்களும் இன்று அதே பாதையை பின்பற்றி வருகின்றனர், என பச்சிலைப்பள்ளி பகுதிக்கு மின்சார விநியோகத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய, ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், 2014 டிசம்பருக்குள் எல்லா மக்களுக்கும் மின்சாரம் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விடயங்கள் அனைத்தையும் ஒரு அபிவிருத்திப் பாதையை நோக்கிய அரசியல் வழிமுறைகளுக்கு ஊடாகத்தான் சாத்தியமாக்கப்பட்டு வருகின்றன.

சமூகத்தின் மூத்தோர்கள் சரியான முறையில் சிந்தித்து சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்தியிருப்பின் எதிர்காலத்தில் வேகமான முன்னேற்றத்திற்கு நாங்கள் வழிவகுத்திருப்போம். ஆனால் எமது மூத்த சந்ததியினர் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைக்கூட சிந்திக்காமல் செயற்பட்டமையானது வேகமான அபிவிருத்தியில் சில தடங்கல்கள் ஏற்படுவதற்கு வழிவகுத்திருக்கிறது. இருப்பினும் அவற்றையெல்லாம் வெற்றிகண்டு எமது மக்கள் பணி தொடரும் எனக் குறிப்பிட்டார். வடக்கின் வசந்தம் மின் விநியோகத் திட்டத்திற்கமைவாக சுமார் 136 இலட்சம் ரூபா செலவில் பச்சிலைப்பள்ளி மலவில் பகுதிக்கான மின்சாரவிநியோக செயற திட்டம் சந்திரகுமார் எம்.பியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தமிழ் மக்களுக்கு இந்தியாவே காவலனாக இருக்கின்றது

**பிரபா எம்.பி**

''இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இந்திய நாடே காவலனாக இருக்கின்றது, என்பதே எனது எண்ணமாகும்'' எனப் பொதுநலவாய மாநாட்டில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளாமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இலங்கை தமிழர்களுக்காக தமிழ் நாட்டு அரசயல் கட்சிகள் உட்பட ஏனைய பலரும் களமிறங்கியிருப்பதை பார்க்கும் பொழுது மகிழ்ச்சியாக இருக்கின்றது. இவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை, இவர்கள் இந்த பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங்கை கலந்துகொள்ள அனுமதிக்காததன் மூலமாக இலங்கை - இந்திய இராஜதந்திர உறவில் பாரிய விரிசலை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்

எதிர்காலத்தில் இலங்கை தமிழ் மக்களுக்கான பிரச்சினையில் இந்திய அரசு தலையிடும் பொழுது அதனை இலங்கை அரசாங்கம் புறக்கணிப்பதற்கு சாதகமாக இவ்விடயம் அமைந்துவிடும். இலங்கை விடயத்தில் தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் தங்களுக்குள் போட்டியிட்டு மேலும் எமது பிரச்சினையை சிக்கலாக்கிவிடுவார்களோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

எது எப்படியிருப்பினும் இலங்கையில் வாழும் தமிழர்களின் நலனுக்காக தொடர்ந்தும் இந்தியா முன்னிற்கும் என்று நம்புகின்றேன். இந்திய நாட்டைத் தவிர வேறு எந்தவொரு நாடும் எமது பிரச்சினையில் முழுமையான அக்கறை செலுத்தாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே, இந்தியா விலகி நிற்பதன் மூலம் ஒருபோதும் எமது பிரச்சினைக்கு தீர்வை காணமுடியாது. இதனை இந்திய மத்திய அரசாங்கம் தெளிவாக புரிந்துள்ள நிலையிலும் தேர்தல் அடிப்படையில் தமிழ்நாட்டு அரசியலுக்கு அடிபணிய வேண்டியுள்ளது என்ற யதார்த்தத்தை நாம் புரிந்துகொண்டுள்ளோம். இது தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களுக்கு அல்ல எமக்கே துரதிர்ஷ்டமான விடயமாகும்.

இந்திய அரசாங்கத்தின் கரங்களை பற்றிப்பிடித்து இந்நாட்டில் இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வை பெற்றுக் கொள்ளவேண்டும். பொதுநலவாய மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்துகொள்ளாததன் மூலமாக மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை நாம் இழந்துவிட்டோம்" என்று தெரிவித்துள்ளார்.

# தேசிய அடையாள அட்டை இடம்பெயர் சேவை வாகரையில்!

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கு மாகாணத்தில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்கும் இடம்பெயர் சேவை மட்டக்களப்பு வாகரை பனிச்சங்கேணியில் நடைபெற்றுள்ளது. ஆட்பதிவுத் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் வாகரைப் பிரதேச செயலக அதிகாரிகள், கபே மற்றும் மனித உரிமைகள் இல்லம் ஆகியவற்றின் அதிகாரிகள் பனிச்சங்கேணிப் பகுதிக்கு வந்து இந்த இடம்பெயர் சேவையை ஆரம்பித்துவைத்தனர்.

மனித உரிமைகள் ஆய்வு நிலையம் மற்றும் கபே நிறுவனம் என்பன ஆளடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் இடம்பெயர் சேவைக்கு நிதி அனுசரணை வழங்குவதோடு, இடம்பெயர் படப்பிடிப்பு சேவையும் முத்திரைக் கட்டணங்களும் மேற்படி நிறுவனங்களினால் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த இடம்பெயர் சேவை வாகரையின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# விருந்தினர் விடுதி நிர்மாணிக்கத் தடை

உலக வங்கியின் நிதியுதவியில் புறநெகும திட்டத்தின் ஊடாக கிண்ணியா நகர சபையினால் விருந்தினர் விடுதியொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. எனினும் இந்த விருந்தினர் விடுதி கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு மிக அருகில் அமையவுள்ளதால் மாணவிகளின் கலாசாரத்திற்கு பாதிப்பதாகும் எனப் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். அத்துடன் கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் முறைப்பாடொன்றையும் மேற்கொண்டனர். இதனையடுத்து, நடாத்தப்பட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து குறித்த விருந்தினர் விடுதியின் நிர்மாணப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு நகரபிதாவுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டதுடன் பொருத்தமான வேறு ஒரு இடத்தில் விருந்தினர் விடுதியை அமைக்குமாறும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸார் பாலத்தை புனரமைப்பு செய்தனர்

அணமையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது பாதிப்படைந்த கினிகத்தேனை, வேவெல் தலாவ கிராமத்திற்கு செல்லும் கம்பி பாலம் பொதுமக்கள் மற்றும் பொலிஸாரின் முயற்சியால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இப்பாலம் சேதமடைந்தததால் பாதிக்கப்பட்ட சுமார் 500 இற்கும் மேற்பட்ட மக்கள், புதிய பாலம் ஒன்றை நிர்மாணித்து தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக கினிகத்தேன பொலிஸ் உத்தியோகத்தர் எச்.ஏ.பிரமேலால் தலைமையில் தனியார் மின்சார உற்பத்தி நிலையத்தின் அனுசரணையுடன் பொதுமக்களும் சேர்ந்து ஒரு புதிய உறுதியான கம்பி பாலத்தை கட்டிமுடித்தார்கள்.

# மட்டக்களப்பில் அதிகரிக்கும் பாலியல் தொழில்

*பிரகஸ்பதி*

**தமிழ் மக்கள் பெரும்பான்மையான வாழும் மாவட்டத்தில் இவ்வாறான கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதற்கு முக்கியமானதொரு விடயமாக பொருளாதாரம் - வருமானம் சொல்லப்படுகிறது. அத்துடன் பொருளாதாரத்தினைவிடவும் பிழையான செயற்பாடுகளும் காணப்படுகின்றன.**

**மட்டக்களப்பு** மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெளியில்வரும் பாலியல் தொடர்பான சம்பவங்கள் மிகுந்த கவலையளிப்பவையாக அமைகின்றன.

தமிழ் மக்கள் பெரும்பான்மையான வாழும் மாவட்டத்தில் இவ்வாறான கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதற்கு முக்கியமான தொரு விடயமாக பொருளாதாரம் - வருமானம் சொல்லப்படுகிறது. அத்துடன் பொருளாதாரத்தினை விடவும் பிழையான செயற்பாடுகளும் காணப்படுகின்றன.

ஒரு வாரத்துக்குள் மாத்திரம் விபச்சாரக் குற்றச்சாட்டில் 3 இடங்களில் கைதுகள் நடைபெற்றுள்ளன. மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் இயங்கிவந்த விபச்சார விடுதி ஒன்று பொலிஸாரால் கடந்த வாரத்தில் முற்றுகையிடப்பட்டது. இதன்போது விபச்சார விடுதியை நிர்வகித்த பெண்ணும் பாலியல் தொழிலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பெண்கள் வவுணதீவு மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களாவர் என்று அறியமுடிகிறது.

கல்லடி டச்பார் வீதியில் உள்ள விடுதியொன்றில் விபச்சாரம் நடப்பதாக நீண்ட நாட்களாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சென்ற காத்தான்குடி பொலிஸார் மூன்று பெண்களை கைதுசெய்திருந்தனர். அடுத்த சம்பவம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்புறமாகவுள்ள உணவு விடுதியில் விபச்சாரத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இரு யுவதிகளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த உணவு விடுதியில் கடமையாற்றும் குறித்த பெண்கள் இரவில் விபச்சாரத்துக்கு பயன்படுத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் அருகில் மூன்று பெண்கள் அடங்கலாக 6பேர் கைது செய்யப்பட்ட விடுதியிலும் கடந்த வாரத்தில் ஒரு ஜோடி கைது செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் அங்கு சென்ற வேளை ஒரு ஜோடி தப்பித்து ஓடியுள்ளது.

இந்நிலையில், சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் செங்கலடி பிரதேச செயலகப்பிரிவில் சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றும் ஒருவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவரின் சமுர்த்தி முகாமையாளர் பதவி தாபனக்கோவை விதிகளுக்கு அமைவாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள கல்வியகம் ஒன்றில் வைத்து மூன்று சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தார் என மேற்படி சமுர்த்தி முகாமையாளர் மீது காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவர் இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்)

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# முயற்சியும் பின்னடைவும்!

பொதுநலவாய மகாநாடு வெற்றிகர மாக நடைபெறும் என்று பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஸ் சர்மா கூறியிருக்கின்றார். இலங்கை அரசுக்கு மிக ஆறுதலான செய்தி அதுவாகத்தான் இருக்கும்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மகாநாட்டுக்கு வருகை தரமாட்டார். தமிழக எதிர்ப்பே அதற்குக் காரணம். ஆனாலும் தமிழகத்தில் இலங்கை மகாநாட்டுக்கு எதிரான போராட்டங்கள் ஓயவில்லை. இந்தியா சார்பில் எவருமே மகாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி வருகின்றனர்.

மன்மோகன் சிங் வருகைதராவிட்டாலும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்சித் தலைமையிலான குழு பொதுநலவாய மகாநாட்டில் பங்குகொள்ளும் என்று இந்தியா அறிவித்துள்ளது.

மகாநாட்டுக்கு வருகைதரும் மன்மோகன் சிங் வடபகுதிக்கும் விஜயம் செய்வார் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்திக்குப் பிறகு. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருக்கும் வேளையில் அதன் பிரதமர் மன்மோகன் சிங் நேரடியாக இலங்கை வருவது புதிய அத்தியாயமாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக அப்படி ஒரு வரலாற்று நிகழ்வு சாத்தியமாகவில்லை. மன்மோகன் சிங் வரவில்லை என்பது தமது வெற்றி என்று தமிழகத்தில் கொண்டாடப்பட்டாலும். இலங்கைத் தமிழர்களுக்கு பெருத்த ஏமாற்றமாகும்.

இலங்கை அரசுக்கு மன்மோகன் சிங் வருகை தராதது ஒரு பக்கம் வருத்தமாக இருந்தாலும். மறுபக்கம் விருப்பத்துக்குரியதாகவே இருக்கும். தனது புதிய நண்பர்களிடையே நெருக்கத்தை வலுப்படுத்திக் கொள்ள உதவும்.

பொதுநலவாய மகாநாடு நடத்தப்படுவதன் ஊடாக இலங்கை அரசு எதிர்பார்க்கும் நன்மைகளில் முதன்மையானது அழுத்தத் தவிர்ப்புத்தான். ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறான பிரதிபலிப்புக்களாகவும். விரும்பாதவர்களை வரவேற்கின்ற கசப்பாகவும் சில காரியங்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பொதுநலவாய மகாநாடு. மனித உரிமைகள் மகாநாடு போன்ற சர்வதேச மகாநாடுகள் நடைபெறும்போது இலங்கை அரசுமீது நெருக்கடிகளை கொடுக்க பல தரப்புகளும் களத்தில் குதிக்கத்தயாராக இருக்கின்றன. இந்த நிலையில் குறைந்தபட்சம் உள்நாட்டுக்குள்ளாவது சுமூகமான சூழலை பாதுகாத்துக்கொள்ள இலங்கை அரசு முயற்சிக்கவேண்டும்.

ஆனால். வட மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டபின்னர் காணிகளை சுவீகரிப்புச் செய்ததும். தற்போது யாழ்ப்பாண பாதுகாப்பு வலய நிலங்களில் உள்ள வீடுகளை உடைப்பது. உரியவர்களை விடுத்து வேறு இடத்தைச் சேர்ந்தவர்களை குடியேற்றுவது என நடைபெறும் சம்பவங்கள் இலங்கை அரசுக்கு சரிவையும். பின்னடைவுகளையுமே ஏற்படுத்தியுள்ளது.

இதுமாதிரியான முரண்பட்ட செயற்பாடுகள் இலங்கை அரசின் சர்வதேசம் நோக்கிய முயற்சிகளை தோல்வியடையச் செய்வதை புரிந்துகொண்டு முதலில் முழு இலங்கை மக்களும் திருப்திப்படுகின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# பறிக்கப்பட்ட நிலங்கள் மீட்கப்படுவது எப்போது?

இலங்கையில் தமிழ் மக்கள் அரசியல் உரிமைக்காக தொடங்கிய போராட்டங்கள். தமிழ் மக்களின் பொருளாதாரத்தையும், கல்வி, கலை, கலாசார விழுமியங்களையும், பாரம்பரிய இருப்பையும் தகர்த்து விட்டுள்ளது.

விலைமதிப்பற்ற உயிர்ப் பலிகளையும், தியாகங்களையும் தமிழ் மக்கள் கொடுத்த போதும், எல்லாமும் பயனற்றதாகிவிட்டது. இன்று தமிழர் இனம் தனது போராடுகின்ற வலிமையை இழந்து, தனிமனித ஆளுமைகளை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்துக்குள் இறுகிப்போய் இருக்கின்றது.

உரிமைக்கான உறுதியையும், எதிர்ப்புக்கான வலிமையையும் தன்னகத்தே பாதுகாக்கத் தவறி, மூன்றாந்தரப்புகளை விரல்காட்டுகின்ற வெறுமையை போராட்ட வடிவமாக போர்த்திக் கொண்டுள்ளது.

இழந்த உயிர்களை மீட்க முடியாது. ஏற்பட்ட பின்னடைவை மீண்டும் ஆரம்பப் புள்ளிக்கு இழுத்துவர முடியாது. கல்வியிலும், பாரம்பரியத்திலும் ஏற்பட்ட சிதைப்பை, அழிவை மீண்டும் அதே தளத்தில் தூக்கி நிறுத்தமுடியாது.

அழிக்கப்பட்ட வளத்தையும், வேரறுக்கப்பட்ட பூர்வீக இருப்பையும் முயற்சிசெய்தால் மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதாலோ, தமிழர் மண்ணில் இனப்பரம்பலில் மாற்றங்களை செய்வதாலோ இரத்தத்தில் எரிந்துகொண்டிருக்கும் உரிமைக்கான வேட்கையை அணைத்துவிட முடியாது. இரத்தமும் சதையுமாக தியாகம் செய்த தமிழர்களின் உணர்வுகளை புறக்காரணிகள் வலிமையிழக்கச் செய்துவிடாது.

அரசியல் உரிமை என்பது, கல்வி, வேலைவாய்ப்பு, பாரபட்சமற்ற அரச நிர்வாக கட்டமைப்பின் பரிமாற்றம், தனிமனித மற்றும் இனக்குழும உரிமைகளின் சுதந்திரத் தன்மை, அச்சமற்ற வாழ்க்கையை உறுதிசெய்தல், மொழிப் பயன்பாடு, தனித்துவ அடையாளங்கள், என்பவற்றோடு, பூர்வீக நிலங்களில் பொருளாதார பலத்துடன் வாழ்தலும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் மூலக்காரணமாகும்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு, இலங்கையின் சட்ட மற்றும் பிராந்திய பூகோள அரசியல் சாதக பாதகங்கள் என்பவற்றோடு தொடர்புபட்டது. ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலங்கள் மீண்டும் உரியவர்களிடமே வழங்கப்பட வேண்டும் என்பதற்கு பிராந்திய பூகோளக் காரணங்களோ, சட்டத் தேவைகளோ தடையாக இல்லை. இருக்கவும் முடியாது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கரை ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. யுத்தத்துக்குப்பின்னர் அதிகரித்த இராணுவப் பிரசன்னத்தின் தேவையோ, மக்கள் வாழும் பகுதிகளுக்குள் இராணுவ முகாம்கள் அமையப்பெறுவதோ,





சிவில் விடயங்களில் இராணுவத் தலையீடுகள் இருப்பதையோ, எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையில், யுத்தம் நடைபெற்ற காலத்தில் இராணுவத்தினர் தமது பாதுகாப்புக்காகவும், இருப்புக்காகவும் நிலைகொண்டிருந்த பொது மக்களின் காணிகள் மீண்டும் உரியவர்களிடமே கையளிக்கப்பட்டிருக்கவேண்டும். இராணுவம், சட்டம், ஒழுங்குகளை நிலைநாட்ட இடமளித்து பொருத்தமான அதன் நிலைகளுக்கு திரும்பியிருக்க வேண்டும்.

ஆனால், வடக்கில் நிலைமை அவ்வாறு இல்லை என்பது தான் தமிழ் மக்களின் ஆதங்கத்துக்கும், அரசு மீதான அதிருப்திக்கும் பிரதான காரணமாகும்.

தமிழ் மக்களின் உணர்வுகளை புரிந்துகொள்ள அரசும், பாதுகாப்புத் தரப்பும் முயற்சிக்கவில்லை. மாறாக, தமது வெற்றியைப் பறை சாற்றும் நினைவுத்தூபிகளை நிறுவுவதிலும், பௌத்த விகாரைகளை அமைப்பதிலும், நிலைகொண்டிருந்த தமிழ் மக்களின் அசையும், அசையா சொத்துக்களை தமது உடைமையாக்கிக் கொள்வதிலுமே கவனம் செலுத்தியுள்ளனர்.

அரசியல் அழுத்தங்கள், தவிர்க்கமுடியாத கோரிக்கைகள் காரணமாக பல வீடுகளும், வீதிகளும், உரியவர்களிடம் கையளிக்கப்பட்டு வந்தது. சுமார் 859 இடங்களில் அதாவது பொதுமக்களின் வீடுகள், காணிகளில் நிலைகொண்டிருந்த படையினர் சிறுகச்சிறுக அவற்றை உரியவர்களிடம் மீளக் கையளித்துள்ளனர். இறுதியாக படையினர் வசமிருந்த பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயம் அமைந்திருந்த துறைமுகப்பகுதியில் 33 வீடுகளும், வல்வெட்டித்துறையில் 30 வீடுகளும், சக்கோட்டையில் இராணுவம் பாவித்த 03 வீடுகளும் உரிமையாளர்களிடம் படையினரால் கையளிக்கப்பட்டது. அத்தோடு பருத்தித்துறை வல்வெட்டித்துறை, பொன்னாலை வீதியில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக பாதுகாப்புக்காரணங்கள் கூறிமூடப்பட்டிருந்த நுழைவாயில் வீதியான துறைமுக வீதியும் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டதைக்குறிப்பிடலாம்.

### வடக்கில் நிரந்தர பாதுகாப்பு வலயம்

வடக்கில் ஆங்காங்கே சில பகுதிகளை படையினர் தமது தேவைகளுக்காக கையகப்படுத்திக் கொண்டிருக்கின்றபோதும், வலிகாமத்தின் பெரிய நிலப்பரப்பை படையினர் பாதுகாப்பு வலயமாகச் சுற்றிவளைத்துள்ளனர்.

தற்போது பாதுகாப்பு வலயமாக குறிப்பிடப்பட்டிருப்பதானது, நகுலேஸ்வரம், காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை மத்தி, காங்கேசன்துறை தெற்கு, பளை வீமன்காமம் வடக்கு, வீமன்காமம் தெற்கு, கட்டுவன், வடக்கு வசாவிளான், குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு, வசாவிளான் கிழக்கு, வசாவிளான் மேற்கு, மயிலிட்டி வடக்கு, தையிட்டி கிழக்கு, தையிட்டி வடக்கு, தையிட்டித்துறை தெற்கு, பலாலி, பலாலி தெற்கு, பலாலி கிழக்கு, பலாலி வடக்கு, பலாலி வடமேற்கு, பலாலி மேற்கு ஆகிய பகுதிகள் உள்ளடங்குகின்றன.

சுமார் 6381 ஏக்கர் நிலப்பரப்பையே பாதுகாப்பு வலயமாக கூறி படையினர் சுற்றிவளைத்துள்ளனர். இதில் 16 கிராம சேவையாளர் பிரிவுகள் முழுமையாகவும், 8 கிராமசேவையாளர் பிரிவுகள் பகுதியாகவும் உள்ளடங்குகின்றன.

இந்த நிலப்பரப்பில் இதுவரை செய்யப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் சுமார் ஒன்பதாயிரம் குடும்பங்கள் வாழ்ந்துள்ளனர்.

இந்த மக்கள் தற்காலிக முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் பல ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிலர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர். பலர் நாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்துவருகின்றனர். இந்த நிலத்திலிருந்து சரியாக எத்தனை குடும்பங்கள் வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள் என்பதை மதிப்பீடுகள் செய்யப்படாததே அந்த மக்கள் குறித்த அசமந்தப்போக்கையே காட்டுகின்றது.

பாதுகாப்பு வலயமாக கூறப்படுகின்ற தமிழ் மக்களின் பூர்வீக நிலத்தில் தற்போது பாதுகாப்புக்கு அப்பாற்பட்ட கட்டுமானப்பணிகளும் திட்டமிடப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அவற்றை ஆராயும்போது பாதுகாப்புக் காரணம் கூறப்பட்டது. நிலங்களை அபகரிப்பதற்காகவே அன்றி அங்கு வேறு நோக்கங்கள் புதைந்திருக்கின்றன.

6381 ஏக்கர் நிலப்பரப்பில், 'தளஸ்வன' எனும் சுற்றுலா விடுதி அமைப்பதற்காக 16 ஏக்கர் காணியும், கோல்ப் கிளப் மற்றும் மைதானம் அமைப்பதற்காக 775 ஏக்கர் காணியும், பயிற்சி பள்ளி அமைப்பதற்காக 29 ஏக்கர் காணியும், பொருளாதார மையம் அமைப்பதற்காக 52 ஏக்கர் காணியும், படையினருக்கான மெரிட் குவாட்டர்ஸ் அமைப்பதற்காக 138 ஏக்கர் காணியும், விமானப்படையினரின் விடுமுறை விடுதி மற்றும் உணவகங்கள் தொகுகளை அமைப்பதற்காக 1 ஏக்கர் காணியும் இதுவரை ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எஞ்சிய காணிகளிலும் ஏதாவது காரணங்களின் பெயரால் தம்வசமே வைத்துக் கொள்ளவே திட்டங்கள் தீட்டப்படலாம். இவை அரச நிலங்களாக இருந்தால் பரவாயில்லை. தமிழ் மக்களின் உரித்துடைய காணிகள் அதில் எப்படி இவ்வாறு அநாமதேயத் திட்டங்களை செயற்படுத்த முடியும் என்பதே தமிழ் மக்களின் கேள்வியாக உள்ளது.

### தற்போதைய மீள்குடியேற்றம்

இதற்கிடையே பலாலியின் வடக்கேயும், கிழக்கேயும் சுமார் 350 ஏக்கர் காணிகளை மக்களுக்கு வழங்க படையினர் இணக்கம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

மயிலிட்டி, தையிட்டியைச் சேர்ந்தவர்களை பலாலி வடக்கு கிராமசேவகர் பிரிவு ஜெ254, பலாலி கிழக்கு கி.மா பிரிவான ஜெ.253 பிரிவுகளிலுள்ள தனியார் காணியில் மல்லாகம், கோணாப்புலம், முகாம்களில் தங்கியிருந்த வலி.வடக்கு பகுதியைச் சேர்ந்த 240 குடும்பங்களையும் குடியேற்றுவதற்கு படையினரால் எடுக்கப்படும் நடவடிக்கையை குறிப்பிட்ட காணிகளின் உரிமையானவர்கள் எதிர்த்துவருகின்றனர்.

பலாலி வடக்கு ஜெ.254 கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 440 குடும்பங்களைச் சேர்ந்த 1687 பேரும் பலாலி கிழக்கை ஜெ.253 கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 475 குடும்பங்களைச் சேர்ந்த 1837 பேரும் தம்மை தமது சொந்த காணியில் குடியேற்றுமாறு 2011 ஆண்டிலிருந்தே கோரி வருகின்றனர்.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்...)

மதியூகி





கஷ்ரப்படுறனெண்டது உங்களுக்குத் தெரியுமெல்ல....

அவனை அணைத்து அழுதான் அபிரா.

நீங்க போங்கோ....! அப்பா வரட்டுமன். எல்லாம் சொல்லுவன்...!

அவளை உதறிக் கொண்டு முற்றத்தில் போயிருந்து அழுதான்.

சரி நீங்க போங்க தம்பி, அம்மா செத்துப்போறன்...!

வாசல்வரை அழுது கொண்டு போனவளை

சித்தி பிள்ளைக்கு புதுவருசத்துக்கு உடுப்பு வாங்கச் சொல்லி காசனுப்பினவ.... நாங்க நாளைக்கு கடைக்குப் போய் புதுவருசத்துக்கு உடுப்பு வாங்குவமென்ன...

அவனது அப்போதைய கதையை மாற்ற புதுவருடத்தை ஞாபகப்படுத்தினாள். புதுவருடம் பற்றிச்சொன்னதும் ஓடிப்போய் தோளில் கட்டி முத்தமிட்டான் மகிழன்.

என்ரை செல்லம்...!

அபிராவும் அவனைக் கட்டி முத்தமிட்டாள்.

தம்பி போய் விளையாடுங்கோ! அம்மா சமைச்சிட்டுக் கூப்பிடுறன்...

✣ ✣ ✣ ✣

வெறுமையான தேங்காய்ச் சிரட்டை

# நம்பிக்கையோடு கழியும் நாழிகைகள்!

அம்மா....!

தர்சன் மாமா, சுகன் மாவெல்லாம் தடுப்பிலயிருந்து வந்திட்டாங்களாம்....!

ஏனம்மா எங்கடை அப்பாவை கூட்டியர நீங்கள் போறீங்களில்லை....!

இன்று முழுவதும் மகிழன் அபிராவை இப்படித்தான். தொல்லைப் படுத்திக் கொண்டிருந்தான்.

மகன் அம்மாட்டைக் காசில்லை.... அதான் அப்பாவைக் கூட்டியரப் போகேலா....!

தாயின் சமாதானத்தில் அமைதியடை யாதவன் மேசையில் இருந்த கொப்பி புத்தகங்களை நிலத்தில் எறிந்தான்.

கன்னத்தைப் பொத்தி அறைந்தாள் அபிரா. என்னடா....! என்ன வேணுமிப்ப...!

பொறுமையின் எல்லை கடந்தநிலையில் அபிராவின் கைகள் அவனைத் தாக்கின.

அடியின் நோவில் அவன் நீண்ட நேரம் அழுதுகொண்டேயிருந்தான். எப்போதும் போலன்றிய அவனது அடம்பிடித்தல் இன்று எல்லைமீறியதும் அவளது அடியையும் நினைக்க அவளுக்கும் அழுகை வந்தது.

மகன் அம்மா எவ்வளவு

ஓடிப்போய் கையில் பிடித்தான்.

இல்லம்மா நான் கோவிக்கேல்ல... வாங்கம்மா....!

அவளைப்பிடித்து இழுத்து வீட்டிற்குள் கொண்டு போனான். அத்தோடு அம்மாவுக்கும் மகனுக்குமான கோபம் முடிந்து நிலைமை வழமைக்குத் திரும்பியது.

முற்றத்தில் நின்ற வாழையொன்று குலைபோட்டிருந்தது. வாழைப்பொத்தியை வெட்டியெடுத்தாள். இன்றைய சோற்றுக்கு வாழைப்பொத்தி வறையே இன்றைய கறி. அபிரா சமைக்கத் தொடங்க அவளது மகிழன் வெங்காயம் உரித்துக் கொண்டிருந்தான்.

அம்மா....!

என்ன மகன்.....! சித்தி அப்பாவைக் கூட்டிவர காசுதரமாட்டாவோ...?

களையும் உரித்துப்போட்ட வாழைப் பொத்தித் தோலையும் எடுத்துக்கொண்டு முற்றத்திற்குப் போனான் மகிழன். அரிசிப்பானை கொதித்துக் கொண்டிருந்தது.

நேற்றுப்போல எல்லாத் துயரங்களும் ஒன்றும் மறக்காமல் நெஞ்சுக்குள் கனலாக எரிந்துகொண்டிருந்தது. காணாமற்போன கணவன் தொடங்கி கடைசிக்கள முடிவுவரை எல்லாமே தலையைக் குடைந்து கொண்டிருந்தது.

ஒரு போராளியாக அவள் நிமிர்ந்த காலங்களும் அவளது சாதனைகளும் போய் இப்போ சாமானியப் பெண்ணிலும் பார்க்க மோசமானவளாக காலம் அவளது வாழ்வைத் துவைத்துப் போட்டிருக்கிறது. ஒரு சமூகத்தின் மாற்றத்தின் எடுகோளாகவும் அடை யாளமாகவும் எழுதப்பட்ட பெண்ணின் மாற்றமும் ஏற்றமும் அவளையும் வைத்தே வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் எழுதப்பட்டது. இன்று அவள்?, அவளது மாற்றம்? அவளுக்கே அவள்மீது வெறுப்பாயிருந்தது.

அபிரா இன்னும் மாறுதில்லை..... அப்பிடியே இருக்குது...

ஊரில் பலர் அவளை தற்போதைய நிலைமைக்கு ஏற்ப மாறாமல் அவளே தனது வாழ்வை வதம் செய்வதாய் கதைத்துக்கொள்ளும் அளவு அவள் இன்னும் தனது எழுச்சியை இன்றும் மறக்காமல் யாருக்காகவும் மாறாமல் இருக்கிறாள் என்றது அவளது குறை யாகவே எல்லாரும் கதைப்பார்கள்.

அவளது மாற்றமின்மையே அவளது வீட்டில் வறுமையை தாராளமாக ஏற்றி வைத்திருக்கிறது என்பதும் பலரது குற்றச்சாட்டு. தன்னை வளர்த்த - வாழ்வித்தவர்களின் நினைவுகள் உள்ளவரை தனது வாழ்வு இதுதான் என்றே நினைத்துக்கொள்வாள்.

(தொடரும்...)



'இறைச்சிக் கடை' முகாமில் இருந்து கொண்டு வரப்பட்ட நால்வருக்கும் அங்கு நடந்த சித்திரவதைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றுடன் ஒப்பிடுகையில் எனக்கு நடந்த

# புலிகளின் வதை முகாமில்

வதை 87

மணியம்

**இ**ன்னொரு தடவை வேம்பிராயில் கள்ளு இறக்குபவர் இராணுவத் தோடு இரகசியமாகக் கதைத்துவிட்டு வரும் போது கைது செய்யப் பட்டதாக கதை உலாவும். இதனால் அப்பகுதி மக்கள் எந்த நேரமும் பதட்டத்துடனேயே காணப்படுவர்.

ஆனால் இந்தச் செய்திகள் பற்றி அந்தந்தப் பகுதி மக்களிடம் பின்னர் விசாரித்தால், தங்கள் பகுதியில் அப்படியான சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வேறு சில குறிப்பிட்ட பகுதிகளில் அப்படியான சம்பவங்கள் நடந்ததாகத் தாங்கள் கேள்விப்பட்டதாகவும் அவர்கள் கூறுவர். இறுதியாக பலரிடம் இருந்து கிடைக்கும் தகவல்களை வைத்துக் கூட்டிக்கழித்துப் பார்த்தால், அந்த வதந்திகளின் பிறப்பிடம் புலிகள்தான் என்பது தெரிய வரும். மக்களை எந்த நேரமும் அச்சத்தில் ஆழ்த்தி வைத்திருப் பதற்காகப் புலிகள் செய்யும் விஷமத்தனம்தான் இது.

இந்த விஷமத்தனத்துக்கு ஒரு முறை நாமும் பலியாக வேண்டி தாகிவிட்டது. யாழ். கோட்டை அடிபாடு நடந்த காலத்தில் இராணுவத்தின் 'சகடை' விமானம் யாழ். புகையிரதச் சந்தியில் போட்ட ஒரு குண்டில், அந்த இடத்தில் கூட்டமாகக் கதைத்துக்கொண்டிருந்த எனது நண்பர்கள் சிலரும் பலியானார் கள். அவர்களில் எனது அயலூ ரான உடுத்துறையைச் சேர்ந்த வரும், யாழ்.சென்ஜோனஸ் கல்லூரியில் ஆசிரியராக இருந்தவருமான எனது ஆருயிர் நண்பர் பொன்.சிவராசாவும் ஒருவர். அவர் தன்னுடன் பேராதனைப் பல்கலைக்கழகத் தில் கல்விபயின்ற யாழ்.

குருநகரைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்திருந்தாராயினும், அவர் எப்பொழுதும் தெரிவித்து வந்த விருப்பத்துக்கிணங்க அவரது இறுதிச்சடங்குகள் அவரது சொந்த ஊரான உடுத்துறையில் நடைபெற்றன.

எம்மில் சிலர் அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக சைக்கிள்களில் உடுத்துறைக்குச் சென்றுவிட்டு திரும்பிவருகையில் இரவாகிவிட்டதால், யாழ்ப்பாணம் செல்லவேண்டியவர்கள் அங்கு போக முடியாதநிலையில் நாம் தங்கியிருந்த மீசாலை வீட்டில் வந்துதங்கினர். அந்த வீட்டில் சில புதிய ஆட்கள் வந்து தங்கி இருக்கிறார்கள் எனக் கேள்விப் பட்ட உள்ளூர் புலிகள் சிலர் எம்மை விசாரணை செய்ய வந்துவிட்டார்கள். வந்தவர்களிடம் நாம் தங்கியிருந்த வீட்டுக்காரரும் நாமும் நிலைமையை விளக்கிய பின்னர் புலிகள் போய்விட்டார்கள்.

புலிகள் போனபின்பு நாம் மீசாலைச் சந்தியிலுள்ள கடை களுக்கு சில பொருட்கள் வாங்கு வதற்காகச் சென்றோம். அதற் கிடையில் புலிகள் எம்மை விசாரித்த செய்தி பல கற்பனைக் கைகால்களுடன் வேகமாகப் பரவி, நாம் தங்கியிருந்த வீட்டில் வைத்து இராணுவ உளவாளிகள் கைதுசெய்யப்பட்டிருப்பதாக வலம் வந்துகொண்டிருந்தது. இந்தச் செய்தி அடுத்த நாள்வரை அங்கு கோலோச்சிய வண்ணம் இருந்தது என்றால் பாருங்கள்!

இந்த விடயத்தில் சர்வாதிகாரி ஹிட்லருக்காக பொய்க்கு மேல் பொய்யுரைத்து வந்த அவனது பிரசார மந்திரி கோயபல்ஸ்சை யும் புலிகள் விஞ்சிவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

**பொதுமக்களை அச்சுறுத்த வதை முகாம் கைதிகளைக் காட்சிப்பொருளாக்கிய புலிகள்!**

நான் குறிப்பிட்ட வரணி

சித்திரவதைகள் குறைவு என்று தான் சொல்லவேண்டும்.

இந்த நால்வரில் வின்சன்ற், பிரகாஸ் ஆகியோர் எம்முடன் இருந்தனர். பிரகாஸ் எப்பொழுதும் அழுவதும், எதையாவது வெறுத் துப் பார்ப்பதுமாகத்தான் காலத் தைக் கழித்தார். மகேஸ்வரனும் பஸ் நடத்துநரும் அருகில் இருந்த அறையில் அடைக்கப்பட்டிருந்த படியால், அவர்கள் நிலை என்ன என அறிய முடியவில்லை. ஆனால், மகேஸ்வரன் விசாரணைக்காக வெளியே அழைத்துச் செல்லப்படுகையில் சிலவேளைகளில் என்னைக் காண்கையில், அவரது பார்வை "இப்படியாக வந்து மாட்டுப்பட்டு விட்டோமே?" என்று சொல்வது போல இருக்கும். ஆனால் அந்த பஸ் நடத்துநர் எப்பொழுதும் எதற்கும் அஞ்சாதவர்போல நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு தான் செல்வார்.

வின்சன்ற் என்பவபரைப் பொறுத்தவரையில், அவர் புலிகள் மீது கடும் கோபத்துடனும் வைராக் கியத்தியத்துடனும் இருந்தார். "இவங்கள் எங்களுக்குச் செய்த அநியாயத்துக்கு பதிலுக்குப் பதில் ஏதாவது செய்யவேண்டும்" என் பார். அவர் எல்லோரையும் நம்பிக்கதைக்கமாட்டார். என்னுடனும் வேறு ஓரிருவருடனும் மட்டுமே இரகசியமாகக் கதைப் பார். அதற்கும் அந்தப் புதிதாக வந்த புலிகளின் முக்கியமான நபரால் இடையூறு வந்துவிட்டது. அந்த நபரைச் சுலபமாக அழைப் பதற்காக இப்போதைக்கு அவரது பெயரை 'வரதன்' என வைத்துக் கொள்வோம். ஆனால் சூழ்நிலை சரியாக அமைந்து வாய்ப்புக் கிடைத்தவேளையில் வின்சன்ற் என்னுடன் கதைக்கும் போதெல் லாம், "சந்தர்ப்பம் கிடைத்தால் பண்ணைக் கடலைக் கடந்து மண்டைதீவில் உள்ள ஆமியிடம் சென்று பாதுகாப்புக் கோர

வேண்டும்" எனச் சொல்வார்.

சாதாரணமான மக்களை தமது கொடூரமான சித்திரவதைகள் புலிகள்மூலம் எப்படி இராணு வத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்கிறார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம். இன்னொரு உதாரணத்தையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். சுன்னாகம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த சோதி என்றொருவர் எம்முடன் புலிகளின் வதை முகாமில் ஒன்றாக இருந்தார். ஏதோ ஒரு மாற்று இயக்கத்துடன் தொடர்புடைய வர் என்பதற்காக கைதுசெய்யப் பட்டு கடுமையான சித்திரவதைக் குப் பிறகு எம்முடன் அடைக்கப் பட்டிருந்தார். சித்திரவதை காரண மாகச் சரியாக நடக்கமுடியாத நிலையில் இருந்தார். அவர் ஒருமுறை என்னுடன் கதைக்கும் போது, "இவங்களுடைய சித்திர வதையை அனுபவிப்பதைக் காட்டிலும், இவங்கள் எங்களைக் கைதுசெய்யவரும் நேரங்களில் இவங்கடை கையிலை அகப்படா மல் தப்புவதற்கு தற்கொலை செய்வதற்காக மடியிலை எப்பவும் ஒரு பொலிடோல் (நஞ்சு) போத்திலை வைச்சிருக்க வேணும்"என்று சொன்னார்.

உண்மைதான். புலிகளின் ஆட்சியில் ஒருவர் வாழ்வதானால், அந்தச் சோதி சொல்வதுபோல, ஒவ்வொருவரும் ஒரு நஞ்சுப் போத்தலுடன் வாழ்வதுதான் புத்திசாலித்தனமாக இருக்கும். எமது வதைமுகாமுக்குள்

இருப்பவர்கள் மத்தியில் ஒரு நகைச்சுவை கதை உலாவியது. அதாவது, "புலிகளின் 'தமிழீழத்' தில் உள்ள ஒவ்வொருவரும் என்றாவது ஒருநாள், ஏதாவது ஒரு காரணத்துக்காகப் புலிகளின் வதை முகாம் வாழ்க்கையைக் கட்டாயமாக அனுபவித்துத்தான் ஆகவேண்டும். எனவே தள்ளாத வயதில் புலிகளின் வதை முகாமுக்கு வந்தால், புலிகள் செய்யும் உபசாரங் களைத் தாங்கிக்கொள்ள இயலாது. எனவே இளமையாக இருக்கும்போதே எங்கள் முறையை புலிகளது வதை முகாமில் கழித்துவிடுவது நல்லது" எனச் சொல்வார்கள்.

அந்த நால்வரில் ஒருவரான வின்சன்ற் சைக்கிள் கடை வைத்திருந்தவர் என்றபடியால், புலிகள் தாம் புதிதாக வாங்கிய (அவரைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத்தான் வாங் கினார்களோ தெரியாது) சுமார் 20 சைக்கிள்களை அவரைக்கொண்டு கழுவிப் பூட்டுவித்தார்கள். வதை முகாமுக்கு வெளியே இருந்த விறாந்தையில் வைத்து அவரைக்கொண்டு அந்த வேலையைச் செய்வித்தார்கள். அந்த நேரங்களில் உள்ளே உள்ள வதைமுகாம் கைதிகளுக்கு வழங்கப்படாத தேநீரைக்கூட புலிகள் அவருக்கு வழங்கியதாக அவர் சொன்னார். (தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம் 76

பா.ராகவன்

**1840 இல்** ஒரு சம்பவம் நடந்தது. டெமஸ்கஸில் ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் படுகொலை செய்யப்பட்டார். கொலை செய்தவர்கள் யூதர்கள்தான் என்று ஊர் முழுக்கப் பேசினார்கள். ரஷ்யாவில் நடந்தது மாதிரியேதான்.

யூதர்கள்தான் செய்தார்களா என்று யாருக்கும் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளக்கூடத் தோன்றவில்லை. போதாத குறைக்கு அந்த கிருத்தவப் பாதிரியாருடன் அவரது முஸ்லிம் உதவியாளர் ஒருவரும் சேர்த்துக் கொல்லப்பட்டிருந்தார்கள்.

ஆகவே மிகவும் கோபமுற்ற அராபியர்கள், டெமஸ்கஸ் நகரில் இருந்த யூதர்களின் தேவாலயத்தை முதலில் இடித்தார்கள். பிறகு யூதக் குடியிருப்புகள் தாக்குதலுக்கு உள்ளாயின. ஓரிரு தினங்களில் கொலைப்பழியைத் தாண்டி இன்னொரு வதந்தி மிகப்பலமாக உலவத் தொடங்கியது.

கொலை செய்யப்பட்ட பாதிரியார் மற்றும் அவரது உதவியாளரின் இரத்தத்தை எடுத்துவந்து, யூதர்கள் தங்கள் ரொட்டியில் தோய்த்துச் சாப்பிட்டார்கள் என்பதே அது!

போதாது?

அரசுத்தரப்பில் முதலில் யூத இனத்தைச் சேர்ந்த ஒரு முடி திருத்துபவரைக் கைதுசெய்தார்கள். சிறைச்சாலையில் மிகக் கடுமையான சித்திரவதைகளை அவர் எதிர்கொள்ள நேர்ந்தது. இறுதியில் அவர் அளித்த வாக்குமூலத்தின்படி வேறு பலரைக் கைதுசெய்தார்கள். அப்படிக் கைதானோரில் இரண்டு பேர் சிறைச்சாலை சித்திரவதையிலேயே இறந்துபோனார்கள். இன்னொருவர் முஸ்லிமாக மாறி உயிர்பிழைத்தார்.

வழக்கு தொடர்பாக இவையெல்லாம் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்றபோதும் பொதுமக்கள் தரப்பில் தனிப்பட்ட 'நடவடிக்கைகள்' தொடரவே செய்தன. இந்த யூத எதிர்ப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரமடையத் தொடங்கியபோது விஷயம் கேள்விப்பட்ட பல ஐரோப்பிய தேசங்களில் துருக்கியப் பேரரசுக்கு எதிரான கண்டனத் தீர்மானங்கள் நிறைவேறின. ஆங்காங்கே அடையாள எதிர்ப்புப் பேரணிகள், ஊர்வலங்களை யூதர்கள் நடத்தினார்கள்.

எந்த ஐரோப்பா யூதர்களை ஓட ஓட விரட்டியதோ, அதே ஐரோப்பா இப்போது துருக்கி சுல்தானுக்கு எதிராகக் குரல் கொடுத்தது! அப்படிக் குரல் கொடுத்தவர்களில் கிருத்தவர்களும் இருந்தார்கள் என்பதுதான் வியப்பின் உச்சம். இத்தனைக்கும் ஐரோப்பாவில் அப்போது யூத எதிர்ப்பு மறைந்துவிட்டதா, குறைந்துவிட்டதா என்றால் அதுவுமில்லை. ஆனால் சற்றுக்கூட எதிர்பாராத ஓர் இடத்திலிருந்து அப்படியொரு உக்கிரமான யூத எதிர்ப்பு இயக்கம் தோன்றியபோது ஒட்டுமொத்த உலகமே வியப்படைந்தது உண்மை.

இந்த விஷயம் இரண்டு உண்மைகளை நமக்குத் தெரிவிக்கின்றன. முதலாவது, காலம்காலமாக மேற்கிந்திய உலகம்முழுவதும் யூதர்களை விரட்டியடித்துக் கொண்டிருந்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை முஸ்லிம் உலகம் அப்படியொரு நடவடிக்கையை ஒருபோதும் மேற்கொண்டதில்லை என்பது. இரண்டாவது. யூதர்கள் விஷயத்தில் அப்படியொரு பொறுமையைக் கடைப்பிடித்த முஸ்லிம்களையே கொதித்தெழச் செய்யும் அளவுக்கு அப்போது யூதர்கள் அங்கே தொடர்ந்து பல தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது.

முஸ்லிம்களின் சரித்திரத்தில் அவர்கள் மிக அதிகமாகக் கட்டாய மதமாற்றத்தை திணித்தும் இந்தக் காலகட்டத்தில் யூதர்கள் மீதான உச்சபட்ச வெறுப்பில், அவர்களுக்கு அளிக்கக்கூடிய அதிகபட்ச தண்டனையாகவே இதனை அவர்கள் மேற்கொண்டதாகக் கருத வேண்டியுள்ளது. காரணம்,

யூதர்கள் அளவுக்கு இஸ்லாமியத்துக்கு விரோதமான கருத்துக்களைத் தொடர்ந்து பரப்பியவர்கள் கிடையாது. முகம்மது நபியைப் பற்றிய பல பொய்யான பிரசாரங்களை அவர்கள் தம் சரித்திரம் முழுவதும் மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் முஸ்லிம்களை மட்டம்தட்டிப் பேசுவது அவர்களது வழக்கம். வம்புச் சண்டை வேண்டாம் என்று சும்மா இருந்தவர் களால் ஒரு கட்டத்துக்குமேல் பொறுமைகாக்க இயலாமல் போனது துரதிர்ஷ்டமே.

தோதாக யூத நிலவங்கிகள் பாலஸ்தீனில் முஸ்லிம்களின் நிலங்களை கபளீகரம் செய்து கொண்டிருக்க, ஆபிரிக்காவில் இருந்தும் அல்ஜீரியாவிலிருந்தும் இன்னும் பல எதிர்பாராத இடங்களில் இருந்தெல்லாம் யூதர்கள் அங்கே வந்து சேர்ந்தவண்ணம் இருந்தார்கள்.

முதல்முறையாக, தாம் ஏமாற்றப் படுகிறோம் என்பதை அரேபிய முஸ்லிம்கள் உணரத் தொடங்கிய போது கிட்டத்தட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு முடியும் தறுவாயை நெருங்கிவிட்டிருந்தது. ஆங்காங்கே முஸ்லிம்கள் இது குறித்துக் கலந்து பேசத்தொடங்கிய அதேசமயம் மிகத்தயாராக வலுவான ஆட்பலம் மற்றும் பொருளாதார பலங்களுடன் யூதர்களின் ஜியோனிச இயக்கம் பரவ ஆரம்பித்துவிட்டது. யூத தேசிய நிதி என்றொரு பெயரில் உலகெங்கிலும் இருந்து யூதர்கள் ஜியோனிச இயக்கத்துக்காக நிதி திரட்டியளிக்க ஆரம்பித்தார்கள்.



எப்படியாவது பாலஸ்தீனின் அத்தனை நிலத்தையும் வாங்கிவிடவேண்டும். அந்த இடத்தை ஒரு தனிநாடாக அறிவித்து முற்றுமுழுவதும் யூதர்களின் மண்ணாக அதிகாரபூர்வமாக அறிவித்துவிடவேண்டும். இந்த முயற்சிக்குத் தடையாக எந்தச் சக்தி வந்தாலும் எதிர்ப்பது எல்லா விதங்களிலும் எதிர்ப்பது சாத்தியமான வழிகளில் எல்லாம் எதிர்ப்புகளை முடக்கப்பார்ப்பது. பணம் தந்தால் காரியம் நடக்குமா? எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமாகவே கொடுப்பது. கணக்கு வழக்கில்லாமல் பணம்கொடுப்பது. ஆட்சியாளர்களுக்குக் கொடுத்தால் போதாது, ஆங்காங்கே சில தனிநபர்களுக்கும் தரவேண்டியிருக்கும் என்றாலும் பரவாயில்லை. எத்தனை செலவழித்தாவது பாலஸ்தீனைப் பெற்றே தீர்வது என்கிற வெறியில் இருந்தார்கள் அவர்கள்.

இந்த முயற்சிக்கு பாலஸ்தீனில் மட்டுமல்லாமல் இங்கிலாந்து உள்ளிட்ட பல மேலைநாடுகளிலும் அரசின் மேல்மட்டங்களில் இருந்த அதிகாரிகளை யூதர்கள் மிகச் சாமர்த்தியமாகத் துணைக்குச் சேர்த்துக்கொண்டார்கள்: தேவைப்படும்போது உங்கள் உதவியைக் கேட்டுப்பெறுவோம். ஒரு வேளை உதவி தேவைப்படாமலே போனாலும் பரவாயில்லை. ஆனாலும் எங்கள் அன்பின் அடையாளமாக உங்களுக்கு மாதந்தோறும் இத்தனை தொகையை அளிக்கிறோம். மறுக்காமல் பெற்றுக் கொள்ளுங்கள் என்றொரு விநோத வேண்டுகோளை முன்வைத்து தொடர்ந்து இலஞ்சப் பணம் அவர்களுக்குச் சென்றுசேர ஏற்பாடும் செய்தார்கள்.

(தொடரும்...)

---

**ஓர்** ஆணோ, பெண்ணோ உரிய காலம் வந்ததும் திருமணம் முடித்துக்கொள்வது அவர்களுக்கும் நல்லது, உலகத்திற்கும் நல்லது என்றுதான் கூறுவேன்.

"மனைவிமார்கள் உங்களுக்கு ஆடை போன்றவர்கள், நீங்கள் அவர்களுக்கு ஆடை போன்றவர்கள் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது", "மனிதன் தனியாக வாழ்வது நல்லதல்ல, எனவே அவனுக்கு வாழ்க்கைத் துணைவியை உண்டு பண்ணுகிறான்." என்று பழைய ஏற்பாட்டில் இறைவன் கூறுகின்றான். "திருமணம் என்பது சொர்க்கத்தின் வாயில்" என்று கூறப்படுகிறது, ஆம், மனிதனைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் வாயில் திருமணம்தான். மாட்டின் லூதர்கூட "பெண்ணின்றித் திருமணமும் இல்லை, திருமணம் இன்றி உலகமும் இல்லை" என்று எடுத்துரைத்தார்.

திருமணம் பற்றி வேறுபட்ட கருத்துக்கள் நிலவியபோதும் அது ஆணும் பெண்ணும் சேர்ந்து தங்களின் உடல் இச்சையைத் தீர்த்துக்கொள்வதற்காக மட்டுமல்லாது, குழந்தைகளைப் பெற்று ஒரு குடும்பத்தை உண்டுபண்ணுவதற்காக, சமூகத்தின் ஆதரவோடு செய்துகொள்ளும் இன்ப இணைப்பேயாகும். தங்களின் குழந்தைகளுக்கும் சமூகத்திற்கும் சில கடமைகளை ஆற்றவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மேல்நாட்டில் ஓர் ஆணும் பெண்ணும் தங்களுக்கேற்றவரை தாங்களே தேர்ந்தெடுத்து மணம் முடித்துக்கொள்ளும் வழக்கம் நிலவிவருகிறது. அவர்களின் திருமணம் பற்றிய வரையில் அவர்களின் தாய், தந்தையர் முக்கிய பாகம் வகிப்பதில்லை. அவர்கள் தங்களின் மக்களால் அணுகப் பெறுவதெல்லாம் திருமணச் செலவுக்கான பணவசதி செய்து கொள்வதற்காவேயன்றித் தங்களின் திருமணம் பற்றி அவர்களின் இணக்கத்தைப் பெறுவதற்காக அல்ல! தாய், தந்தையரும் இளம் காதலர்கள் இருவரும் மனம் ஒன்றுபட்டு மணம் முடித்துக்கொள்ளத் தீர்மானித்துவிட்டால் அதுவே தங்களுக்கு மகிழ்ச்சியை வழங்கக்கூடியது என்று எண்ணுகிறார்கள். இவ்வாறு ஆணும், பெண்ணும் தங்களுக்கு ஏற்ற ஒருவரைத் தம் வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுத்துக் கொள்வதை எவ்வளவுதான் நல்லது என்று கூறியபோதிலும் அதனை நம்நாட்டில் சிலர் ஆதரித்தபோதிலும் அதிலும் தீமைகள் இல்லாமல் இல்லை. ஆணின் மோசடிகளால் பெண் கற்பை இழக்கவேண்டிய பேரபாயம் ஏற்படுவதும், பெண்ணின் துரோகத்தினால் ஆண் மனமுடைந்து தற்கொலை செய்வது பற்றியும் ஏற்கனவே எச்சரிக்கை செய்திருப்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

ஓர் ஆணோ, ஓர் பெண்ணோ ஒருவரை ஒருவர் நேசிக்கும் போது அவர்களுக்கு மற்றவர்களிடம் உள்ள குறைபாடுகள் தெரிவதில்லை. எனவே அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு காதல் வலையில் சிக்கி மணம்முடித்த பின்புதான் விழித்தெழுகின்றார்கள். மற்றவர்களுடைய நோய்கள், தீய பண்புகள் ஆகியவை எல்லாம் பின்னர்தான் அவர்களுக்கு தெரியவருகின்றன. அதன்பின் வருந்தி நிற்கிறார்கள். வெறுப்பும் விரோதமும் ஏற்பட்டு மனம் முறிவு ஏற்படுகிறது. மனம்முறிவு மணமுறிவில் முடித்துவிடுகிறது. காதல் திருமணம் சிறந்தது என்று வாதாடுபவர்கள் இதில் பொதிந்துள்ள ஆழமான கருத்தை சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாகரிகத்தின் உச்சியிலிருந்து கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நினைக்கும் இளம் தலைமுறையிடம் புரிந்துணர்வுடன் கூடிய காதல் தோன்றுவதற்கு வழியில்லை. விதிவிலக்கென்பது வெறும் சிலவேதான்!

நம் நாட்டில் ஒரு பெண்ணோ, ஆணோ வயது வரப்பெற்றதும் அவர்களுக்கு மணம் முடித்துவைக்கும் மாபெரும் பொறுப்பு தாய், தந்தையருக்கு ஏற்பட்டுவிடுகிறது. அதிலும் பெண்ணை பெற்றவர்களின் பாடோ அவளைப் பெற்றவர்களுக்கு உறக்கமின்மையில் இருப்பிடமாக விளங்குகிறாள். அவளை அவர்கள் பாதுகாத்து ஒரு கணவனிடம் ஒப்படைக்கும்வரை அவர்கள் கண்ணிமைப்பதற்கு வழியில்லை. அவள் அறிவற்ற முறையில் நடந்து தனக்கே தான் தீங்கு விளைவித்துக் கொள்ளாமலும் பிற ஆடவர்களால் அவளுக்கு தீமை ஏற்படாமலும் பாதுகாக்கவேண்டிய மாபெரும் பொறுப்பு தாய், தந்தையருக்கு ஏற்பட்டுவிடுகிறது.


## திருமண வாழ்வில் நுழையும் முன்...



(தொடரும்)

சொல்லின் செல்வர்
இரா.செல்வவழிவேல்

# சவால்களின் நாயகன்
# அற்புதன்!





**எம்.சந்திரகுமார்**
(பாராளுமன்ற உறுப்பினர், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர்)

**ஊட**கங்கள் பற்றியும் ஊடகவியலாளர்கள் பற்றியும் அதிகமாக பிரசாபிக்கப்படும் நாட்கள் இவை. அரசியல் பிரச்சினைகள், ஊடக நெருக்கடிகளாகவும், ஊடக அரசியல் நெருக்கடிகளாகவும் உருவாகியிருப்பதன் விளைவுகள் இன்று பாரதூரமாகியுள்ளன. ஜனநாயக தளத்தில் இருந்து இயங்கவேண்டிய ஊடகங்கள் அதைவிட்டு விலகி இயங்கும்போது பல வகையான நெருக்கடிகள் ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் ஏற்படுகின்றன. இது இந்த எல்லையைக் கடந்து பொது மக்களுடைய வாழ்க்கையையும், எதிர்காலத்தையும்கூட பாழடிக்கிறது.

இலங்கையில் ஊடக சுதந்திரம் பாதிப்புக்குள்ளாகி ஏறக்குறைய கால் நூற்றாண்டாகிறது. யுத்தமும் அரசியல் நெருக்கடியும் ஊடக சுதந்திரத்தை நெருக்கடிக்குள்ளாக்கின. இதனால் கடந்த 25 ஆண்டுகள் பல ஆளுமைகளை ஊடகத்துறை இழந்திருக்கிறது. அதில் ஒருவர் அற்புதன். தினமுரசு பத்திரிகையின் ஸ்தாபகராகவும் பிரதம ஆசிரியராகவும் இருந்து ஊடகத்துறையிலும் தமிழ் பத்திரிகை உலகிலும் பெரும் சாதனையாளராக மாறியவர் அற்புதன்.

ஒரு அரசியல் போராளியாக தனது பொதுவாழ்வை ஆரம்பித்த அற்புதன், மிகச் சிறந்த ஊடகவியலாளராக மாறியது ஒரு அதிசயம்தான். ஆனால் ஈழப் போராட்டத்தில் இத்தகைய ஆற்றல் உள்ளவர்கள் மேலும் இருந்துள்ளனர் என்றபோதும் அற்புதனுடைய ஆளுமையும், ஆற்றலும் ஏனையோரைவிட துலக்கமானது.

அற்புதனுடைய் துலக்கமான அடையாளத்திற்கு காரணங்கள் பல. முக்கியமானது அவரின் நினைவாற்றல். எந்த சிறு சம்பவங்களையும் மிகச்சரியாக, துல்லியமாக நினைவில் பதிந்து வைத்திருப்பார் அற்புதன். மட்டுமல்ல, தேவையானபோது அந்த நினைவை மீட்டு அதை சுவாரஷ்யமாக எழுத்தில் கொண்டுவருவதில் வல்லவர். இதற்கு அவருக்கு துணையாக இருந்தது, அவருடைய எழுத்தாற்றல். யாரையும் வசீகரிக்க அல்லது கவர்ந்திழுக்கக்கூடிய எழுத்தாற்றலும், வெளிப்பாட்டுத்திறனும் அற்புதனுக்கு இருந்தன. இதை அவர் உருவாக்கிக்கொண்டது அவருடைய வாசிப்பினால்.

அற்புதன் ஒரு மிகச் சிறந்த வாசிப்பாளர். அரசியல் போராளியாக அவர் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியில் இணைந்திருந்த காலத்திலேயே வாசிப்பினாலும், எழுத்தினாலும், உரையாடலினாலும் தன்னை சிறப்பாக அடையாளம் காட்டியவர். இதன்காரணமாக தொடக்கத்தில் அவர் போராளிகளுக்கான அரசியல் வகுப்புகளை எடுக்கும் ஒருவராக இருந்தார். பின்னர் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் பிரசுரங்களில் செல்வாக்குச் செலுத்தினார். இந்த அனுபவங்கள் எல்லாம் பின்னாளில் அவரை ஒரு சிறந்த ஊடகவியலாளராகவும், அரசியலாளராகவும் வளர்த்தெடுத்தன.

இதனால் அற்புதன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை உருவாக்கிய காலத்தில் அதனுடைய அரசியல் வெளிப்பாடுகளில் முக்கியமான பங்கை வகித்தார். சமகாலத்தில் அரசியல் மற்றும் சமூக வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டு ஜனநாயக அடிப்படையிலான ஊடகத்துறையிலும் செயற்பட்டார்.

அற்புதனின் ஊடகச் செயற்பாடு இதில் முக்கியமானது. தினமுரசு பத்திரிகையை அவர்முற்றிலும் வித்தியாசமான முறையில் வடிவமைத்து உருவாக்கினார். அதுவரை இல்லாத ஒரு ஊடக முறையை பயன்படுத்தி புதியதொரு பத்திரிகையை மக்களுக்கு கொடுத்தார்.

தினமுரசை ஆரம்பித்த காலகட்டம் மிக முக்கிய கவனத்திற்குரியது. அது யுத்தம் மிகத் தீவிரமடைந்திருந்த காலகட்டம். கரணம் தப்பினால் மரணம் என அரசியல் மற்றும் ஊடகத்துறை பெரும் சவால்களை எதிர்கொண்டிருந்தது. உண்மையான செய்திகளையும், கருத்துக்களையும், தகவல்களையும் வழங்குவதில் ஊடகங்களும் ஊடகத்துறையினரும் பெரும் சவால்களை

> **இன்று தமிழ் ஊடக உலகம் பெரும்பாலும் வதந்திகளால் நிரப்பப்படுகிறது. அல்லது திட்டமிடப்பட்ட பொய்களால் கட்டமைக்கப்படுகிறது. அற்புதன் இன்று இருந்திருந்தால் இந்த பொய்யுரைகளுக்கு எல்லாம் தன் ஆளுமையினால் மிகப்பெரிய சவாலை முன்னிறுத்தியிருப்பார். நிரம்பியிருக்கும் இருளை அகற்றுவதற்கு பிரகாசமாக ஒளிரும் விளக்குபோல அவர் இந்த இருள் உலகத்தை தன் சுடரினால் ஒளியூட்டியிருப்பார். மக்களை ஒரு புதிய திசைக்கு அழைத்துச் சென்றிருப்பார்.**

எதிர்கொள்ள

எதிர்கொள்ள வேண்டியிருநதது. இந்த இடத்தில் அற்புதன் ஒரு அரசியல் பாரம்பரிய முறையை ஊடகவியலாளர் என்ற காரணத்தினால் மிகத் துணிச்சலாக தன்னுடைய பத்திரிகையின் ஊடாக மக்களுக்கான செய்திகளையும் கருத்துக்களையும் தெரிவித்தார். மற்றவர்கள் அடக்கி வாசிக்க வாசிக்க அற்புதனோ எல்லாவற்றையும் உடைத்தும் திறந்தும் காட்டினார்.

அற்புதனுடைய இந்த செயல்கள் மக்களிடம் ஒரு அற்புதமாகவே கவனிக்கப்பட்டது. தினமுரசு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பிரதிகளை விற்கும் அளவுக்கு மிகப் பரபரப்பான விற்பனை உச்சத்தை தொட்டது. இவ்வளவுக்கும் தினமுரசை சில பிரதேசங்களில் தடைசெய்த நிலைமையும் உண்டு. குறிப்பாக வன்னிப் பகுதியிலும் மட்டக்களப்பு படுவான்கரையிலும், வாகரையிலும் அன்று தினமுரசு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை.

ஆனால் அற்புதன் அதை ஒரு கட்டத்தில் மாற்றினார். தினமுரசைத் தடுத்த விடுதலைப் புலிகளே அதனுடைய வன்னிப் பகுதிக்கான முகவர்களாக மாறினார்கள்.

இதற்கு முக்கிய காரணம், தினமுரசில் அற்புதன் எழுதிய முன்னோட்டங்கள். அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பல எதிர்வுகூறல்களை அற்புதன் எழுதினார். அது போர்க்காலம் என்றபடியால் அரசியல் மற்றும் இராணுவ எதிர்வுகூறல்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் இருந்தது. இந்த எதிர்வு கூறல்களை தன்னுடைய கூர்மையான அவதானிப்பினாலும் அரசியல் மற்றும் போராட்ட அனுபவங்களினாலும் செய்தார் அற்புதன். நுண்மையான அவதானிப்புத் திறனும் பல்வேறு தரப்பின் மையங்களை ஊடுருவித் தொடர்புகொள்ளும் ஆற்றலும் பன்மொழியறிவும் இதற்கான சாத்தியங்களை அற்புதனுக்கு வழங்கின. இதனால், அன்று விடுதலைப் புலிகளும் அரசாங்கத்தரப்பும் தினமுரசுக்காகக் காத்திருந்தன. ஒரு ஆற்றலாளனால் பல மையங்களைத்தன்னை நோக்கி இழுக்கமுடியும் என்பதற்கு அற்புதன் நல்ல உதாரணம்.

ஆனால், அற்புதன் தனியே அரசியல் விவகாரங்களோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கப்பால் பல துறைகளிலும் கவனம் செலுத்தினார்.

இதில் குறிப்பிடத்தக்கது, அவருடைய இலக்கியப் பக்கங்கள். சங்க இலக்கியத்திலும், நவீன இலக்கியத்திலும் சமநிலைப்பட்ட பக்கங்களை வழங்கினார் அற்புதன். அற்புதனின் இந்த முறைமையையும், திறனையும் தமிழகப் படைப்பாளிகளே வியந்தனர். புலம்பெயர் சூழலில் இந்தப் பகுதிக்கு தனியான கவனம் கிடைத்தது.

பொதுவாக அனைத்து தரப்பினருக்கும் ஏற்ற மாதிரி தினமுரசில் ஆக்கங்களை எழுதிக் குவித்தார். இந்த வகையில்தான் அற்புதனுடைய முக்கியத்துவத்தை நாம் உணரவேண்டும். அவர் சாதாரண ஊடகவியலாளர் அல்ல. மிகத் துணிச்சலான ஒரு ஊடகவியலாளர். அத்துடன் ஒரு மிகச் சிறந்த எழுத்தாளரும்கூட. அதேவேளை அவர் ஒரு அரசியல் போராளியாகவும் இருந்தார்.

இந்த வெவ்வேறு வகைப்பட்ட கலவைகள் அற்புதனின் ஊடகச் செயற்பாட்டை வித்தியாசமாக்கி நூதனமாக்கின. இந்த இடத்தில் நாம் மேலும் சில விடயங்களை நோக்கவேண்டும்.



*அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அற்புதன் ஆகியோருடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் அமர்ந்திருக்கின்றனர்.*

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அனுபவத்துடன் ஊடகத்துறைக்கு வந்த தராகி சிவராம், என்.எல்.எவ்.ரியின் பின்புலத்தோடு வந்த ரயாகரன் போன்றவர்களுக்கும் அரசியல் மற்றும் பல்துறை வாசிப்பு அனுபவம் இருந்தமையே அவர்களை குறிப்பிடக்கூடியளவுக்கு அடையாளப்படுத்தியது. ஆனால் இவர்கள் எல்லோரையும்விட அற்புதன் மிகமிக உச்சநிலையில் நின்று விளங்கும் ஒருவராக இருந்தார். அதாவது நட்சத்திர ஸ்தானத்தில் இருந்தார்.

ஒரு ஊடகவியலாளராக, விடுதலைப் போராளியாக, பாராளுமன்ற உறுப்பினராக, பத்திரிகை ஆசிரியராக, ஜனநாயக செயற்பாட்டாளராக என பன்முகம் கொண்ட ஒரு ஆளுமை நம் சமகாலத்தில் அற்புதனைத் தவிர வேறில்லை. அற்புதனுடன் மிக நீண்டகாலமாக நெருங்கி தோழமையோடு பழகியவன், பணியாற்றியவன், பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தவன் என்றவகையில் அவருடைய ஆளுமை குறித்து நான் நேரில் கண்டறிந்து வியந்திருக்கிறேன்.

மிகப்பெரிய ஆற்றல் வாய்ந்த ஒருவரோடு வாழக்கிடைத்த சந்தர்ப்பங்கள் மறக்க முடியாதவை. கடின உழைப்பும், தகவல்களைப் பெறுவதில் யாரிடமும் காணமுடியாத ஆற்றலும் கொண்ட அற்புதனுடன் இணைந்து நானும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை பணி செய்திருக்கிறேன். தினமுரசினை உருவாக்கிய ஆரம்பகாலங்களில் நாங்கள் மிகப் பெரிய கனவுகளோடும் அதை வளர்த்தெடுப் பதற்காக உழைத்திருக்கிறோம்.

அன்றைய சூழலில் அரசியல் நெருக்கடி அபாயநிலையில் நம்மை சூழ்ந்திருந்தபோதும் ஒரு சவாலாக நாங்கள் இயங்கியிருக்கின்றோம். ஜனநாயகப் பண்புடன் ஒரு சிறந்த பத்திரிகையை மக்களுக்கு கொடுங்கள், நிச்சயம் மக்கள் அந்த பத்திரிகையை ஆதரிப்பார்கள் என்று எம்மை ஊக்கப்படுத்திய தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கூற்றை அற்புதன் பிரதிபலித்தார். அதற்கேற்றவாறு மக்களும் தினமுரசை அங்கீகரித்தார்கள். இலங்கையில் மட்டுமல்லாது உலகெங்கும் தினமுரசுக்கு முகவர்கள் முன்நின்று போட்டிபோட்ட நிலை உருவாகியது.

இன்று தமிழ் ஊடக உலகம் பெரும்பாலும் வதந்திகளால் நிரப்பப்படுகிறது. அல்லது திட்டமிடப்பட்ட பொய்களால் கட்டமைக்கப்படுகிறது. அற்புதன் இன்று இருந்திருந்தால் இந்த பொய்யுரைகளுக்கு எல்லாம் தன் ஆளுமையினால் மிகப்பெரிய சவாலை முன்னிறுத்தியிருப்பார். நிரம்பியிருக்கும் இருளை அகற்றுவதற்கு பிரகாசமாக ஒளிரும் விளக்குபோல அவர் இந்த இருள் உலகத்தை தன் சுடரினால் ஒளியூட்டி இருப்பார். மக்களை ஒரு புதிய திசைக்கு அழைத்துச் சென்றிருப்பார்.

ஆனால் தமிழ்ச் சூழலின் அவலம், அற்புதனை இழந்தது. இந்தச் சூழலில் அவர் கொல்லப்பட்டார். சவால்களின் மத்தியில் சவால்களை எதிர்கொண்டு வாழ்ந்த ஒரு ஊடகவியலாளனாக, ஒரு அரசியல் போராளியாக, ஒரு எழுத்தாளனாக, ஒரு பத்திரிகை ஆசிரியராக, ஒரு பாராளுமன்ற உறுப்பினராக மக்களிடம் நிறைந்தார் அற்புதன்.

சவால்களுடன் மோதிக்கொண்டே தன்னை உருவாக்கிய அற்புதனுடைய உறுதிப்பாடு ஜனநாயகத்தளத்தை உறுதியாக கட்டமைப்பதே இன்று நாம் மேற்கொண்டு வருவதும் அத்தகைய ஜனநாயகத் தளத்தின் உருவாக்கத்தையே. ஒரு நல்ல தோழமைக்கு நாம் செலுத்துகின்ற மரியாதை அதுவாகத்தான் இருக்கமுடியும்.

# இலங்கை இந்திய உறவும்

# பொதுநலவாய மாநாடும்

மாநாட்டில் கலந்துகொள்ளப் போவ தில்லை என்று இந்தியப் பிரதமர் முடி வெடுத்துள்ளார். இலங்கை சென்று வடக்கு வரை போய் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் வலியுறுத்துகிறார்.

இலங்கையில் நடக்கின்ற கொமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொமன்வெல்த் மாநாட்டை மன்மோகன் சிங் பகிஷ்கரிக்கவேண்டும் என்று இந்தியாவுக்குள்ளே அழுத்தங்கள் அதிகரித்துள்ள சூழ்நிலையிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்திய அரசின் முடிவு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதால், கொமன்வெல்த் மாநாட்டை புறக்கணிக்கும் இரண்டாவது அரச தலைவராக மன்மோகன் சிங் கருதப்படுகிறார்.

முன்னதாக, கனடா பிரதமர் ஸ்டீபன் ஹர்ப்பர் கொமன்வெல்த் மாநாட்டை புறக்கணிப்பதாக அறிவித்திருந்தார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர்க்குற்றங்கள் தொடர்பான பாரதூர மான கேள்விகள் பலவற்றுக்கு பதில் கூறவேண்டியிருப்பதாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமரூனும் கூறியுள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரச படையினரால் நடத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், தமிழ் பொதுமக்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணை ஒன்றை நடத்துமாறு மகிந்த ராஜபக்ஷவைக் கோரவுள்ளதாகவும் டேவிட் கெமரூன் கூறியுள்ளார்.

**வருத்தம் தெரிவித்து மகிந்தவுக்கு கடிதம் அனுப்பினார் மன்மோகன்சிங்**

கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிப்பது தொடர்பாக சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவுக்கு. இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், ஞாயிற்றுக்கிழமை, 10 நவம்பர் 2013 கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக, புதுடெல்லி செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்காததற்கான காரணங்களை விபரித்தும், அதில் பங்கேற்க முடியாமல் போனதற்கு வருத்தம் தெரிவித்தும் இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொமன்வெல்த் அமைப்பின் பெறுமானங் களைத் தாம் மதிப்பதாகவும், ஆனாலும், நிர்ப்பந்தங்களைக் கொடுக்கும் காரணி களால் தன்னால் அதில் பங்கேற்க முடியவில்லை என்றும் இந்தக் கடிதத்தில் மன்மோகன்சிங் குறிப்பிட்டுள்ளார்.

சண்டிகரில் தேர்தல் பரப்புரைக்காக சென்றிருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சனிக்கிழமை இரவு புதுடெல்லி திரும்பியிருந்தார்.

இதையடுத்தே, கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிப்பது தொடர்பாக சிறிலங்கா அதிபருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

சிறிலங்கா அதிபர் தனிப்பட்ட அழைப்பை அனுப்பியிருந்த நிலையிலும், தமிழ்நாட்டில் இருந்து கொடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு அடிபணிந்து, அந்த அழைப்பை இந்தியப் பிரதமர் நிராகரித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன்சிங் எடுத்துள்ள இந்த முடிவினால், சிறிலங்கா - இந்திய உறவுகள் பாதிக்கப்படாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

மன்மோகன்சிங்கிற்குப் பதிலாக, சல்மான் குர்ஷித் கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கும் இந்தியக் குழுவுக்குத் தலைமை வகிக்கிறார்.

**மகிந்தவுக்கான வருத்தக் கடிதம் – வருத்தத்துடன் தயாரித்த சவுத் புளொக்**

கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்காதது குறித்து, சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவுக்கு, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அனுப்பிய கடிதத்தை தயாரிக்கும் பணியில் சனிக்கிழமை 09 நவம்பர் 2013 சவுத் புளொக் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டிருந்ததாக, சண்டே எக்ஸ்பிரஸ் தகவல் வெளியிட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை சோனியா காந்தி தலைமையில் நடந்த காங்கிரஸ் உயர்நிலைக் கூட்டம், மன்மோகன்சிங்கின் கொழும்பு பயணத்தைத் தடுத்துவிட்டது.

சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச அனுப்பிய தனிப்பட்ட அழைப்பிதழை, சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், கடந்த ஓகஸ்ட் 19ஆம் நாள் இந்தியப் பிரதமரிடம் கையளித்திருந்தார்.

இந்தநிலையில், சிறிலங்கா அதிப்ருக்கு அனுப்புவதற்கான பிரதமரின் கடிதத்தை தயாரிக்கும் பணியில் சவுத் புளொக் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டனர்.

மிகவும் கவனமான சொற்களைக் கொண்டதாக தயாரிக்கப்பட்ட அந்தக் கடிதத்தை, சண்டிகரில் இருந்து திரும்பியதும் பிரதமர் மன்மோகன்சிங் பரிசீலித்தார்.

வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இந்தியக் குழுவுக்கு தலைமை தாங்கலாம்.

அவர் வரும் 14ஆம் நாள் நடக்கவுள்ள கொமன்வெல்த் வெளிவிவகார அமைச்சர் களின் கூட்டத்தில் பங்கேற்க கொழும்பு செல்லவுள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கொழும்பு செல்லவேண்டும் என்பதில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும், சவுத் புளொக்கும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

**மன்மோகன்சிங் முடிவு எமக்கு பின்னடைவு அல்ல: இலங்கை**

இலங்கை கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்துகொள்ளாதது தமக்கு தோல்வி இல்லை என்று இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

உள்நாட்டு அரசியல் காரணங்களினா லேயே கொழும்பில் நடக்கும் மாநாட்டில் மன்மோகன் சிங் கலந்துகொள்ளாதிருக்க முடிவுசெய்துள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் பி.பி.சியிடம் கூறினார்.

"மன்மோகன் சிங் வராமல் இருக்க முடிவு செய்திருப்பது எங்களின் மாநாட்டின் வெற்றியைப் பாதிக்காது. அதனை நாங்கள் ஒரு பிரச்சினையாகக் கருதவில்லை" என்றும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

"அவரது முடிவு எங்களுக்கு தோல்வி அல்ல, நாங்கள் அவரை அழைத்தோம், அவர் வந்திருந்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருப்போம்" என்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடக்கும் கொமன்வெல்த் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளாதிருக்க இந்தியப் பிரதமர் எடுத்துள்ள முடிவு இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பாரிய பின்னடைவாக கருதப்பட முடியுமா என்று பி.பி.சி.யின் கொழும்பு செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே, ஜி.எல். பீரிஸ் இந்தப் பதிலைக் கூறினார்.

**"எல்லா கொமன்வெல்த் மாநாட்டுக்கும் பிரதமர் போவதில்லை" - குர்ஷித்**

இதனிடையே, மன்மோகன் சிங்கின் முடிவுக்கு பல காரணங்கள் இருக்க முடியும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.



**தொகுப்பு: வேணு கிருஷ்ணா**

"எல்லா கொமன்வெல்த் மாநாட்டுக்கும் பிரதமர் போவதில்லை என்பதை மறந்துவிடக் கூடாது" என்று சல்மான் குர்ஷித் உள்ளூர் ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மன்மோகன் சிங் இலங்கை மாநாட்டில் கலந்துகொள்வாரா?, இல்லையா? என்ற கேள்விகள் வலுத்திருந்த நிலையில், தான் கலந்துகொள்வது உறுதியென்று வெளியுறவு அமைச்சர் குர்ஷித் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்தியா கொமன்வெல்த் மாநாட்டை முழுமையாக புறக்கணிக்க வேண்டுமென்று தமிழக அரசு சட்டமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு நவம்பர், 10, 2013இல் ஆரம்பமானது.

பொதுநலவாய அரச தலைவர்களின் உச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு நவம்பர், 10, 2013இல் ஆரம்பமானது.

அதனடிப்படையில், பொதுநலவாய இளைஞர் மாநாடும், மக்கள் மன்ற மாநாடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**இளைஞர் மாநாடு**

அம்பாந்தோட்டையிலும் மக்கள் மன்ற மாநாடு ஹிக்கடுவயிலும் நடைபெறுகின்றது.

பொதுநலவாய இளைஞர் மாநாட்டில் 53 நாடுகளைச் சேர்ந்த 106 பிரதிநிதிகளும் 20 கண்காணிப்பாளர்களும் 5 செயலணி உறுப்பினர்களும் கலந்துகொள்கின்ற அதேவேளை, இலங்கை சார்பாக 25 பிரதி நிதிகளும் 20 கண்காணிப்பாளர்களும் 5 செயலணி உறுப்பினர்களும் கலந்துக் கொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் 8 முக்கிய தலைப்புக்கள் தொடர்பில் ஆராயப்படுவதுடன் இலங்கை அரச தலைவர்களுடன் இளைஞர் மாநாட்டின் தலைவர்கள் விசேட கலந்துரையாடல் களிலும் ஈடுபட்டனர்.

**இந்தியப் பிரதமருக்கு அறிவுரை கூறத் தன்னால் முடியாது என்றார் சம்பந்தன்**

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்வது குறித்த சர்ச்சை வலுத்துவந்த நிலையில், இந்தியா இந்த மாநாட்டில் கலந்துகொள்வதால் மட்டும், அது இலங்கையின் மனித உரிமைச் செயற்பாட்டை அங்கீகரிப்பதாக யாரும் கருதமுடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருக்கிறார். இது இலங்கைக்கும் தெரியும், இந்தியாவுக்கும் தெரியும், பிற நாடுகளுக்கும் தெரியும் என்றார் சம்பந்தன். பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டில் மன்மோகன் சிங் கலந்துகொள்வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பல்வேறுவிதமான கருத்துக்கள் நிலவுவதாகக் கூறப்படுவது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இரா.சம்பந்தன், இந்த விடயத்தை பொறுத்தவரை முடிவெடுக்க வேண்டியது, இந்தியப் பிரதமரும், இந்திய அரசியல் கட்சிகளும் இந்திய மக்களும் தான். இதில் இந்தியப் பிரதமருக்கு அறிவுரை கூறத் தன்னால் முடியாது என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை இதே நிலைப்பாடுதான். இதற்கு மாறாக யாரும் எதையும் தெரிவிக்க வில்லை என்றார் சம்பந்தன். இந்தியா இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாவிட்டால், அது மக்களுக்கு சாதகமாக இலங்கைப் பிரச்சினையில் செயற்பட முடியாமல் போய்விடும். எனவே இந்த மாநாட்டில் அது கலந்துகொள்வது அவசியம் என்று முன்வைக்கப்படும் வாதம் பற்றிக் கேட்டதற்குப் பதிலளித்த அவர், இந்தியா 1983 லிருந்து இலங்கைப் பிரச்சினையில் செயற்பட்டுவருகிறது. இடையே சிலகாலம் "சில பிரச்சினைகள் காரணமாக" இந்தியா - இலங்கைப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடாமல் ஒதுங்கியிருந்தது. இப்போது அது மீண்டும் இப்பிரச்சினையில் கவனம் செலுத்துகிறது. இது தமிழர்களால் வரவேற்கப்படவேண்டிய ஒன்று என்றார்.

இந்தியாவின் செயற்பாட்டைப் பொறுத்தவரை அதை மேலும் பரந்துபட்ட அளவில் பார்க்கவேண்டும். பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வது என்பது சம்பிரதாயபூர்வமான ஒரு நிகழ்வு. இதில் கலந்துகொண்டாலும் கலந்து கொள்ளா விட்டாலும் அதனால் பெரிய பிரச்சினை இல்லை. ஆனால் சர்வதேச அரங்குகளில், குறிப்பாக ஐ.நா. மன்ற மனித உரிமை சபை போன்ற இடங்களில் இந்தியாவின் நிலைப்பாடு தமிழர்களுக்கு சாதகமாகவே இருந்து வந்திருக்கிறது என்றார்.

இதுபோல 2014 மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை பேரவைக்கூட்டத்திலும் இந்தியா தனது பங்களிப்பை ஆற்றும் என்று எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

**இலங்கை விவகாரத்தில் ஒரு உறுதியான தீர்மானத்தை எடுக்க முடியாத நிலையில் இந்திய அரசு**

கொழும்பில் நடைபெறுகின்ற பொதுநல வாய நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்தியா எந்தவகையிலும் கலந்துகொள்ளக் கூடாது என்ற தீர்மானத்தை தமிழக சட்டப்பேரவை எடுத்ததையடுத்து அனைவரது கவனமும் புது டில்லியின் பக்கம் திரும்பியது. தமிழக சட்டப் பேரவையில் இதற்கான தீர்மானத்தை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டுவந்தார்.

பிரதான எதிர்க்கட்சிகளான தி.மு.க. மற்றும் காங்கிரஸ் என்பவற்றின் ஆதரவுடன் ஏகமனதாக இதற்கான தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. தீர்மானத்துக்கு எதிராக எந்தவொரு பிரதான கட்சியும் வாக்களிக்க முன்வரவில்லை. தமிழகத்தில் காணப்படும் உணர்வுகளை மீறிச் செயற்படுவதற்கு எந்தவொரு கட்சியும் தயாராகவில்லை என்பதை இது வெளிப்படுத்தியிருக்கின்றது. இந்த நிலையில் கொழும்பு மாநாடு தொடர்பி லான தமது நிலைப்பாடு என்ன என்பதை இந்திய மத்திய அரசு திட்டவட்டமாக வெளிப் படுத்த முடியாமல் தவித்தது. அதனால்தான், அனைத்துத் தரப்பினரது கவனமும் டில்லியின் பக்கம் திரும்பியிருந்தது.

புதுடில்லியைப் பொறுத்தவரையில் இவ்விட யத்தில் எவ்வாறான தீர்மானத்தை எடுப்பது என்பதில் குழப்பமடைந்திருந்தது. தமது நிலைப் பாட்டு அறிவிப்பை தொடர்ந்தும் டில்லி ஒத்தி வைத்துக்கொண்டுவந்தது அதனால்தான். இந்தியப் பொதுத்தேர்தல் அடுத்த வருடத்தில் நடைபெறவிருப்பதால் தமிழகத்தின் பொங்கி யெழுந்திருக்கும் உணர்வுகளை மீறிச் செயற்படுவதற்கு டில்லியால் முடியாதிருந்தது. மறுபக்கத்தில் கொழும்புக்கு எதிராகச் செயற்படுவதும் இந்திய நலன்களைப் பாதிப்பதாக அமையலாம். குறிப்பாக, கொழும்புடனான உறவுகளை அது பாதிக்கும். இந்தியாவுக்கு எதிரான சக்திகளுடன் தமது உறவுகளை வலுப்படுத்திக்கொள்வதற்கு இலங்கையை அது தள்ளலாம். இலங்கை குறித்த இந்தியாவின் அண்மைக்கால அணுகுமுறை தமிழகத்தை ஏதோ வகை யில் சமாளித்துக்கொண்டு கொழும்பைப் பாதுகாப்பதாகவே அமைந்திருந்தது. ஆனால், இந்தியப் பொதுத் தேர்தல்

→

# நீர் உட்புகாத கமெரா!

Ion எனும் நிறுவனமானது Air Pro 3 எனும் நீர் உட்புகாத தொழில்நுட்பத்தினைக் கொண்ட கமெராவினை வடிவமைத்து அறிமுகப்படுத்தியுள்ளது.

நீரினுள் 49 அடிகள் ஆழம்வரை கொண்டு சென்று பயன்படுத்தக்கூடியதாக காணப்படும் இக்கமெராவானது 60fps வேகத்தில் வீடியோ பதிவு செய்யக்கூடியதாக உள்ளது.

மேலும் இதில் 12 Megapixel Sony IMX117 CMOS சென்சர் காணப்படுகின்றது. வயர்லெஸ் தொழில்நுட்பமான Wi-Fi இனையும் கொண்டுள்ள இக்கமெரா மூலம் 160 டிகிரியில் காட்சிப்பதிவு செய்யமுடியும். இதன் விலையானது 350 அமெரிக்க டொலர்களாகும்.




தொழில்நுட்பம்




# கூகுளின் புதிய அறிமுகம்

காணொளி ஆலோசனை, காணொளி உரையாடல் வசதி, நிபுணருடன் நேரடி உதவி, எப்படி வழிகாட்டி, நேருக்கு நேர் நிபுணர் ஆலோசனை... தேடியந்திர நிறுவனமான கூகுள் அறிமுகம் செய்துள்ள கூகுள் ஹெல்ப் அவுட்ஸ் வசதி இப்படி எல்லாம் வர்ணிக்கப்படுகிறது. கூகுளின் இந்தப் புதிய அறிமுகம் இணைய உலகில் உண்டாக்கி இருக்கும் பரபரப்பையும் இந்த வர்ணனைகள் உணர்த்துகின்றன.

பலவிதங்களில் வர்ணிக்கப்பட்டாலும், அடிப்படையில் இந்த வசதி, காணொளிமூலம் அதாவது வீடியோ வழியே துறைசார்ந்த நிபுணர்களுடன் நேரடியாக ஆலோசனை பெறுவதற்கான வழி. இதன்மூலம் சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளலாம். புதிய விஷயங்களில் பயிற்சி பெறலாம். வழிகாட்டி குறிப்புகளோடு உடனடி ஆலோசனைகள் சாத்தியமாகும்.

கூகுளிடம் ஏற்கனவே உள்ள காணொளி உரையாடல் சேவையான கூகுள் ஹொங்க் அவுட் நீட்சியாக இந்த கூகுள் ஹெல்ப் அவுட்ஸ் சேவை அறிமுகம் ஆகியுள்ளது. அமெரிக்காவுடன் சான்பிரான்சிஸ்கோ நிகழ்ச்சியில் கூகுள் இதை அறிமுகம் செய்துள்ளது.

நிஜமான மனிதர்களிடம் இருந்து, நிஜமான உதவி, உடனடியாக! என்று கூகுள் ஹெல்ப் அவுட் இந்த சேவையை வர்ணித்து கொள்கிறது. இந்த சேவைமூலமாக குறிப்பிட்ட துறையை சேர்ந்த நிபுணர்களிடம் காணொளிமூலம் நேரடியாக ஆலோசனை பெறலாம். மேக்-அப் செய்வதில் துவங்கி, சமையல் கலை, கம்பியூட்டரில் ஏற்பட்ட பழுது போன்ற விஷயங்கள் தொடர்பாக நிபுணர்களிடம் நேரடியாக சந்தேகங்களை கேட்டு காணொளி வழியே விளக்கம் பெறலாம்.

# ட்விட்டரிலும் குத்துவெட்டு

சமூக இணையத்தளத்தில் தவிர்க்கமுடியாத பெயர் ட்விட்டர். 140 எழுத்து அல்லது குறியீடு களுக்குள் கருத்தைச்சொல்லும் வசதியைக் கொண்டிருக்கும் இந்தச் சமூக இணையத்தளம், இன்றைய தலைமுறையின் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

ஆனால், ட்விட்டரின் ஆரம்பகால நிறுவனர்களில் 14 பேர் அந்நிறுவனத்தில் தற்போது இல்லை. பலரின் கூட்டுமுயற்சியில் உருவான டுவிட்டரின் உருவாக்கத்தில் பல துரோகங்கள் புதைந்திருக்கின்றன என்ற தகவல் தற்போது வெளியாகியிருக்கிறது.

ட்விட்டர் தளம் உருவானவிதம் பற்றி அமெரிக்காவைச் சேர்ந்த செய்தியாளர் நிக்பில்டன் "கருப்பெற்ற டுவிட்டர்: பணம், அதிகாரம், நட்பு, துரோகத்தின் கதை" என்றபெயரில் புத்தகமொன்றை எழுதியுள்ளார்.

ட்விட்டரின் உருவாக்கத்திற்குச் சிலர் உரிமை கொண்டாடியபோதும், ஆரம்பகால நிறுவனர்களுள் ஒருவரான ஜேக் டோர்சே, சான்பிரான்ஸிஸ் கோவில் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது, தான்தான் டுவிட்டருக்கான ஆலோசனையைத் தெரிவித்ததாகக் கூறியுள்ளார்.

ஆனால், நிக் பில்டனின் கருத்து வேறுவிதமாக உள்ளது. டோர்சே டுவிட்டர் நிறுவனர் குழுக்களில் முக்கிய உறுப்பினர் என்றபோதும், இது கூட்டுமுயற்சிதான் எனத் தெரிவித்துள்ளார்.

டோர்சே பின்னாளில் நிறுவனத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளார்.

டோர்சே இதுகுறித்து சி.பி.எஸ். செய்தித் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில், நானும் நண்பர்களும் அடுத்து என்ன செய்யலாம், யார் யார் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை விவாதிப்போம். அப்படித்தான் ட்விட்டர் உருவானது எனத் தெரிவித்துள்ளார். ட்விட்டர் உருவாவதற்கு முன் டுவிட்டரின் ஆரம்பகால நிறுவனர்களும் ஊழியர்களும் ஓடேயோ என்ற நிறுவனத்தில் பணிபுரிந்தனர். இணையம் சார்ந்த நிறுவனமான ஓடேயோ தேடு கருவியாக இருந்தது. 2005ஆம் ஆண்டு இவான் வில்லியம்ஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தில் பணிபுரிந்த சிலர்தான் ட்விட்டரை உருவாக்கினர். ஓடேயோ மூடப்படும் சூழல் உருவானது. ஓடோயோவை 2006 ஆம் ஆண்டு மீட்டெடுத்த வில்லியம்ஸுக்கு டுவிட்டரின் பங்குகளை விற்பனை செய்தது யார் என்பது இதுவரை வெளிச்சத்துக்கு வராத உண்மை. ட்விட்டர் இவ்வளவு உச்சத்தைத் தொடும் என ஆரம்பகால நிறுவனர்கள் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ட்விட்டரின் ஆரம்பகால ஊழியர்களில் தற்போது கிறிஸ்டல் டெய்லர் என்பவர் மட்டுமே தற்போதும் பணியாற்றிவருகிறார்.

ட்விட்டரின் உருவாக்கத்திற்குப் பின் ஏராளமான துரோகங்கள் புதைந்திருப்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆக, துரோகங்களும் இழுத்து விழுத்தல்களும் மனித சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் புற்றுநோய் போல் பரவியிருக்கின்றது, என்பது இதன்மூலம் தெளிவாகிறது.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு

நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்


- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஆத்திரம் அழிவை தரும்



**அது** ஒரு கிராமம். அது காட்டை ஒட்டிய வனப்பகுதி. பிராணிகளிடம் பிரியமுள்ள ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் காட்டிற்கு வேட்டைக்கு போனான். அழகிய புள்ளிமான் ஒன்றை பிடித்து வந்தான்.

மானின் அழகில் மயங்கிய அவன் மாமிசத்திற்காக கொல்லவில்லை. வீட்டில் வளர்த்து வந்தான். ஒருநாள் மான் மாயமாய் மறைந்துவிட்டது. ஆனால் அது ஓடவில்லை. காணாமல் போய்விட்டது.

அவனுக்கோ ஆத்திரம். இந்த மானை யார் பிடித்து போயிருப்பார்கள். அவன் எங்கே இருந்தாலும் தேடி கண்டுபிடித்து பழி வாங்கவேண்டும் என்ற எண்ணம் கோபமாக உரு வெடுத்தது.

உடனே கடவுளை துதித்தான். கடவுளே எனக்கு தரிசனம் தா...! என்று கடவுளும் வந்தார்...!

பக்தா என்னை அழைத்ததின் காரணம் என்ன? கடவுள் கேட்டார். அறிவாளி பக்தன் என்ன கேட்கணும். நான் ஆசையாய் வளர்த்த மானை யாரோ அபகரித்து சென்றுவிட்டார்கள். அந்த மான் எனக்குவேண்டும் என்று தானே கேட்டிருக்கவேண்டும்.

ஆனால் கேட்கவில்லை. கோபம் கண்ணை மறைத்தது.

தெய்வமே! நான் ஆசையாய் ஒரு மான் வளர்த்தேன். அந்த மானை காணவில்லை. அந்த மானை திருடியவன் யாராக இருப்பினும், அவன் முன்னே வரவேண்டும். அவனை என் கோபம் தீர அடிக்கவேண்டும்.

இதுதான் பக்தன் கேட்ட வரம்.

வேண்டுவோருக்கு வேண்டும் வரம் தரும் கடவுள் பக்தனின் கோரிக்கைக்கு தயங்கினார்.

பக்தா.. உன் மானை திருப்பி தருகிறேன். அது காணாமல் போனதற்கு காரணமானவர் யார் என்று கேட்காதே.

இல்லை.. என் மனம் எவ்வளவு கலங்கி இருக்கிறது என்பது எனக்குத்தான் தெரியும். அதனால் அவனை பழிவாங்காமல் விட மாட்டேன், என்று பிடிவாதமாக கேட்டான்.

சரி.. நீ கேட்கும் வரத்தை தருகிறேன். பின்னால் என் மீது வருத்தப்படக்கூடாது.

வருத்தம் வராது.

சரி.. தந்தேன் வரம். உன் மானை திருடி சென்றவர் யாரோ, அவர் உன் பின்னால் நிற்கிறார். தண்டித்து கொள். வரத்தை தந்த கடவுள் மறைந்துவிட்டார்.

பக்தன் திரும்பி பார்த்தான். அங்கே நின்றது சிங்கம்.


பழிவாங்கும் கோபம் மறைந்தது. பயம் பிடித்துக்கொண்டது. கை, கால் எல்லாம் நடுங்கத் தொடங்கியது. கண் மண் தெரியாமல் ஓடத்தொடங்கினான். கடவுளே என்னை காப்பாத்து.

கடவுள் சிரித்தார். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டுத்தானே. அவன் கதை முடிந்தது. இங்கே அவன் அறிவு வேலை செய்யவில்லை. ஆத்திரம் கடைசியில் அழிவை தந்தது.

சரி. எனக்கு தெரிந்த வரையில் நீங்கள் கோபக்காரர் இல்லை சரிதானே.

# குறும்பு!

தம்பிப் பாப்பா தம்பிப் பாப்பா
வம்பு பண்ணாதே!
தாறுமாறா தரையில் புரண்டு
விழுந்து அழாதே!
தண்ணியிருக்கும்
குடத்துக்குள்ளே
கையை விடாதே!
தவலைப்பானை
இடுக்குக்குள்ளே
தலையை விடாதே!
தகரடப்பா எடுத்துப்போட்டு
தமுக்கு அடிக்காதே!
தீப்பெட்டியை பிரிச்சுக்கொட்டி
வாயில் வைக்காதே!
வாழைப்புழுத் தோலின் மீது
காலை வைக்காதே!
கோழிக்குஞ்சு தலையைப்பற்றி
நெரிச்சு விடாதே!
அம்மா வரும் தின்னத் தரும்
சும்மா இருந்திடு!
அதுவரைக்கும் பாலைக்குடிச்சு
அயர்ந்து தூங்கிடு!



## வாரம் ஒரு திருக்குறள்



குடிசெயல் வகை

**குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து**
**மானம் கருதக் கெடும்.**

குடி உயர்வதற்கான செயல்களை செய்கின்றவர்களுக்கு உரிய காலம் என்று ஒன்று இல்லை. சோம்பல் கொண்டு தம் மானத்தைக் கருதுவாரானால் குடிப்பெருமை கெடும்.

குறள்:1028

# உயர்ந்த மனிதன்!



**சீன** தத்துவ ஞானி கன்.ஃபூஷியஸிடம் சீடர்கள் பலர் இருந்தனர். குருவின் மீது அவர்களுக்கு எல்லாம் மிகவும் மரியாதை அதிகம். அவரிடம் என்ன கேள்வி கேட்டாலும் அன்போடு விளக்கமான பதில் தருவார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஒருநாள் ஒரு சீடர், "குருவே உயர்ந்த மனிதனுக்கும் தாழ்ந்தவனுக்கும் என்ன வேறுபாடு?" என்று கேட்டார்.

"அன்பனே! உயர்ந்த மனிதன் தன் ஆன்மாவை நேசிக்கிறான். தாழ்ந்தவன் தன் சொத்தை மட்டுமே நேசிக்கிறான். இது தான் வேறுபாடு!" என்றார் கன்.ஃபூஷியஸ்.

# தெரியுமா?

- சமவெளிப் பிரதேசங்களில் விளையக்கூடிய பயிர் எட்வேர்ட் ரோஜா. இதிலிருந்துதான் அத்தர் எடுக்கிறார்கள்.
- செவ்வாயில் ஓர் ஆண்டு என்பது 679 நாள்கள்.
- கண்ணாடி இல்லாமல் வெறும் கண்களால் பார்க்கக்கூடிய கிரகம் யுரேனஸ்.
- மிகவும் குளிர்ச்சியான கிரகம் புளூட்டோ.
- நியூயோர்க்கில் உள்ள பொது நூலகத்தில் உள்ள புத்தகங்களை வரிசையாக அடுக்கிவைத்தால் 80 மைல் தொலைவுக்கு இருக்குமாம்.
- லியோ டால்ஸ்டாய் தன் "போரும் அமைதியும்" என்ற பிரபலமான நாவலை கையாலேயே எழுதினாராம். அவரது மனைவி அந்தக் கையெழுத்துப் பிரதிகளை 7 முறை தனித்தனியே பிரதி எடுக்க நேர்ந்ததாம்.
- ஆங்கில நாவலாசிரியர் சார்லஸ் டிக்கன்ஸ் எப்போதும் வடக்குத் திசை நோக்கியே அமர்ந்து எழுதுவாராம்.

## நாய்களுக்காக ஒரு பத்திரிகை

அமெரிக்காவில் நாய்கள் தொடர்பான விஷயங்களுக்காக 'நியூயோர்க் டாக்' என்னும் இதழ் நடத்தப்படுகிறது. இதில் நாய்களுக்கான ஜோதிடப் பகுதிகூட உண்டு. நாய்களை நேசிப்பவர்கள் வினாக்களை அனுப்பி பதில் கேட்கலாம். நாய்களை மாற்றிக்கொள்ள விரும்புவோருக்கான பகுதியும் உண்டு. இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியாகிறது.

## பெப்ருவா!


'பெப்ருவா' என்னும் இலத்தீன் மொழிச் சொல்லின் பொருள் தூய்மை செய்தல் என்பதாகும். 'பெப்ரவரி' என்னும் பெயர் இதிலிருந்து தான் வந்தது.

பேருண்டி விழா ஒன்று ரோமானியர் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் 15ஆம் திகதி நடைபெறும். அந்த மாதத்தின் பெயரே, விழாவின் பெயர்கொண்ட மாதமான பெப்ரவரி என்றாயிற்று.

ரோமாபுரியை ஆண்ட பாம்பிலியஸ் என்ற மன்னர், ஜனவரியை முதல் மாதமாகவும், பெப்ரவரியை இரண்டாவது மாதமாகவும் ஆக்கினார்.

அதற்கு முன்பெல்லாம் ரோமானியப் பஞ்சாங்கத்தில் மார்ச் மாதம்தான் முதல் மாதமாக கணிக்கப் பெற்றுவந்தது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.

சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 18.11.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1018**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1016**

**அ.டனிஸ்ரன், குருநகர்,**
**யாழ்ப்பாணம்**

பரிசுக்குரியவர்: 1016

பாராட்டுக்குரியவர்கள்

01. ரா.உஷாந்தினி, புத்தூர்.
02. யோ.சிவரஜினி, சரசாலை தெற்கு, சரசாலை.
03. இ.சுதர்ஷன், குமழிருப்பு, வவுனியா.
04. கு.சோபிகா, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
05. க.சந்தியா, தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை.
07. எம்.மகிந்தன், புதுக்குழமிருப்பு, முல்லைத்தீவு.
08. ப.பாவனா, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# நினைவு!

**அ**ண்ட்ரூ ஜோன்ஸன் அமெரிக்க நாட்டுக்கு ஜனாதிபதியானதும், தன்னுடைய நண்பரை அழைத்து, அன்புடன் ஒரு பரிசு தந்தார். நண்பர் பரிசைப் பிரித்துப் பார்த்தார்.



உள்ளே அழகிய கோட்டு ஒன்று இருந்தது.

"எனக்கு எதற்கு விலையுயர்ந்த கோட்டு வாங்கினாய்? மிக நேர்த்தியாக உள்ளது. சாதாரண கோட்டு வாங்கி இருக்கக் கூடாதா?" என்று நண்பர் கேட்டார்.

"இதை நான் வாங்கவில்லை. நானே தைத்தது. முன்பு, ஆரம்பத்தில் நான் இருந்த நிலைமையை மற்றவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டும். "இந்த ஜனாதிபதியும் முதலில் ஒரு தையற்காரனாக இருந்தான்" என்பதை நான் மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதை தைத்துக் கொடுத்தேன்" என்றார் அண்ட்ரூ ஜோன்ஸன்.

## மாலி கோழி



தெற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள மாலி கோழி வாரத்துக்கு ஒரு முட்டை வீதம் ஆறு மாதங்கள் இடும். மீதி நாட்களைத் தன் இணையுடன் சேர்ந்து சிக்கலான அடைகாக்கும் கூடு கட்டச் செலவிடுகிறது. முதலில் ஆணும் பெண்ணும் 10 அடி விட்டம் 2-3 அடி ஆழத்துக்குக் குழி தோண்டும்.

அதில் இலை, தழை, குச்சிகளைப் போட்டு மூடும். மழை பெய்ததும் மணலால் மூடும். இலைகள் அழுகி வெப்பம் வெளிப்படத் துவங்கும். சரியான வெப்பநிலை வந்துவிட்டதா என்பதைக் கோழி அலகினால் சோதித்துப் பார்க்கும். பிறகு முட்டை இடும். ஆண் பறவை முட்டையைப் புதைக்கும். அவ்வப்போது குழியை கிளறிவிட்டு காற்றுப் போகும்படி செய்யும். வெப்பம் அதிகமாக இருந்தால் சூரியஒளி தாக்காமல் இருக்க மேலும் கொஞ்சம் மண்ணைப்போட்டு மூடும்.

குஞ்சு பொறிக்க 50 நாள்கள் ஆகும். முதலில் இட்ட முட்டைகள் குஞ்சாக வெளிவரும்போது, மாலி கோழி புதிய முட்டைகளை இட்டுக் கொண்டிருக்கும். குஞ்சுகள் 2-3 அடி குப்பையையும் மண்ணையும் தள்ளிக்கொண்டு தானாகத் தான் வெளிவரவேண்டும். இதற்கு 15 மணி நேரம்கூட ஆகும். பிறந்த உடனேயே குஞ்சுகள் சுதந்திரமாக இயங்கத் தொடங்கிவிடுகின்றன. பிறகு அதை தாய் கவனிப்பது இல்லை. முட்டையிலிருந்து வெளிப்பட்ட 24 மணி நேரத்தில் அவைகளால் பறக்கமுடியும்.

**இதுவரை**

**இடி அமீன் உகண்டா இராணுவத் தளபதியாக ஜனாதிபதி ஒபேடேயால் நியமிக்கப்படுகிறான். உகண்டாவில் இராணுவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறான் இடி அமீன்.**

**இனி...**

மறுநாளே எகிப்துக்குப் புறப்பட்டான் அமீன். புறப்படமுன்னர் ஜனாதிபதி ஒபேடேயிடம் ஃபோனில் விடைபெற்றான்.

"சென்று வருகிறேன், உங்களைவிட்டுப் பிரிவதை எண்ணி வேதனை அடைகிறேன்"

"சேச்சே.... என்ன ஒரு மாதம்தானே, உனக்கும்



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

## உண்மைத் தொடர்...

**அதிர் இடி (12)**

ஓய்வாக இருக்கும், சந்தோசமாக சென்றுவா! உனது பயணம் நன்றாக அமைய பிரார்த்திக்கிறேன்!" என்றார்.

அமீன் மறுமுனையில் "நன்றி" கூறி ஃபோனை வைத்துவிட்டு "கிழட்டு நரி என்னிடமே நடிக்கிறது!" என்றான்.

அமீன் புறப்பட்டுச் சென்றுவிட்டதாக தகவல் கிடைத்ததும் ஒபேடே துள்ளிக்குதித்தார்.

அவரது குதிப்புக்கு அதிகபட்ச ஆயுள் மூன்றே மூன்று நாள்தான்.

மூன்றாவது நாள் காலையில் ஜனாதிபதி ஒபேடே காலை உணவைச் சாப்பிட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

அமீன்மீதான விசாரணைகளை அன்றுதான் ஆரம்பிப்பதாக இருந்தது. அவற்றை நேரடியாக கவனிப்பதாக சற்று நேரத்துடனேயே காலை உணவைச் சாப்பிட ஆயத்தமானார்.

உள்ளகத் தொலைபேசி அழைத்தது. எடுத்து "என்ன?" என்றவருக்கு இடிவிழுந்ததுபோல மறுமுனைத் தகவல் கிடைத்தது.

"தங்களை காண்பதற்காக தளபதி இடி அமீன் வந்து காத்திருக்கிறார்!"

ஜனாதிபதிக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. தனது திட்டங்கள் எல்லாம் இடிந்துவிழும் சத்தம் அவர் காதில் கேட்பது போலிருந்தது.

"வ.. வரச்சொல்...! என்றார் குரலில் சுரத்தே இல்லாமல்.

வந்த அமீன் ஜனாதிபதி ஒபேடேயின் அவஸ்தையை ரசித்தான். மென்று விழுங்கி வார்த்தைகளை வெளியிட்டார். ஜனாதிபதி, "என்.. என்ன உடனே.. இத்தனை விரைவாக திருப்பி விட்டாய்?"

"ஜனாதிபதியைக் கொல்ல விஷமிகள் சதிசெய்து முடித்திருக்கிறார்கள் என்று நம்பகமான தகவல் கிடைத்தது. அந்தத் தகவல் கிடைத்த பின்னரும் எகிப்தில் தங்கியிருந்தால் நான் பதவியில் இருக்க இலாயக்கில்லாதவன்!"

ஒபேடேக்கு உள்ளூர எரிச்சலாக இருந்தது. வெளியே காட்டாமல் "என்ன கொலைச் சதியா,? சதி... சதி இந்தத் தலைமையே எனக்குவேண்டாம். வேறு யாரிடமாவது ஒப்படைக்கலாம் என்று நினைக்கிறேன். என்றுகூறிக்கொண்டு அமீனின் முகபாவத்தை ஓரக்கண்ணால் நோக்கினார்.

"ஒப்படைக்கவேண்டாம். ஒழித்துக் கட்டுவது எனது பொறுப்பு" என்றவனிடம் யாரை? என்றார்.

"சதிகாரர்களை!" என்றுவிட்டு சல்யூட் அடித்துவிட்டு விடுவிடுவென்று நடந்து சென்றவனை பார்த்துக் கொண்டே இருந்தார் ஜனாதிபதி.

அடுத்த கால்மணி நேரத்தில் ஜனாதிபதி முன்பாக நின்றவர் அகெனா அடொகோ. ஜனாதிபதி ஒபேடேக்கு சகோதரர் முறையானவர்.

முதலாவது கொலைச்சதிக்குப் பின்னர் தனது தனிப்பட்ட பாதுகாப்புக்கு என்ற போர்வையில், இடிஅமீனுக்கு சந்தேகம் வராதளவுக்கு பொதுச்சேவைகள் பிரிவு ஒன்றை ஆரம்பித்திருந்தார் ஜனாதிபதி.

. அதற்குப் பொறுப்பாக அகெனா அடோகோ நியமிக்கப்பட்டிருந்தார்.

"இடி அமீனை ஒழித்துக்கட்ட முடியுமா?, முடியாதா? உண்மையைக் கூறிவிடுங்கள். முடியாவிட்டால் நான் பதவியைவிட்டு இறங்கிவிடுகிறேன்!" என்றார் ஒபேடே மிகவும் விரக்தியாக இருந்தார்.

"பொதுநலவாய நாடுகளின் மாநாடு எப்போது ஆரம்பமாகிறது?"

"ஜனவரி மாதம், சிங்கப்பூரில்"

அந்த மாநாட்டில் கலந்துகொண்டு விட்டு நீங்கள் வரும்போது இடி அமீன் இருக்கமாட்டான். போதுமா?"

ஒபேடேயின் முகம் சிறிது பிரகாசமானது.

1971 ஜனவரியில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்காக சிங்கப்பூர் புறப்பட்ட ஒபேடேயை வழியனுப்ப விமான நிலையத்துக்கு வந்திருந்தான் இடிஅமீன்.

ஜனாதிபதியின் சிங்கப்பூர் விஜயத்துடன், தன்னை ஒழித்துக்கட்டத் தீட்டப்பட்ட சதியை அக்குவேறு ஆணிவேறாக அறிந்துவைத்திருந்தான் அமீன்.

அவனது உளவுப்பிரிவு சுறுசுறுப்பாகவும், சகல இடங்களிலும் நிறைந்து இருந்தது.

தன்னையறியாமல் உகண்டாவில் ஒரு அணுவும் அசையமுடியாது என்றளவுக்கு உளவுப்பிரிவை உருவாக்கி முடித்திருந்தான் அமீன்.

ஒபேடேயின் நம்பகமான வட்டாரத்திற்குள் ஒன்றுக்கு மூன்றுபேர் அமீனின் விசுவாசிகளாகவும், உளவறிந்து தகவல் கூறுகின்றவர்களாகவும் இருந்தனர்.

வழியனுப்ப வந்த அமீனுடன் ஒப்புக்காக புன்னகைத்து, அவனது சல்யூட்டை பெற்றுக்கொண்டு விமானம் ஏறிப்போய்விட்டார் ஒபேடே.

அன்றிரவே ஒபேடேயின் நம்பகமான அதிகாரி ஒருவரை கைதுசெய்து வெட்டவெளியில் கொண்டு சென்று நிறுத்தினான் அமீன்.

"என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றவரிடம், அமீன் சொன்னான்!

"சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப் போகிறோம்!"

உடனே புரியவில்லை துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கியபோதுதான் அதிகாரிக்குப் புரிந்தது.

துப்பாக்கி ரவைகள் அவரது தலைக்கு மேலாக உரசிக்கொண்டு செல்வதுபோல பறந்தன.

ஆனால் உடம்பில் படவே இல்லை பயந்துவிட்டீரா? உம்மைக் கொல்லமாட்டேன். அதாவது என்னோடு ஒத்துழைத்தால்!" என்றான் அமீன்.

அதிகாரிக்கு அவரது மனைவியும் பிள்ளைகளும் மனக்கண்ணுக்குள் வந்துநின்றனர். ஒழிவதைவிட ஒத்துழைப்பதே மேல் என்று நான் தயார்" என்றுகூற எதற்கு செத்துப்போகவா, என்னோடு ஒத்துப் போகவா? என்றான் அமீன் பெரிதாகச் சிரித்து.

"ஒத்துப்போக" என்று அவர் சொன்னதற்காக, கரகோசம் செய்தான் அமீன்.

அன்று நள்ளிரவில் அமீனின் அலுவலகத்தில் அவனுக்கு விசுவாசமாக அதிகாரிகள் ஒன்றுகூடினர்.


"இன்றிலிருந்து பத்து நாட்களுக்குள் உகண்டா ஜனாதிபதி மாற்றப்படுவார் என்றான் அமீன் தவிர, தானே ஜனாதிபதியாகப் போகிறேன். என்று நேரடியாகக் கூறவில்லை.

சட்டென்று எழுந்து நின்ற சில அதிகாரிகள் "தாங்கள்தான் ஜனாதிபதியாக தகுதி உடையவர்!" என்றனர். ஒரே குரலில் ஏனையோரும் ஆமோதிக்க, மிகுந்த திருப்தியை மறைத்தபடி தனது எதிர்பார்ப்புக்கு ஏற்ப அவர்கள் நடந்துகொண்டதை வியந்தபடி "அதனை பின்னர் பார்க்கலாம் என்றான்".

அதிகாரிகள் விடவில்லை நச்சரித்தார்கள். எல்லோரும் வற்புறுத்தினால் நான் எங்கே போவது சரி உங்கள் விருப்பம்!" என்றான் அமீன்.

அடுத்த சில நாட்களில் உகண்டாவில் பல விசித்திரங்களும், விபரீதங்களும் அரங்கேறின.

(தொடரும்)



மெண்டினா

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 547

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | | 12 |
| 13 | | | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | | 27 | 28 | 29 | |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **18.11.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 547
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 545 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 த | 3 ரி | 4 த் | 5 த | 6 ல் |
| 7 ப | 8 ஞ் | 9 ச | 10 வ | 11 டி | |
| 13 த் | 14 சை | 15 தி | 16 ரி | | 18 சு |
| 19 த் | | 21 டை | 22 த | 23 ய | 24 ம் |
| 25 ன | 26 தி | | 28 ல் | 29 ட | 30 மா |
| 31 ம | 32 ரு | 33 சே | | 35 கே | 36 டு |

**இடமிருந்து வலம்**

01. மனப்பால் குடித்தல்.
07. ஊரும்; வழுவும். (குழம்பியுள்ளது)
16. துதிகரம். கடைசி எழுத்து குதிரைப் பொது. (குழம்பியுள்ளது)
19. தனக்கு முன்னும். பின்னும் நிகழ்கின்ற மரபுகளைச் சுட்டிக் காட்டி நிற்பது. (குழம்பியுள்ளது)
27. அசையாநிலை; இரண்டு. (குழம்பியுள்ளது)
31. தகுதி; காதல். முதல் எழுத்து பெரிய எனலாம்.
35. அரசன்; மந்திரம். (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. தை மாதம்.
02. புதிய வகை தொழில்நுட்பம் ஒன்று. (திரும்பியுள்ளது)
03. ஒரு குடிவகை.
04. இதற்கு. இரண்டு ஆன்மாக் களிடையே ஒற்றுமை ஏற்படுத்துதல் என்று பொருள்படும்.
06. கருத்தரிப்பில் முதலில் உருவாகும் உறுப்பு. (திரும்பியுள்ளது)
17. புதன்; மதிமகன்.
21. கூர்மை; பெருமை.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 545 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.பத்மன், கோவில் வீதி, கொழும்பு -15

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ஆர்.கவிதா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
02. க.பிரியங்கா, கோப்பாய் மேற்கு, கோப்பாய்.
03. எம்.அசார், ஜின்னாநகர், திருகோணமலை.
04. பொ.பன்னீர்செல்வம், பிரதான வீதி, நுவரெலியா.
05. ச.அம்சவல்லி, கல்வளை, சண்டிலிப்பாய்.
06. கு. நிரஞ்சனா, வரணி இயற்றாலை, வரணி.
07. எம்.வைஸ்னவி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
08. ந.வரன், பூநகரி, கிளிநொச்சி.
09. உ.கார்முகிலன், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



ஜகச்ஜால புஜபல

# சந்திரமுகியாகும் ஹன்சிகா

கடந்த ஒரு வருடமாக நடிப்புக்கு தற்காலிக விடுப்பு கொடுத்துவிட்டு கலகலப்பு, மதகஜராஜா, தீயா வேலை செய்யணும் குமாரு படங்களை இயக்கிய சுந்தர்.சி தற்போது மீண்டும் நடிப்புக்கு திரும்பியிருக்கிறார். அரண்மனை படத்தை இயக்குவதுடன் அதில் ஹீரோவாகவும் நடிக்கிறார். மேலும் இன்னொரு கதாநாயகனாக வினய் நடிக்க, ஹன்சிகா, ஆண்ட்ரியா, லட்சுமிராய் மூன்றுபேரும் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள். இவர்கள் அனைவரையும்கூடவே இருந்து கலகலப்பூட்டி, தீயாக வேலை செய்ய வைக்கும் முக்கிய வேடத்தில் நடிக்கிறார் சந்தானம். இதன் முதற்கட்டப் படப்பிடிப்பில் கலந்துகொண்ட ஹன்சிகா, தற்போது இரண்டாம்கட்ட படப்பிடிப்புக்காக ஹைதராபாத் பறக்க இருக்கிறார்.

த்ரில்லராக உருவாகிவரும் இந்தப் படத்தில் ஹன்சிகாவுக்கு சந்திரமுகி ஜோதிகா மாதிரி சவாலான வேடம் என்பதால், இதுவரையிலான தனது நடிப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நடித்து வருகி-றாராம்.





எதிர் வீச்சு

## ஆபாச வார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த சந்தானம்

மார்க்கெட்டை உயர்த்துவதற்காக இனி ஆபாச வார்த்தைகளை பயன்படுத்தப்போவதில்லை என்று முடிவெடுத்துள்ளாராம் சந்தானம்.

தற்போதைய நம்பர் ஒன் கொமடியனாக சந்தானம் பல படங்களில், ஹீரோக்களுக்கு இணையாக இன்னொரு ஹீரோ போலவே நடித்துவருகிறார்.

இதுதவிர, இரண்டு படங்களில் ஹீரோவாகவும் நடிக்கிறார்.

இந்நிலையில் என்றென்றும் புன்னகை படத்தின் டிரெய்லரில் அவர் பேசும் வசனத்துக்கு கடும் எதிர்ப்பு எழுந்தது.

இந்த காட்சியைப் பார்த்து பலரும் அவரை கடுமையாக விமர்சித்தனர். மேலும் கவுண்டமணி, வடிவேலு ஆகிய இருவரும் மறுபிரவேசம் செய்திருக்கும் இந்த நேரத்தில் தற்போது எழுந்திருக்கும் எதிர்ப்பால் தனது மார்க்கெட் போய்விடக்கூடாது என்றுகருதிய சந்தானம் இனி ஆபாசமாக, வசனம் பேசப் போவதில்லை என்று முடிவெடுத்துள்ளாராம்.

## தொகுப்பாளினி ரம்யா

விஜய் தொலைக்காட்சியின் அழகுத் தொகுப்பாளினி ரம்யாவிற்கு திருமணம் நிச்சயமாகியுள்ளது.

விஜய் தொலைக்காட்சியில் 'கிங் க்வீன் ஜோக்' என்ற நிகழ்ச்சியின் மூலம் தொகுப்பாளினியாக அறிமுகமானவர் ரம்யா.

பின்னர் வாய்ப்புகளும் குவிந்ததோடு ரம்யாவுக்கு ரசிகர்களும் குவிந்தனர்.

விசுவல் மீடியா படித்துள்ள



பரம்சோதி

## படிப்பை பாதியில் நிறுத்தியதால் கவலைப்படும் - கரீனா கபூர்

நடிக்க வந்ததால் படிப்பை பாதியிலேயே நிறுத்தியதை நினைத்து கவலைப்படுகிறாராம் கரீனா கபூர். பல வெற்றிப்படங்களை கொடுத்து பொலிவூட் ரசிகர்களின் கனவுக் கன்னியாக வலம்வரும் கரீனா சினிமா குடும்பத்தில் இருந்துவந்தவர். இவரது தந்தை ரந்தீர் கபூர் ஒரு நடிகர். கரீனாவின் அக்காதான் நடிகை கரிஷ்மா கபூர்.

இந்நிலையில் இவர் இம்ரான் கானுடன் சேர்ந்து நடித்துள்ள 'கோரி தேரே பியார் மெய்ன்' படத்தை விளம்பரப்படுத்த அமிதாப்பச்சன் நடத்தும் கௌன் பனேகா குரோர் பதி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். அப்போது நிகழ்ச்சியில் பேசிய கரீனா, நான் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன், படங்களில் அதிக ஆர்வமாக இருந்ததால் என்னால் படிக்க முடியவில்லை. ஆனால் அதற்காக தற்போது வருத்தப்படுகிறேன் என்றும் படிப்பது முக்கியம், நிறையப் படிக்காவிட்டாலும் கொஞ்சமாவது படித்திருக்கவேண்டும் எனவும் கூறியுள்ளார். கோரி தேரே பியார் மெய்ன் படம்வரும் 22ஆம் திகதி வெளியாகவுள்ளது.

## 'ஆரம்பம்' இந்தியில் ரீமேக்

தமிழ் மற்றும் தெலுங்கில் ஹிட்டாகும் படங்களை இந்தியில் ரீமேக் செய்ய பொலிவூட்டின் முன்னணி நடிகர்கள் மிகவும் ஆர்வமாக உள்ளனர். இந்நிலையில் தீபாவளி சரவெடியில் வெடித்துக்கொண்டிருக்கும் அஜித்தின் ஆரம்பம் படத்தை இந்தியில் ரீமேக் செய்ய விரும்புகிறாராம் அக்ஷய்குமார்.


மேலும் ரீமேக் உரிமையை வாங்கத் தான் தயாராக இருப்பதாகவும் தயாரிப்பாளர்களிடம் தெரிவித்துள்ளார்.


ஏ.ஆர். முருகதாஸ் தமிழில் விஜய்யை வைத்து எடுத்த துப்பாக்கி படத்தை இந்தியில் ரீமேக் செய்துவருகிறார். இந்த படத்தில் விஜய் கதாபாத்திரத்தில் அக்ஷய்குமார் தான் நடித்து வருகிறார். விஜயகாந்த், சிம்ரன் நடித்த ரமணா படத்தை க்ரிஷ் என்பவர் இந்தியில் 'கப்பார்' என்றபெயரில் ரீமேக் செய்கிறார். இந்த படத்தில் விஜயகாந்த் கதாபாத்திரத்தில் அக்ஷய் குமார் நடிக்க இருக்கிறார்.



பிரியமுடன் பிரியா






## ப்பாளினி ரம்யாவிற்கு டும் டும் டும்....

லைக்காட்சியின் அழகுத் ரம்யாவிற்கு திருமணம் ளது.
லைக்காட்சியில் 'கிங் க்வீன் நிகழ்ச்சியின் மூலம் யாக அறிமுகமானவர் ரம்யா. ய்ப்புகளும் குவிந்ததோடு ரசிகர்களும் குவிந்தனர். விசுவல் மீடியா படித்துள்ள இவர் இதுவரை சீரியல் வாய்ப்புகளையும், சினிமா வாய்ப்பினையும் தவிர்த்தே வந்திருக்கிறார்.

இந்நிலையில் இவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாம். அப்பா, அம்மா பார்த்துவைத்த மாப்பிள்ளையை திருமணம் செய்து கொள்ளப்போகிறாராம்.

மாப்பிள்ளை பெயர் அஜித். லண்டனில் எம்.எஸ் சட்டம் மற்றும் பொருளாதாரத்தில் பட்ட மேற்படிப்பு படித்திருக்கிறாராம்.

லண்டன் மாப்பிள்ளையாக இருந்தாலும் சென்னையை விட்டு போகமாட்டாராம். அஜித்துக்கும் சென்னைதான் ரொம்பப் பிடிக்குமாம். அதைவிட ரம்யாவின் நிகழ்ச்சிகள் ரொம்ப ரொம்ப பிடிக்குமாம்.

பெப்ரவரியில் திருமணம் நடைபெற உள்ளது, அதற்கு முன்னதாக திருமண நிச்சயம் நடைபெற்றுள்ளது.

## நண்பர்களுக்கு கை கொடுக்கும் ஆர்யா!

ஹாட்ரிக் வெற்றியாளர் ராஜேசுடன் மீண்டும் கூட்டணி சேரப்போகிறார்களாம் ஆர்யா மற்றும் சந்தானம். இயக்குனர் ராஜேஷ் மற்றும் அவரது நிரந்தர கொமடியன் சந்தானம் ஆகிய இருவருக்கும் இப்போது பெரிய ஹிட் அவசியம் என்றநிலையை ஏற்படுத்தியுள்ளது சமீபத்தில் வெளிவந்த அழகுராஜா.

இந்த சூழலில் சட்டென தனது நண்பர்களுக்கு கைகொடுக்க வந்துள்ளார் ஆர்யா.

ராஜேஷ் இயக்கிய முதல் மூன்று படங்களிலும் நடித்தவர் ஆர்யா. சிவா மனசுல சக்தி மற்றும் ஓகே ஓகே போன்றவற்றில் முக்கிய வேடத்திலும், பாஸ் என்கிற பாஸ்கரனில் ஹீரோவாகவும் நடித்திருந்தார். மூன்றுமே சூப்பர் ஹிட் படங்கள். இப்போது ஆர்யா - சந்தானம் நடிக்கும் புதிய படத்தை சூட்டோடு சூடாக உருவாக்குகிறார் ராஜேஷ்.

ஆர்யா இப்போது மகிழ் திருமேனியின் படம் மற்றும் எஸ்.பி ஜனநாதனின் புறம்போக்கு போன்ற படங்களில் நடித்துவருகிறார்.

ஆனாலும் ராஜேுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவருக்கும் கால்ஷீட் கொடுத்துள்ளாராம்.




## விஷாலுக்கு புத்திமதி

இனிமேல் அக்ஷன் கதைகளில் நடியுங்கள் என்று விஷாலுக்கு அட்வைஸ் செய்துள்ளாராம் பிரபல விநியோகஸ்தர் அன்புச்செழியன்.

விஷாலின் பாண்டியநாடு படம் திரையரங்கு வரும் ரசிகர்களை பூங்கொத்து கொடுத்து வரவேற்ற வண்ணம் உள்ளது.

மதகஜராஜா படத்திற்கு சுமார் நாற்பது கோடியை கடனாகக் கொடுக்க முன்வந்த அன்புச்செழியன் அந்த படம் கைநழுவிப்போன கஷ்டத்திலிருந்த விஷாலுக்கு, கவலைப்படாதீங்க உங்க பாண்டிய நாடு படத்தையும் நானே ரிலீஸ் பண்ணி தர்றேன் என்றுகூறி வெற்றிகரமாக ரிலீஸ் செய்தும் கொடுத்துவிட்டார். இவர் மட்டும் இந்த படத்தை கையில் எடுக்கவில்லை என்றால் அஜித்தின் ஆரம்பம் படத்தை மீறி திரையரங்குளை ஒதுக்கியிருக்க முடியாது என்கிறார்கள் விநியோகஸ்தர்கள். இதற்கிடையில் விஷாலின் அடுத்தடுத்த படங்கள் எப்படியிருக்கவேண்டும் என்பது குறித்தும் அட்வைஸ் செய்துள்ளாராம். இனிமேலும் தனக்கு நெருக்கமான நண்பர்களுக்கு படம் கொடுக்கிறேன்னு இறங்கி வீணா போகாதீங்க என்றும் ஹரி மாதிரி அக்ஷன் பட இயக்குனர்களுடன் சேர்ந்து படம் பண்ணுங்க, அப்பதான் இழந்த மார்க்கெட்டை பிடிக்க முடியும் எனவும் கூறியுள்ளாராம்.

## கதையின் ஆவல் படமெடுக்கத் தூண்டியது!

திருடன் பொலிஸ் விளையாட்டு விளையாடப்போகிறார் அட்டகத்தி தினேஷ். சென்னை 28, குங்குமப் பூவும் கொஞ்சும் புறாவும், மற்றும் தேசிய விருது பெற்ற ஆரண்ய காண்டம் ஆகிய படங்களை தயாரித்த எஸ்.பி.சரணின் கேபிடள் பிலிம் ஒர்க்ஸ் நிறுவனத்துடன் கெனன்யா பிலிம் சார்பில் து.செல்வகுமார் இணைந்து தயாரிக்கும் படம் திருடன் பொலிஸ். இதில் ஹீரோவாக அட்டகத்தி தினேஷ் நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக ரம்மி புகழ் ஐஸ்வர்யா நடிக்கிறார். இப்படம் குறித்து தயாரிப்பாளர் எஸ்.பி.சரண் கூறுகையில், நான் எப்போதுமே என் படங்கள் வித்தியாசமாக இருக்கவேண்டும் என்று மெனக்கெடுவேன்.

எனது முந்தைய படங்கள் சிறந்த படங்களாகவே அமைந்தன. சிறிதுகாலம் படத்தயாரிப்பில் நான் ஈடுபடாமல் இருந்தாலும், இப்போது திருடன் பொலிஸ் படத்தின் இயக்குனர் கார்த்திக் கூறிய கதை மீண்டும் உடனடியாக படம் எடுக்கும் ஆவலை தூண்டியது என்று கூறியுள்ளார்.






## தழும்பும் ஓர் அழகு!

தமிழில் அசுர வேகத்தில் வளர்ந்துவரும் நடிகைகளில் ஒருவர் லட்சுமி மேனன். இவர் நடித்த கும்கி, சுந்தரபாண்டியன், குட்டிப்புலி, பாண்டிய நாடு என அனைத்து படங்களுமே ஹிட் ஆனதால் சந்தோசத்தில் திக்குமுக்காடி கொண்டிருக்கிறார். இந்நிலையில் இவரது முகத்தில் இருக்கும் சிறிய தழும்பு ஒன்றை பிளாஸ்டிக் சேர்ஜரி செய்து மறைக்கப்போகிறார் என்ற பேச்சு நிலவிவந்தது. இதனை திட்டவட்டமாக மறுத்துள்ளார் லட்சுமி மேனன். இதுகுறித்து அவர் கூறுகையில், முகத்தில் உள்ள தழும்பை பிளாஸ்டிக் சேர்ஜரி பண்ணப்போறதா சொல்றாங்களாம். அப்படி ஒரு எண்ணம் முதல் இருந்திச்சு, இப்போ அந்த ஐடியாவை விட்டுட்டேன். ஏன்னா அந்த தழும்பு எக்ஸ்ட்ரா அட்ராக்ஷன்னு எல்லோரும் சொல்றாங்க என்று கூறியுள்ளார்.

தேன் கிண்ணம்

# மன்னித்து விடு



அவன் நந்தவனம்
வந்த நிலா
சட்டென்று அமாவாசை
ஆனது கண்டு...
அவன்
அதிர்ந்து போனான்
பாதியில் அவனைப் பிரிந்து
முகவரி சொல்லாமல் போனது.
ஏய்... நிலவே!
இப்படியொரு
பிரிவு வருமென்று
தெரிந்தால் உன்
நந்தவனம் நோக்கி
வந்திருக்க மாட்டேன்
எரியும் நெஞ்சோடு
இறுதியாக உன்னிடம்
ஒரு கேள்வி....
என்னை இனிமேல்
மன்னித்து விடு....

K.வாலேந்திரன், கொள்ளுப்பிட்டி.

# முட்கள்



ஐம்பொறி அடங்கலாக எனது
கைகள் நெஞ்சு முதுகு
இங்கெல்லாம்
கட்புலனாகாத முட்கள் தைத்து
மரணவலி ஏற்படும் பொழுதுகளே
என் வாழ்வில் அதிகம்.

தொடர்பனிபொழியும்
தேசமொன்றில்
உடலும் உணர்வும் விறைத்தபடி
ஆயுள் நாட்களினால்
அலைக்களிக்கப்படுபவன் நான்
என் பெயர் புலம்பெயர்ந்தவன்.

எனது இரவுகளை உறவுகளுக்காகவும்
பகல்களை வெள்ளைத்
தோல்களின்
புன்னகைக்காகவும்
சமர்ப்பித்தமையால்
சயன அவஸ்தையினால் எனது
விழிகளுக்குள் ஓராயிரம் முட்கள்
குத்தும் பொழுது ஆத்மா இடும்
மரண ஓலம் யாருக்கும்
கேட்பதில்லை.

நிலவைப் பிடித்து வருவோம் வா
என மழலையை முதுகில் ஏற்றிய
நாட்களில் நினைவு
மீட்டல்களினால்
முதுகைத் தைக்கும் முட்களின்
துன்புறுத்தலினால் என்னுயிர் நாடி
அறுந்து போய்விடுகிறது.

என்னைப் பிரியநேர்ந்த
அந்தக் கடைசி நிமிடங்களில்
நெஞ்சில் முகம் புதைத்து
கண்ணீர் பிலிற்றிய எனது
இல்லாளின் இல்லாமையினால்
நெஞ்சுரோமங்கள் ஒவ்வொன்றும்
முட்களாய் சபித்துப் போகையில்
வேதனையின் விளிம்புகளைத்
தொட்டிருக்கிறேன்.

பொன்னிறக் கேசமும்
பூனைக்கண்ணும்
கொண்டோர் புரியாதமொழியில்
என்னை தூஷிக்கும் பொழுதுகளில்
யாதொன்றும் வாய்பேசா
என்னுதடுகளை அறுக்கும்
முட்களைப் பிடுங்க
வன்கரங்கள் எங்கேனுமுண்டோ?

சிதையேறிய என் தாய்க்கும்
தந்தைக்கும் கொள்ளியிட
முடியாது போன எனது
கைகளை நிந்திக்கும் முட்களின்
ரணவலியில் சிதை நெருப்பின்
வெம்மையை அளந்து பார்த்து
அயர்ந்துபோகிறேன்.

அடர்ந்த அக்கினிக்குள் ஒளியூட்டும்
சுவாலை உண்டு என்பதைப்போல்
ரணமாகிப் போன என் சரீரத்தில்
உள்ளங்கால்களில் மட்டும் எந்த
முள்ளும் பாய்ந்துவிட
முடியாது ஏனெனில் என்னை
நிட்டுரப்படுத்தும் முட்களை
பொசுக்க எனது தாய்மண்ணில்
நான் காலாற நடக்கவேண்டும்

— லவன்.

# இராணுவச் சீருடைக்குள்ளும் இதயம்

என்னைக் கண்டதும்
ஏன் இத்தனை அச்சம்?
நான் நீங்கள் நினைக்கும்
நச்சுப் பாம்பு அல்ல!

போதகர் சீருடையில் வந்தால்
போற்றி வணங்குகிறீர்கள்
என்னைச் சீருடையில் கண்டால்
ஏன் இத்தனை அச்சம்?

என்னுடன் பழகாமல்
என் குணம் எப்படித் தெரியும்?
உங்கள் கண்கள் பார்ப்பது
என் உள்ளம் அல்ல....
என் உடை மட்டும்தான்!



இராணுவச் சீருடை அணிந்தால்
இயந்திரத் துப்பாக்கி
கையில் முளைக்கும்
இயந்திரத்துப்பாக்கியை இயக்கும்
இதயமும் இருப்பதை நினையுங்கள்!

நான் போட்டிருக்கும்
சூட்டும் பூட்டும்
எனக்குரியது அல்ல...
என் தொழிலுக்குரியது!

உங்களையும் என்னையும்
துவேசம் செய்து
தேசம் சிதைக்கும்
நாசகாரிகளின் கதைகேட்டு
நட்பின் கழுத்தை அறுக்காதீர்கள்!

உங்களைப் போல்
உணர்வுகள் எனக்கும் இருக்கு
நான் வேறு
நீங்கள் வேறு அல்ல....
நாம் எல்லோரும் மனிதர்கள்!

மனிதத்தை மறந்து வாழ்பவன்
திருந்தி வாழ்ந்தால்
இந்த சீருடை எதற்கு?
சீருடையை இப்போதே களைகிறேன்
என் மனதை மட்டும் பாருங்கள்
உங்கள் மனிதம் போல்
எனக்குள்ளும் மனிதம்
இருப்பதை காண்பீர்கள்

A.பாரிஸ்,
கட்டுக்கெலியாவ.

# ஈழத்துக் கவிஞர்கள்

## சந்திரவதனா செல்வகுமாரன்



சந்திரவதனா வடபுலத்தில் அமைந்துள்ள மேலைப் புலோலியூர், பருத்தித்துறை, ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மு.ச.தியாகராஜா, சிவகாமசுந்தரி தம்பதிகள் பெற்றெடுத்த எண்மரில் இரண்டாமவர். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்றவர். கணிதத்துறையில் மிகுந்த ஆர்வமும், ஈடுபாடும் கொண்டவர். 1986லிருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்ந்துவருகிறார்.

சந்திரவதனா செல்வகுமாரன் ஜேர்மனிய, ஈழத்து எழுத்தாளர். இவர் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை பல்வேறு தளங்களிலும் எழுதிக்கொண்டிருக்கிறார். பல இணைய இதழ்களின் ஆசிரியராகவும் இருக்கிறார்.

1975லிருந்து எழுதிவரும் இவரது எழுத்தார்வம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மூலமாகத் தொடங்கியது. இவரது பன்முகப்பட்ட படைப்புகள் வானொலிகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்கள் பலவற்றில் வெளிவந்துள்ளன. இவரது மனஓசை வலைப்பதிவு இவரின் சமூக, அரசியல், இலக்கிய மற்றும் சுய உணர்வுகளின் வெளிப்பாடாக விரிந்து கிடக்குமொரு தளம். சிறுகதை, கவிதை, கட்டுரையென இவரது பன்முக ஆற்றலை வெளிப்படுத்தி நிற்பன இவரது ஆக்கங்கள்.

2002 இல் இவர் ஆரம்பித்த மனஓசை இணைய இதழும், 2003 இல் இவர் ஆரம்பித்த மனஓசை வலைப்பூவும்(வலைப்பதிவு), பெண்கள் வலைப் பதிவும் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வெளிவந்த நூல்கள்
மனஓசை சிறுகதைத் தொகுப்பு
(ஆவணி 2007)

பதிப்பித்த நூல்கள்
தீட்சண்யம் - (கவிதைத்தொகுப்பு - 2009)
தொப்புள் கொடி - (நாவல் - 2009)



# அன்புள்ள அம்மா

பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

ஏனையோருக்கு கருப்பைச் சுருக்கம் ஏற்படும்போதே தலை இறங்கத் தொடங்கும்.

தலை கீழிறங்காமல் இருக்கும் பட்சத்தில் சுகப்பிரசவம் சிலவேளைகளில் நடக்கமுடியாமல் போகலாம்.

**தலை இறங்காமைக்குக் காரணம்.**

1. திரும்பாத தலை.
2. பெரிய தலை.
3. சிறிய இடுப்பு.
4. நஞ்சுக்கொடி (சூல்வித்தகம்) அடிப்பகுதியில் இருத்தல்.



## –நடு 3 மாதங்கள்

### இறுதி 3 மாதங்கள்

இந்த மாதங்களில் உங்கள் உடலில் சடுதியான மாற்றங்கள் பல ஏற்படும். நிறை சராசரியாக கிழமைக்கு 500gm (அரைக்கிலோ) அதிகரிக்கும்.

உங்கள் கிளினிக்கில் உங்களை 2 கிழமைக்கு ஒருமுறை அல்லது ஒவ்வொரு கிழமையும் பரிசோதிப்பார்கள். தேவை ஏற்படின் குருதிப் பரிசோதனை அல்லது ஸ்கான் பரிசோதனைக்கும் அழைப்பார்கள்.

இக்காலத்தில் குழந்தை பெரும்பாலும் தலைகீழாக திரும்பி, தலை இடுப்புக் குழிக்குள் இறங்கும். 95 வீதமான குழந்தைகள் தலையாலேயே பிறக்கும். 5 வீதமானவை காலால் பிறக்க முயற்சிக்கும்.

குழந்தையின் அளவுகாரணமாக உங்களுக்கு உடல் முட்டாகவும் அசௌகரியமாகவும்மிருக்கும். உணவு அதிகளவில் உண்ண இயலாதிருக்கும். உங்கள் திகதியை அண்மிக்கும்போது குழந்தையின் தலை இடுப்புக்குழிக்குள் இறங்கியதும், உங்கள் அசௌகரியம் சற்றுக் குறைவடையும்.

பெரும்பாலான கர்ப்பிணிகளின் முதலாவது பிரசவத்தின்போது 36ஆம் கிழமையளவில் (9மாதம்) தலை இடுப்புக்குழிக்குள் இறங்கத் தொடங்கும். 36 கிழமைக்கு அண்மையாக, கருப்பைக்கழுத்திலிருந்து வெள்ளை நிறச்சளி போன்ற பதார்த்தம் வெளிவரலாம். இது Show எனப்படும்.

இறுதி 3 மாதங்களில் கருப்பைச் சுவர் சிலவேளைகளில் சுருங்கி விரியலாம். இது உண்மையான பிரசவ வேதனை அல்ல. அதை Braxton Hicks என்று சொல்வார்கள். கருப்பை, சுருங்கிப் பழகுவதாகவும் சிலர் கூறுவார்கள்.

இதன்போது ஏற்படும் வலி மெல்லியதாகவும், குறுகிய காலத்துக்கு நீடிப்பதாகவும் இருக்கும். பெரும்பாலும் 3 - 4 மணித்தியாலங்களில் வலி நின்றுவிடும்.

தலை கீழ் இறங்கத் தொடங்கியதும் (இடுப்புக்குழிக்குள்) உங்கள் உடல் சற்று இலேசாக இருக்கும். ஆனால் சிலருக்கு அடிவயிற்றில் மெல்லிய நோ ஏற்படும். சிறு நீர்ப்பை மீது குழந்தையின் தலை அழுத்துவதால் அடிக்கடி சிறுநீர் வருவதுபோல் தோன்றும். சிலருக்கு சிறுநீர் கட்டுப்பாடு இல்லாமல்கூட போகக்கூடும்.

(தொடரும்)

## தொப்பை குறைக்கும் பசலைக் கீரை

பசலைக் கீரையில் விற்றமின் ஏ சத்து மிகுதியாக உள்ளது. குளிர்ச்சியையும் கொடுக்கக்கூடியது.

பெண்களுக்கு வெள்ளைபடுதல் அதிகமாக இருந்தால் இந்தக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் குணம் தெரியும் என்பர். வயிற்றில் அதிகமாகச் சதை இருந்தாலும் (தொப்பை) குறைக்கக்கூடிய சத்து இக்கீரைக்கு உண்டு.

அதேபோன்று, பசரைக் கீரையிலும் ஏ, பி விற்றமின் சத்து அதிகம் உண்டு. இந்தக் கீரை தரையோடு தரையாகப் படரும். தண்டு மிகமிக மெல்லிய மென்மையாக இருக்கும். இது மிக மிகச் சிறியதாக, எள்ளின் வடிவத்தில் இருக்கும். கிராமத்தில் இக்கீரையைப் பேன் கீரை என்பர். பேன் போன்ற வடிவத்தில் இருப்பதால் இப்படிச் சொல்வது வழக்கமாக உள்ளது.

மற்ற கீரைகளில் இல்லாத ஒரு சத்து இக்கீரையில் உள்ளது. இரத்தம் குறைந்தவர்கள், 10 நாள்கள் இக்கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் இரத்தம் நன்கு விருத்தியாகும் என்பர். இக்கீரையை தண்டோடு சேர்த்தே சமைக்கலாம்.



தரையோடு படர்வதால், வாங்கி வரும் கீரையை நன்கு தண்ணீரில் மண் போக கழுவி-னால் போதும். பசலை, பசரை இந்த இரண்டு கீரைகளையுமே, புளிசேர்த்தும் அல்லது பருப்பில் போட்டும் வேக வைத்து, வெங்காயம், தக்காளி சேர்த்து சமைத்தால் சுவை மிகுதியாகவும் இருக்கும். உடல் நலத்திற்கும் ஏற்றது.


எந்த விதத்திலேயும் கீரைகளை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது. ஊட்டச்சத்து நிறைந்ததும் ஆகும்.

## மொபைல் போன் உருவாக்கிய நோய்



இன்றைய உலகம் மொபைல் போன்களால், கையளவில் சுருங்கிவிட்டது. இதனால், நாம் பல வசதிகளை அனுபவிக்கமுடிகிறது. யாருமே அணுக முடியாத இடத்தில், நிலையில் இல்லை என்ற நிலை உருவாகி உள்ளது. எதனையும், உலகின் எந்த மூலைக்கும் அனுப்பமுடியும் என்ற வசதி நம் கைகளில் வந்து அமர்ந்துள்ளது. அதேநேரத்தில், இதே மொபைல் போன் பயன்பாட்டினால், நாம் பல்வேறு மன, உடல் நோய்களுக்கு ஆளாகி உள்ளோம். மேற்கு நாடுகளில், இது குறித்து பல மருத்துவ ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு உடல்ரீதியான, மனரீதியான பிரச்சினைகளைக் கண்டறிந்துள்ளனர். அவற்றில் முக்கியமானது, நோமோபோபியா (Nomophobia).

நோமோபியா என்பது ஸ்மார்ட் போன்களால் பெற்றுள்ள, எங்கும் காணப்படுகிற ஒரு மன வியாதியாகும். இந்த சொல், மொபைல் போன் பயன்படுத்தும் பலவகையான பயனாளர்களை ஆய்வுசெய்த மேலை நாட்டு அமைப்பு ஒன்று உருவாக்கியுள்ளது. இந்த சொல் 'nomobile phobia' என்பதன் சுருக்கமாகும். மொபைல் போன் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படுகையில் இந்த மன வியாதிக்கு நாம் ஆளாகிறோம்.



ஒரு விமானம் தரை இறங்கியவுடன், அதில் பயணம் செய்தவர்களைப் பாருங்கள். மிகவேகமாகத் தங்கள் மொபைல் போனை ஸ்விட்ச் ஒன் செய்து, அப்பாடா என்று பெருமூச்சு விடுவார்கள். அதுவரை பல மணி நேரம் மொபைல் போன்மூலம் யாரையும் தொடர்பு கொள்ளமுடியாததால், ஒருவகை விரக்திக்கு ஆளாகின்றனர். இதுவே நோமோபோபியா ஆகும்.

பல தலைமை நிர்வாகிகள், மருத்துவர்களை ஆய்வு செய்தபோது, தாங்கள் காலையில் தூக்கத்திலிருந்து விழித்தவுடன், முதலில் செய்திடும் காரியம், மொபைல் போனை ஸ்விட்ச் ஒன் செய்து, அழைப்புகள் உள்ளனவா என்று பார்ப்பதுதான். அதுவரை, மொபைல் போனைப் பயன்படுத்தாமல் இருந்தது அவர்களிடம் இந்த போபியாவினை உண்டாக்கி உள்ளது.


அண்ட்ரோய்ட் சிஸ்டத்தில், இதே நோமோபோபியா என்ற பெயரில் ஓர் அப்ளிகேஷன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அப்ளிகேஷன் நாம் எந்த வகைகளில், மொபைல் போன் ஒன்றை மிக அதிக உணர்ச்சிபூர்வமாக அதிகமாகப் பயன்படுத்துகிறோம் என்பதனை அளக்கிறது.

## வீட்டில் கிடைக்கும் பல் வலி நிவாரணிகள்...

நம்மில் பலருக்கு திடீரென்று தாங்க முடியாத பல் வலி ஏற்படுவதுண்டு. இதை பாதுகாப்பான இயற்கை முறையில் எப்படி குறைப்பதென்று தெரிந்துகொள்வது மிகவும் முக்கியம்.

கடுகு, மிளகு, அல்லது பூண்டு போன்ற பல இயற்கையான மூலிகை வலி நிவாரணிகள் உள்ளன.

பல் வலிக்கு கிராம்பு தைலம் சிறப்பான மூலிகை மருந்துகளில் ஒன்றாக கருதப்படுகிறது. கிராம்பு தைலத்துடன் கொஞ்சம் மிளகு தூள் கலந்து, பல்லின் பாதிக்கப்பட்ட பகுதியின் மேல் வைக்கவேண்டும்.



கடுகு எண்ணெய, பல்வலியை குறைக்க மற்றொரு இயற்கையான நிவாரணி. கடுகு எண்ணெயுடன் ஒரு சிட்டிகை உப்பு கலந்து பாதிக்கப்பட்ட ஈறுகளின் மேல் தடவவேண்டும்.

வெங்காயத்தின் ஒரு துண்டை பாதிக்கப்பட்ட ஈறு அல்லது பல் பகுதியின் மேல் வைப்பதன்மூலம் பல்வலியை சிறப்பாக குறைக்க முடியும்.

அதைவிட, சாமந்தி, வேலம், போன்ற மூலிகை மருந்துகளை கொண்டு நீங்கள் வீட்டிலேயே பல் வலியை சரியாக்க வாய் கொப்பளிக்கும் நீரை தயாரிக்கலாம். துளசி, மற்றும் பெருங்காயம் போன்றவையும் உபயோகமான மருத்துவ மூலிகைகள்.

திடீரென்று நீங்கள் பல் வலியால் பாதிக்கப்பட்டால், மிகவும் சூடான, மிகவும் குளிர்ச்சியான, மற்றும் இனிப்பான உணவுகளை தவிர்க்கவும். இவைகள் வலிக்கும் பல்களை மேலும் பாதிக்கும் நீங்கள் உங்கள் உணவை பற்றி கவனமாக இருக்கவேண்டும். அதிகமாக காய்கறிகள், பழங்கள், தானியங்கள் போன்றவைகளை சாப்பிடவேண்டும். மா உணவுகளை தவிர்க்கவேண்டும்.



மாதுளம் பழச்சாறுடன் சமமாக இஞ்சி சாறு கலந்து, இத்துடன் தேன்கலந்து சாப்பிட, நாட்பட்ட வறட்டு இருமல் குணமாகும். சிறுநீரகக் கற்களால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் ஒரு அப்பிள், அல்லது வாழைத்தண்டு ஜூஸ் சாப்பிட்டு வர நல்ல நிவாரணம் கிடைக்கும். ஆனால் வாழைத்தண்டு ஜூஸ் அளவுக்கு அதிகமாகக் குடிப்பதும் நல்லதல்ல.

மழைக் காலங்களில் கால் விரல்களுக்கு இடையே உண்டாகும் சேற்றுப்புண் குணமாக மஞ்சள் தூளுடன் தேனைக் கலந்து களிம்புபோல பூசலாம். இரண்டு கரண்டி தேனை ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து குடித்தால் நல்ல தூக்கம் வரும்.


## வறட்டு இருமல் குணமாக....




# ஊடகமும் பெண்களும்

**ஒரு** பெண் பத்திரிகையாளர் மாற்றுச் சிந்தனையும் அரசியல் ரீதியிலான புரிதலும் உள்ளவராக இருந்தாலும் ஊடகங்களில் சமையல் குறிப்பு எழுதுவதற்கும் நடிகைகளின் ஆடை, அணிகலங்களை சிலாகிப்பதற்கும்தான் பணிக்கப்படுவர்.

அதிகபட்சமாக அரசியல் வாதிகளின் மனைவிகளை பேட்டி காணும் வாய்ப்பு கிட்டலாம்! பெண்ணின் பணிகளாக ஆணாதிக்கத்தால் உருவான இச்சமூகம் ஆண்டாண்டு காலமாக சொல்லி



வரும் சமையல், வீட்டுப்பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு போன்றவற்றின் மெருகேற்றப்பட்ட வடிவங்கள் இவை.

சமூகம் எப்படி இதையெல்லாம் மீறி வரக்கூடாது என்கிறதோ, அதையேதான் ஆணாதிக்க சிந்தனை பீடித்த ஊடகவாதிகளும் ஊடகப் பெண்களிடம் எதிர்ப்பார்க்கிறார்கள். இதை எதிர்க்கும் பெண் ஆசிரியர் குழுவால் திட்டமிட்டு ஒதுக்கப்படுவர். ஒருகட்டத்தில் மனஉளைச்சலுக்கு ஆளாகி பத்திரிகை துறையிலிருந்து ஒதுங்கிவிடுவார்.

சுயசிந்தனையும் ஊடகம் குறித்த புரிதலும் இல்லாத பெண்களுக்கு ஊடகங்களில் சிறப்பான வரவேற்பு கிடைப்பதையும் பார்க்கமுடிகிறது. ஆண்களைப் போல சிந்திப்பதற்கும் ஆண்களின் ரசனைக்கேற்ப தங்களுடைய எழுத்தை வடிவமைத்துக்கொள்ளவும் இந்தப் பெண்கள் பழக்கப்படுத்தப்படுகிறார்கள்.

குடும்பம், அரசியல் உள்ளிட்ட சமூகத்தின் மற்ற தளங்களில் பெண் எப்படி, ஆணின் சிந்தனைகளை உள்வாங்கி அதை செயற்படுத்தும் கருவியாக இருக்கிறாளோ அதைப்போலவே ஊடகப் பெண்ணும் செயற்படுகிறாள்.

அவளை அப்படியே வைத்திருப்பதில்தான் ஆணாதிக்கத்தின் இடம் தக்கவைத்துக் கொள்ளப்படுகிறது. இப்படி சிந்தனை மழுங்கடிக்கப்பட்ட பெண்களே பாலியல்ரீதியிலான சுரண்டலுக்கும் ஆளாகிறார்கள். அறிவையும் உணர்வையும் அடிப்படையாகக் கொண்ட பணியில் உடல் முன்னிறுத்தப் படுகிறது. வழமையாக பெண்ணின் உடல் முன்னிறுத்தப்படும்போது கட்டமைக்கப்படும் அதிகாரம் இங்கேயும் நிகழ்கிறது. உடல் அதிகாரத்தை கட்டுக்குள் வைத்திருக்க நினைக்கும் ஆணின் செயற்பாடு ஒரு பெண்ணோடு நின்றுவிடுவதில்லை.

குறுஞ்செய்தியோடு ஆரம்பிக்கும், பிறகு உடல் சமிக்ஞைகள், இரட்டை பொருள்தரும் பேச்சு, தான் நினைத்தால் எதுவும் செய்யமுடியும் என்று அதிகாரத்தை காட்டுவது எதற்கும் வளையவில்லை எனில் பிரச்சினை ஆரம்பிக்கும். அடிமையைவிட கேவலமாக நடத்துவார்கள், அல்லது அலுவலக மேசையைப்போல அசையாத பொருளாக வைத்திருப்பார்கள். வளைந்து கொடுத்தால் பதவி உயர்வுகளும் இன்னபிற அங்கீகாரங்களும் தேடிவரும். அதிகாரத்தை கைகொண்டவனின் வழி இதுவெனில் இயலாமையில் துடித்துக் கொண்டிருக்கும் அவனுக்கு கீழ் உள்ளவர்களின் பணி சுற்றியுள்ள பெண்கள் குறித்து அவதூறுகள் சொல்வதும் கிசுகிசுக்களை புனைவதும்தான். ஊடகங்களில் தங்களை ப்ரோ பெமினிஸ்டு (Pro-Femenist) களாக காட்டிக்கொள்ளும் பலரது முழுநேர பணியே இதுதான்.

இத்தகைய சுரண்டலையும் அவதூறுகளையும் சகிக்க முடியாத எந்த பெண்ணும், அவள் அறிவுரீதியாக - பலமானவளாக இருந்தபோதும் அவளது முடிவு ஊடகத்தை விட்டு ஒதுங்குவதாகத்தான் இருக்கும். ஒதுங்குதலும் ஒதுக்குதலும் இயல்பாக நடந்தேறியபின் ஆணாதிக்கம் எக்காளமிட்டுச் சிரிக்கும்!

# இளநரைத் தொல்லையா?



விற்றமின், 'ஏ.டி.' சத்து நிறைந்த உணவுகளை, அதிகம் சாப்பிடுங்கள். மாமிச உணவு-களான, ஈரல், மீன் எண்ணெய், பால், வெண்ணெய் போன்றவற்றில், அவை அதிகம் உள்ளன.


அதிகமான மன நெருக்கடி, பதற்றம் அடைந்தாலும், முடி நரைக்கும். பதற்றத்தைக் குறைப்பது நல்லது. முடிந்த அளவு, 'ஹேர்டை' உபயோகிப்பதை தவிர்த்துவிடுங்கள்.

வெந்தயத்தை இரவே ஊறவைத்து, மறுநாள் அரைத்து தலையில் தடவி, ஊறியபின் குளித்தால், கூந்தல் பளபளப்பாக இருக்கும்.

நனைந்த முடியை, சின்ன சீப்புக்களால் சீவாதீர்கள். பெரிய பற்கள் உள்ள சீப்பை பயன்படுத்துங்கள். இருபது நாட்களுக்கு ஒரு முறை, முடியின் கீழ் பகுதியை அளவாக கத்தரித்துவிட்டால், நுனிப்பகுதி முடி முறிந்துபோவதை தடுக்கலாம். தலைக்கு, ஷாம்பு போடுவதற்கு முன், முடியை நன்றாக மசாஜ் செய்யவும். அப்படிச் செய்தால், தலையில் இரத்த ஓட்டம், அதிகரிக்கும்.

## சமையல் குறிப்பு

### தேங்காய் லட்டு



**தேவையான பொருட்கள்:**

துருவிய உலர்ந்த தேங்காய் - 3 கப்
சீனி - 2 கப்
பால் - 1 கப்


**செய்முறை:**

முதலில் ஒரு பாத்திரத்தில் பாலை ஊற்றி அடுப்பில் வைத்து, கொதிக்க விடவேண்டும். பாலானது நன்கு கொதித்ததும், அதில் துருவிய தேங்காய் சேர்த்து தொடர்ந்து கிளறிவிடவேண்டும்.

பின் சீனியை சேர்த்து கிளறி, தேங்காயானது பாலை முற்றிலும் உறிஞ்சும்வரை கிளறிக்கொண்டே இறக்கவேண்டும். கலவையானது பாத்திரத்தில் ஒட்டாமல், திரண்டு வரும்போது, அதனை இறக்கி சிறிதுநேரம் குளிர வைக்கவேண்டும்.

பின்பு கலவையானது வெதுவெதுப்பாக ஆனபின்னர், அதனை உருண்டைகளாகப் பிடித்து, தனியாக ஒரு தட்டில் வைத்து, நன்கு குளிரவைத்தால், சூப்பரான தேங்காய் லட்டு தயார்.

# உங்களுக்கு பொருத்தமானது எது?



* குட்டை கை வைத்த சாறி பிளவுஸ், தற்போது பெண்களிடையே பெஷனாகி உள்ளது.

* சிறிதளவு கைகள் பூசினால் போல் இருந்தால்தான், குட்டை கை வைத்த சாறி பிளவுஸ்கள், அவர்களுக்கு பொருந்தும்.

* மிகவும் குண்டான கைகள் உள்ள பெண்கள் மற்றும் மிக ஒல்லியான கைகளைக் கொண்ட பெண்கள், சாதாரண சாறி பிளவுஸ் தோள் பட்டையில், சிறுசிறு ப்ளீட்ஸ் கொண்ட சாறி பிளவுஸ்களை அணியலாம்.

* குண்டாக உள்ள பெண்கள், குட்டை கை உள்ள சாறி பிளவுஸ் அணிய ஆசைப்பட்டால், அந்த சாறி பிளவுஸை இறுக்கமாக தைத்து விடாதீர்கள். சிறிது தளர்வாக, சிறிதளவே இறக்கம் கொடுத்து தைத்துக் கொள்ளுங்கள்.

* குட்டைக் கையில் இறுக்கமாக வைத்தால், சதை வெளியே தொங்கிக்கொண்டு அசிங்கமாகத் தெரியும்.

* அதேபோல், இடுப்பில் உள்ள சதை தெரியாமலிருக்க வேண்டுமானால், இடுப்புவரையில் இறக்கம் தந்து தைக்கச் சொல்லுங்கள்.

* முதுகின் அளவை அதிகப்படுத்தி பிளவுசை இறக்கித் தைத்தால், இடுப்பின் சதை மறைந்து, பார்க்க அழகாக இருக்கும்.

* இப்படிப்பட்ட சாறி பிளவுஸ்கள் அணிவதால், அதுவும் குண்டுப்பெண்களின் முதுகு ரொம்ப அழகாக இருக்கும்.

## ஆகாரமே ஆதாரம்!

* தினமும் நடைப்பயிற்சி செய்யுங்கள். வேகமாக கைவீசி நடக்கவேண்டும்.

* அரிசி சாதத்தை குறைப்பதோடு, எண்ணெய் பண்டங்களை தவிர்க்கவேண்டும்.

* உணவில் சோயாவை அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்.

* காலையில் அதிகமாகவும், மதியம் அதைவிட குறைவாகவும், இரவு அதைவிட மிகமிக குறைவாகவும் சாப்பிடவும். தொப்பையை குறைக்கும் என விளம்பரப்படுத்தப்படும் மருந்துகளை தொடாதீர்கள். அதனால், தொப்பை குறையவே குறையாது.

## வீட்டுக்குறிப்புகள்

* மழையில் நனைந்து சப்பாத்துக்கள் ரொம்பவும் ஈரமாக இருக்கின்றனவா? அவற்றினுள் கொஞ்சம் நியூஸ் பேப்பரை அடைத்து வைத்து விடுங்கள். பேப்பர் எல்லா ஈரத்தையும் இழுத்துக் கொண்டுவிடும்.

* சட்டைகளிலோ, பெட்ஷீட்டுகளிலோ ஒட்டிக்கொண்டு வர மறுக்கும் சூயிங்கத்தின் மேல் ஐஸ்கட்டியால் தேய்த்தால் சுலபமாக வந்துவிடும்.

* உங்கள் வீட்டு ஃப்ரிசரினுள் அடிக்கடி நிறைய ஐஸ்கட்டிகள் சேர்ந்துவிடுகின்றனவா? அதனுள்ளே கொஞ்சம் உப்பைத் தூவி வைத்துவிடுங்கள். ஐஸ் உறையாது.

* கதவிடுக்குகள் கிறீச் ஒலி எழுப்பி இம்சிக்கின்றனவா? அந்த இடங்களில் பென்சிலால் தேய்த்துவிடுங்கள். பென்சிலில் உள்ள கிராஃபைட் சத்தத்தைக் குறைக்க உதவும்.

* தேங்காயை அரை மணிநேரம் தண்ணீரில் ஊறவைத்துவிட்டு உடைத்தால் அதன் நாரை சுலபமாக நீக்கமுடியும். தேங்காயும் சரி பாதியாக உடையும்.

## 250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-394

**கேள்வி: இளநரையிலிருந்து விடுபட உட்கொள்ள வேண்டிய உணவுகள் எவை?.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 18.11.2013

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 394
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 392 இற்கான விடை :- வாயைக் குவித்தல்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- அ.கிறோஷினி, 274, குருநகர், யாழ்ப்பாணம்.

394

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
..............................
கையொப்பம் : ..............................



அடுத்த வருடத்தில் நடைபெறவிருப்பதால் இவ்விடயத்தில் நிதானமாக காய்களை நகர்த்துவதற்கே டில்லி விரும்புகின்றது.

புதுடில்லியின் இந்த இரண்டக நிலையைப் புரிந்துகொண்டுள்ள இலங்கை அரசாங்கமும் சில கருத்துகளை வெளியிட்டிருக்கின்றது. பொதுநலவாய மாநாட்டைப் பகிஷ்கரித்தால் இந்தியா தனிமைப்படுத்தப்பட்டுவிடும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கருத்து வெளியிட்டிருந்தார். மாநாட்டை பகிஷ்கரிக்கும் கனடாவுக்கும் இதேபோன்ற ஒரு எச்சரிக்கையை கொழும்பு விடுத்திருந்தது. சிங்கள தேசியவாத அமைப்பான தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர இதற்கு ஒரு படிமேலே சென்று இந்தியாவை எச்சரித்திருக்கின்றார்.

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் இந்தியா தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்துவந்தால் இலங்கை அரசாங்கம் இந்தியாவுடனான உறவுகளை முறித்துக்கொண்டு சீனா மற்றும் ரஷ்யாவுடனான உறவுகளைப் பலப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்திருக்கும் அவர் ஆகாய மார்க்கமாக பருப்பு மூடைகளை வீசுவதற்கு இந்தியாவுக்கு மீண்டும் அனுமதிக்கமாட்டோம் எனக் கூறியிருக்கின்றார். இது சிங்கள தேசியவாத அமைப்புக்கள் வழமையாக விடுக்கும் எச்சரிக்கைதான். ஆனால், இந்தக் கருத்துக்களைப் புறக்கணித்து விட்டுச் செயற்படும் நிலையில் டில்லி இல்லை.

கொழும்பு மாநாட்டில் பங்குகொள்வதா அல்லது அதனைப் பகிஷ்கரிப்பதா என்பதையிட்டுத் தீர்மானிக்க முடியாத நிலையில் டில்லி தடுமாறியதற்கு இவைதான் காரணம். இந்த நிலையில் இரண்டு தரப்பையும் சமாளிக்கும் வகையிலான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு இந்தியா முற்பட்டது. பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஒரு குழுவை அனுப்பாமல் இரண்டாம் மட்டக்குழு ஒன்றை மாநாட்டுக்கு அனுப்புவதுதான் அந்தத் தீர்மானம். ஆனால், அதனை ஏற்றுக் கொள்வதற்குக்கூட தமிழகம் தயாராக இருக்கவில்லை. இந்தியாவின் பிரதிநிதித்துவம் எந்தவகையிலும் இருக்கக்கூடாது என்பதில் தமிழக அரசியல் தலைவர்கள் உறுதியாக இருந்தார்கள். இதற்கான மக்கள் போராட்டங்கள் தமிழகத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. தமிழக காங்கிரஸ் கட்சியும் இந்தக் கோரிக்கையுடன் இணைந்திருப்பது கவனிக்கத்தக்கது. பொதுத் தேர்தலில் தமது வாக்கு வங்கிகளைப் பாதுகாக்கவேண்டுமானால் இந்தக் கோரிக்கையுடன் இணைந்திருக்க வேண்டும் எனத் தமிழக காங்கிரஸ் கட்சியும் திட்டமிட்டுச் செயற்படுகின்றது. இது காங்கிரஸ் தலைமைக்கான அழுத்தத்தை மேலும் அதிகப்படுத்துவதாக அமைந்தது.

இலங்கை குறித்த தன்னுடைய கொள்கையை வகுத்துக்கொள்வதில் இரண்டு விடயங்களை யிட்டு இந்தியா எப்போதும் கவனத்திற் கொண்டிருந்தது. ஒன்று தமிழகத்தின் உணர்வுகள். இரண்டு இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் மற்றும் இலங்கையுடனான உறவு. இந்த இரண்டும் ஒன்றுடன் ஒன்று முரண்படும் நிலையில்தான் ஒரு தீர்மானத்தை எடுப்பதில் இந்தியா தடுமாறியது. கொழும்பு மாநாட்டில் பங்குகொள்வதில்லை என்ற தீர்மானத்தை இந்தியா எடுத்திருந்தால் அவ்வாறான முடிவை எடுத்த நாடாக இந்தியா மட்டும் இருக்காது. கனடா இவ்வாறான தீர்மானத்தை ஏற்கனவே எடுத்திருக்கின்றது.

இலங்கையில் இந்த மாநாடு நடைபெறுவதை ஆரம்பம் முதலே கனடா எதிர்த்து வந்திருக் கின்றது. இந்த மாநாட்டில் கலந்துகொள்வது என்பது மனித உரிமைகள் விடயத்தில் சர்வதேசத்தின் கரிசனைகளையிட்டு கவலைப் படாமல் செயற்படும் மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு வழங்கப்படும் அங்கீகாரமாக அமைந்துவிடும் என்பதுதான் கனடாவின் கருத்து. இந்த மாநாட்டில் பங்குகொள்ளக் கூடாது என்ற அழுத்தத்துக்குள்ளாகியிருக்கும் மற்றொரு நாடு பிரித்தானியா. ஆனால், மாநாட்டில் பங்குகொண்டு மனித உரிமை கள் குறித்து கேள்வி எழுப்பப்போவதாக பிரித்தானியப் பிரதமர் அறிவித்திருக்கின்றார்.

கனடா மற்றும் பிரித்தானியாவை விட இலங்கை விவகாரம் இந்தியாவுக்கு முக்கியமானது. ஆனால், இலங்கை விவகாரத்தில் ஒரு உறுதியான தீர்மானத்தை எடுக்கக்கூடிய நிலையில் இந்தியா இல்லை. இராஜதந்திர ரீதியில் இலங்கையிடம் இந்தியா எப்போதும் தோல்வியடைந்தே வந்திருக்கின்றது. தமிழர் நலன்கள் குறித்து தமிழகத்திலிருந்து வரக்கூடிய அழுத்தங்களை தமது நலன்களைப் பாதுகாப்பதற்கான துருப்புச், சீட்டாகவே இந்தியா பயன்படுத்திவருகின்றது. இப்போது கூட சம்பூரைப் பெற்றுக்கொள்வதில் இந்தியா காட்டிய அக்கறையில் ஒரு வீதத்தைக்கூட சம்பூரிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் எதிர்காலம் குறித்துக் காட்டவில்லை. கொழும்புக்குக் கிடைத்த வெற்றி இதுதான்.

மன்மோஹன் சிங் பொதுநலவாய நாடு களின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளாமைக்கு தமிழக உணர்வுகள் தான் ஒரே காரணமல்ல. இது இந்தியாவின் பொதுத்தேர்தலுடன் தென் மாநிலங்களின் வாக்குவங்கியுடன் தொடர்பானது.

இப்பொழுது கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோஹன் சிங் கலந்துகொள்ளவில்லை. கடந்த மாதம் 15ஆம் திகதி அவர் தமிழ் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலை-வருமான மு.கருணாநிதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தின் மூலம் அது தெரிந்தது.

மாநாட்டை பகிஷ்கரிக்குமாறு கோரி கருணாநிதி அனுப்பியிருந்த கடிதமொன்றுக்கு பதிலளித்து பிரதமர் அனுப்பியிருந்த கடிதத்தில், தமிழக மக்களினதும் தி.மு.க.வினதும் உணர்வுகள் உட்பட சம்பந்தப்பட்ட சகல காரணிகளையும் கருத்தில்கொண்டே மாநாட்டில் கலந்து கொள்வதா?, இல்லையா, என்பது தீர்மானிக்கப்படும் என குறிப்பிட்டு இருந்தார்.

பொதுவாக சம்பந்தப்பட்ட சகல காரணிகளையும் கருத்தில்கொள்வதாக கூறாமல் தமிழக மக்களினதும் தி.மு.க.வினதும் உணர்வுகளை துல்லியமாக ஏன் இங்கு குறிப்பிடவேண்டும்? பிரதமர் தமிழக மக்களினதும் தி.மு.க.வினதும் உணர்வுகளை பொருட்படுத்தாமல் முடிவுவெடுக்க நினைத்து இருந்தால் தாமாக முன்வந்து அதனை தமது கடிதத்தில் குறிப்பிடத் தேவையில்லை.

இவ்விடயம் தொடர்பான தமிழக மக்களினதும் தி.மு.க.வினதும் உணர்வுகள் சகலரும் அறிந்தவையே. அவர்கள் இந்தியா இம்முறை மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும் என்றே கூறுகின்றனர். அதனை அறிந்திருந்தும் தாமாக முன்வந்து அதனை கூறிப்பிட்டு அதனை கருத்தில்கொள்வதாகவும் கூறுவதாயின் சிங், தமிழக மக்களின் உணர்வுகளின் பிரகாரம் நடந்துகொள்ளப் போகிறார் என்றே தெரிந்தது.

53 பொதுநலவாய நாடுகளில் கனே-டியப் பிரதமர் ஸ்டீவன் ஹர்ப்பர் மட்டுமே தாம் இலங்கையில் நடைபெறும் மாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்து இருக்கிறார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக கூறி அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே கனடா மாநாட்டை பகிஷ்கரிக்கிறது.

இந்தியா மாநாட்டை பகிஷ்கரித்தாலும் அல்லது பிரதமருக்குப் பதிலாக மற்றொருவரை அனுப்பினாலும் அதற்குக் காரணமாக இலங்கையின் மனித உரிமை நிலைமையை இந்தியா முன்வைக்கும் என்று கூறமுடியாது. ஏனெனில் அந்த அடிப்படையில் பிரதமர் மாநாட்டில் கலந்துகொள்ளாவிட்டால் உப ஜனாதிபதிக்கும் அதே காரணம் தடையாக அமையும். இலங்கையின் மனித உரிமை நிலைமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே தமிழக மக்களும் தி.மு.க.வும் மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூறியபோதிலும் இந்திய மத்திய அரசாங்கம் நேரடியாக அதனை கூறுமா என்பது சந்தேகமே. எனவே பிரதமர் வராவிட்டாலும் இந்தியா மாநாட்டை பகிஷ்கரிக்கும் சாத்தியக்கூறுகள் குறைவாகவே தென்பட்டன.

பொதுநலவாய அமைப்பானது சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம் என ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் முன்னாள் காலனித்துவ நாடுகளை ஒன்றுசேர்த்து பிரிட்டனே முன்வந்து அமைத்த அமைப்பாகும். அதாவது இந்த அமைப்பானது பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் சின்னமாகும். அதன் உச்சி மாநாடானது பிரிட்டன் தமது முன்னாள் அடிமை நாடுகளுடன் சேர்ந்து தமது பழைய சாம்ராஜ்ஜியத்தின் புகழை கொண்டாடுவதற்குச் சமமாகும். அதேபோல் அது காலனித்துவ நாடுகள் தமது பழைய அடிமைத்தனத்தை கொண்டாடுவதற்கும் சமமமாகும்.

அந்த அர்த்தத்தில் பார்த்தால் இந்த மாநாட்டுக்கு ஹர்ப்பர் வந்தாலென்ன வராவிட்டாலென்ன, மன்மோஹன் சிங் வந்தாலென்ன வராவிட்டாலென்ன என்றும் கேட்கலாம்.

ஆனால் அதேவேளை இந்த மாநாடு நாடுகளுக்கிடையே உறவுகளை பலப்படுத்திக் கொள்ளவும் வர்த்தக உறவுகளை புதிதாக ஆரம்பிக்கவும் ஏற்கனவே இருக்கும் உறவு-களை பலப்படுத்திக்கொள்ளவும் உதவுகிறது என்பது உண்மை. எனினும் இம்முறை மாநாடுதான் பொதுநலவாய அமைப்பின் முதலாவது உச்சி மாநாடல்ல. இதற்கு முன்னர் நடைபெற்ற மாநாடுகளில் கலந்து கொண்ட இலங்கை எந்த புதிய உறவை ஏற்படுத்திக்கொண்டது அல்லது எந்த உறவை பலப்படுத்திக்கொண்டது என்று கேட்பதும் நியாயமான கேள்வியே.

தமிழ்நாட்டில் நிலவும் நிலைமையை காட்டியே இந்தியா இம்முறை மாநாடு தொடர்பான தமது முடிவ்வ எடுக்கக்கூடும் என்பதை ஏற்கனவே கூறினோம். கடந்த வருடமும் இவ்வருடமும் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா். மனித உரிமை பேரவையின் கூட்டங்களின்போது இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த இந்தியா அப்போதும் அதற்குக் காரணமாக தமிழக நெருக்கு வாரத்தையே சூசகமாக எடுத்துக்காட்டியது.

இந்திய மத்திய அரசாங்கத்தின் முடிவுகள்மீது தமிழகத்தின் தாக்கத்தை இலங்கையின் முன்னாள் இந்திய தூது வராகவும் அதன்பின்னர் இந்திய வெளியுறவுத் துறை செயலாளருமாகவிருந்த நிருபமாராவும் ஒருமுறை மிகத்தெளிவாக எடுத்துக் கூறினார். 2011ஆம் ஆண்டு இலங்கையிலிருந்தும் மாலைதீவிலிருந்தும் இந்தியாவுக்குச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் சிலரை வெளியுறவுத்துறை செயலாளர் என்ற முறை யில் சந்தித்த அவர், தமிழகம் என்பது இந்தியாவிலிருந்து பிரிக்கமுடியாத ஒரு பகுதியென்றும் தமிழக மக்களின் உணர்வு களை புறக்கணித்து இந்திய மத்திய அரசாகம் செயற்பட முடியாது என்றும் கூறியிருந்தார்.

ஆனால் இது எப்போதும் உண்மையல்ல. தமக்குவேண்டிய நேரங்களில் இந்திய மத்திய அரசாங்கம் தமிழகத்தை புறக்கணித்து எவ்வளவோ முடிவுகளை எடுத்துள்ளது. குறிப்பாக தமிழகத்தில் மிகவும் உணர்வுபூர்வமான விடயமான இலங்கை விடயத்திலும் இந்தியா - தமிழக உணர்வுகளை பெரிதாக மதியாது நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்கும் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புக்கும் இடையே இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் இந்தியா நடந்துகொண்ட விதம் அதற்குச் சிறந்த உதாரணமாகும். 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் போர் உச்சக்கட்டத்தில் இருக்கும்போது சுமார் மூன்று இலட்சம் மக்களை புலிகள் மிகச் சிறியதோர் நிலப்பரப்பில் பணயமாக தடுத்து வைத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் பெரும் உயிராபத்தை எதிர்நோக்கி இருந்தனர். தமிழகம் இதனால் கொதித்துக் கொண்டிருந்தது. ஆனால் இந்தியாவானது இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்கு தொடர்ந்து உதவிவந்தது.

போரை நிறுத்தக்கோரி அப்போது தமிழகத்தில் நாள்தோறும் பல்வேறு அமைப்புக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்தன. 11 பேர் தீக்குளித்து உயிரை மாய்த்துக்கொண்டனர். மத்திய அரசாங்கத்தை நடத்தும் காங்கிரஸ் தலைமையிலான ஜனநாயக மக்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சியான தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இலங்கையில் போர் நிறுத்தப்படாவிட்டால் தாம் பதவி விலகப் போவதாக 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அறிவித்தனர்.

மத்திய அரசாங்கம் அப்போது ஜனாதிபதியின் ஆலோசகராகவிருந்த பஷில் ராஜபக்ஷவை புதுடில்லிக்கு அழைத்து அவர்மூலம் போர்முனையில் பொதுமக்கள் பாதுகாக்கப்படுவர் என்ற உத்தரவாதத்தைப் பெற்று அதனை தமிழகத்திற்கு அனுப்பியது. பதவி விலகப்போவதாக மிரட்டினாலும் உண்மையிலேயே அந்த நோக்கத்தை கொண்டிருக்காத தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதைக் கேட்டு 'தற்காலிகமாக' பதவி விலகல் முடிவை 'ஒத்திப் போட்டனர்' போர் தொடர்ந்தது.

போரை நிறுத்தக்கோரி 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி அப்போது 85 வயதான முதல்வர் கருணாநிதி திடீரென முன்னறிவித்தல் இல்லாமலேயே (விமல் வீரவன்சவைப் போல்) "சாகும் வரை" உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்தார். மத்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தை தொடர்புகொண்டு ஏதாவது செய்யவேண்டும் எனக்கூறியது. இலங்கை அரசாங்கமும் சிவிலியன்கள் சிக்கியிருப்பதால் தாம் போர் முனையில் இனி பாரிய ஆயுதங்களை பாவிக்கப் போவதில்லை என அறிவித்தது. மத்திய அரசாங்கம் அச்செய்தியுடன் அப்போதைய வெளியுறவு அமைச்சாகவிருந்த தற்போதைய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை கருணாநிதியை சந்திக்க அனுப்பியது.

முகர்ஜியை சந்தித்தவுடன் பெரும் சாதனை படைத்தவரைப்போல் கருணாநிதி உண்ணாவிரதத்தை கைவிட்டார். காலை உணவுக்குப் பின்னர் சாகும்வரை உண்ணா விரதத்தை ஆரம்பித்த கருணாநிதி பகல் உணவுக்கு முன்னர் அதனை கைவிட்டார் என சில இந்திய ஊடகங்கள் அப்போது அவரை நையாண்டி செய்தன. கருணாநிதி உண்ணாவிரதத்தை கைவிட்டு 20நாட்களில் புலிகளின் தலைமையும் முற்றாக அழிக்கப்பட்டு போரும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இவ்வாறுதான் தமிழகமும் நடந்து கொள்கிறது. இந்தியாவும் இவ்வாறுதான் தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்கிறது. 1987ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்திய தலையீட்டோடு ஒப்பிடுகையில், 2009ஆம் ஆண்டு இந்தியா தமிழக உணர்வுகளை எவ்வாறு மதிக்கிறது என்பதை நன்றாக விளங்கிக்கொள்ளலாம்.

1987ஆம் ஆண்டு பிரசித்திபெற்ற வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது, வடக்கில் இருந்த நிலைமையைப் போல் நூறு மடங்குக்கு மேல் மோசமான நிலைமையே 2008 மற்றும் 2009ஆம் ஆண்டு அங்கு நிலவியது. 1987ஆம் ஆண்டு இலட்சக்கணக்கான மக்கள் உயிராபத்தை எதிர்நோக்கி இருக்கவில்லை. அப்போது வடக்கில் பிரதானமாக உணவுத் தட்டுப்பாடுதான் நிலவியது.

ஆனால் இந்தியா 1987ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமது கடற்படையை அனுப்பி இலங்கையின் கடற்பரப்பை மீறியும் விமானப் படையை அனுப்பி இலங்கையின் வான்பரப்பை மீறியும் போரை நிறுத்துமாறு இலங்கைமீது நெருக்குவாரத்தை ஏற்படுத்தியது. இந்தியா அப்போது அவ்வாறு செய்து போரை நிறுத்தியது மட்டுமல்லாது தமக்குவேண்டிய விதத்திலான இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு இலங்கை அரசாங்கத்தையும் புலிகளையும் சம்மதிக்கவும் செய்தது.

அதைவிட பல மடங்கு பயங்கரமான நிலைமை வடக்கில் இருந்த போரின் இறுதிக்கட்டத்தின்போது இந்தியா போருக்காக இலங்கை அரசாங்கத்திற்கு பல வழிகளில் உதவியது. புலிகளின் கப்பல்கள் அழிக்கப்பட்டு அவர்கள் போர்த் தளபாட தட்டுப்பாட்டை எதிர்நோக்கியமையே அவர்கள் தோல்வியடைவதற்கு முக்கிய காரண-மாக இருந்தது. இந்திய புலனாய்வு உதவிகளை பாவித்தே அந்த கப்பல்கள் அழிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

புலிகளின் விமானங்கள் வவுனி யாவில் இருந்த இராணுவ ராடர் நிலை யத்தை தாக்கியபோது அங்கிருந்த இரு இந்தியர்கள் காயமடைந்த போதே இங்கு இந்தியர்கள் இருந்த தகவல் வெளிவந்தது.


எனவே மன்மோஹன் சிங் பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளா விட்டால் அதற்கு தமிழக உணர்வுகள் தான் ஒரே காரணமல்ல. இந்தியாவின் தென் மாநிலங்களின் வாக்குவங்கிதான் காரணம்.

**இலங்கை குறித்த தன்னுடைய கொள்கையை வகுத்துக்கொள்வதில் இரண்டு விடயங்களையிட்டு இந்தியா எப்போதும் கவனத்திற் கொண்டிருந்தது. ஒன்று தமிழகத்தின் உணர்வுகள். இரண்டு இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் மற்றும் இலங்கையுடனான உறவு. இந்த இரண்டும் ஒன்றுடன் ஒன்று முரண்படும் நிலையில்தான் ஒரு தீர்மானத்தை எடுப்பதில் இந்தியா தடுமாறியது. கொழும்பு மாநாட்டில் பங்குகொள்வதில்லை என்ற தீர்மானத்தை இந்தியா எடுத்திருந்தால் அவ்வாறான முடிவை எடுத்த நாடாக இந்தியா மட்டும் இருக்காது. கனடா இவ்வாறான தீர்மானத்தை ஏற்கனவே எடுத்திருக்கின்றது.**

**"மன்மோகன் சிங் வராமல் இருக்க முடிவு செய்திருப்பது எங்களின் மாநாட்டின் வெற்றியைப் பாதிக்காது. அதனை நாங்கள் ஒரு பிரச்சினையாகக் கருதவில்லை" என்றும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

**"அவரது முடிவு எங்களுக்கு தோல்வி அல்ல, நாங்கள் அவரை அழைத்தோம், அவர் வந்திருந்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருப்போம்" என்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.**

ஊரோடி




# அனுராதபுரத்தை அதிரவைத்த பஞ்சக் கொலைகள்

**பணத்தைகொள்ளையிடுவதற்காகவே ஐவரையும் படுகொலை செய்தேன். பிரதான சந்தேக நபர் பொலிஸில் வாக்குமூலம்.**

சாதாரணமாக ஈ, எறும்புகளைக்கூட சிலர் கொல்லத் தயங்குவர். அதேவேளை அற்பசொற்ப விடயங்களுக்காக பெறுமதிமிக்க மனித உயிர்களையே பலியெடுக்கும் அரக்கக் குணமுடைய மனித மிருகங்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள்.

கடந்த 5ஆம் திகதி அன்று இதுபோன்ற கோரச் சம்பவமொன்று அனுராதபுரம் விஹார மில்ல குளம் பிரதேசத்தில் நடந்தேறியது. அதாவது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் மிகவும் கொடூரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவமே அது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரை மிகவும் கொடூரமான முறையில் வெட்டிக் கொல்ல முயன்றபோது குடும்பத்தலைவரான பியதாஸ தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார். உயிர்தப்பியுள்ள பியதாஸ வின் மனைவியான 45 வயதுடைய இந்துமதி சிறியாணி, மகனான 23 வயதுடைய சுமித் உதயகுமார, மகளான 13 வயதுடைய தக்ஷிலா மற்றும் இந்துமதியின் சகோதரியான 46 வயதுடைய பிரேமாவதி, அவருடைய மகனான 25 வயதுடைய ஆர்.பிரியந்த ஆகியோரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

இந்துமதி சிறியாணி மஹியங்கனை கொடியாப்பலை பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவரின் சகோதரியான பிரேமாவதி தனது குடும்பத்துடன் அனுராதபுரம் விஹாரமில்ல குளம் பிரதேசத்தில் வசித்தார். எனவே இந்துமதி மஹியங்கனையிலிருந்து தனது வீட்டை விற்று சகோதரி வசித்துவந்த அனுராதபுரம் பகுதியில் குடியேறுவதற்கு ஆசைப்பட்டாள்.

இவ்வாறு தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் முகமாக தனது காணியுடனான வீட்டை விற்பதற்கு பலரிடம் கூறியிருந்தார். அதன்விளைவாக கடந்த மாதம் இறுதியில் வீட்டை கொள்வனவு செய்ய ஒருவர் வந்து, தான் வீட்டை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

எனவே வீட்டை விற்பதற்கு முதல் சகோதரி வசித்துவந்த பகுதியில் காணியுடன் வீடொன்றை பார்த்தனர். அதன்பின்னர் மஹியங்கனையில் இருந்த வீட்டை விற்று அங்கிருந்த தளபாடங்கள் உள்ளிட்ட பொருட்களை லொறியொன்றில் ஏற்றிக் கொண்டு அனுராதபுரத்திலுள்ள தங்கையின் வீட்டிற்கு கடந்த 4ஆம் திகதி வந்துள்ளார்.

தமது வீட்டிலிருந்து பொருட்களை ஏற்றி வந்த லொறியின் உதவியாளர் இந்துமதியின் மகனது நண்பன் என்றபடியால் எவ்வித அச்சமுமின்றி பொருட்களை ஏற்றிக்கொண்டு அனுராதபுரம் நோக்கிவந்தனர். தம்மை குடும்பத்தோடு கொலை செய்யப்போகும் ஒரு அரக்கனுடன் பயணம் செய்கின்றோம் என்பதை அவர்கள் சிறிதேனும் அறிந்திருக்கவில்லை.

மஹியங்கனையிலிருந்து வந்த லொறி அன்றைய தினம் பிற்பகல் அனுராதபுரம் விஹாரமில்ல குளம் பிரதேசத்தை வந்தடைந்தது. எனவே தனது வீட்டுப் பொருட்களை எல்லாம் மிகவும் பாதுகாப்பாக இறக்கி சகோதரியின் வீட்டில் வைத்த இந்துமதி அடுத்த நாள் தான் புதிய இடத்தில் புதிய காணியில் குடியேறப்போகும் மகிழ்ச்சியில் இருந்தாள்.

இந்துமதி அவருடைய மகனான உதயகுமாரவுடனேயே மஹியங்கனையிலிருந்து வந்தார். கணவன் மற்றும் மகள் ஆகிய இருவரும் ஏற்கனவே சகோதரியின் வீட்டில் இருந்தனர். லொறியிலிருந்து சகல பொருட் களையும் இறக்கியதும் லொறி மீண்டும் மஹியங்கனை நோக்கிப் புறப்பட்டது. ஆனால் லொறியில்வந்த உதயகுமாரவின் நண்பரான என்.கமகே ஜகத்குமார என்ற உதவியாளர் அன்றைய தினம் அனுராதபுரத்திலேயே தங்கியுள்ளார்.

புதிய காணியில் குடியேறப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் இந்துமதி இருக்கையில், அன்றையதினம் இவரது கணவரான பியதாஸ மகனின் நண்பர் உள்ளிட்ட சிலருடன் மது அருந்த ஆரம்பித்துள்ளார். சந்தோசமாக மது அருந்திவிட்டு அனைவரும் உறங்கச்சென்றனர். ஏனையோர் ஏற்கனவே உறங்கிவிட்டனர்.

மறுநாள் காலையில் இந்துமதியின் வீட்டில் எவ்வித சத்தமும் கேட்கவில்லை. வெளியிலும் காண்பதற்கு யாருமில்லாததால் அயலவர்கள் என்னவென்று வீட்டிற்குள் சென்று பார்த்த போது பியதாஸ வெட்டுக்காயங்களுடன் ஐயோ...ஐயோ... என்று முணங்கிக் கொண்டிருந்துள்ளார். ஏனையோர் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளனர்.

எனவே கிராமத்தவர்கள் உடனே பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவான 119 இற்கு சம்பவம் பற்றி தெரியப்படுத்தியுள்ளனர். உடனே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்ததுடன் உடனடியாக உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பியதாசவை அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றதுடன் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அனுராதபுரம், நீராவிய பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலொன்றின் அடிப்படையில் கொலை நடந்த 24 மணித்தியாலத்துக்குள் கொலை யுடன் தொடர்புடைய சந்தேகநபரை பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் நண்பரான 30 வயதுடைய ஜகத்குமார என்பவரே. இவர் முதல் நாள் பொருட்களை அனுராதபுரத்திற்கு கொண்டுவந்தபோது லொறி உதவியாளராக வந்து அனுராதபுரத்தில் நண்பனுடன் தங்கியிருந்தே இந்த கொலையை செய்துள்ளார்.

இந்தச் சந்தேக நபர் முன்னாள் இராணுவ வீரராவார். சுமார் ஆறு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்திலிருந்து தப்பியோடி தலை மறைவாகியிருந்துள்ளார். இவரை கைதுசெய்த ஹசலக்க பொலிஸார் மேலதிக விசாரணைக்காக அனுராதபுரம் பொலிஸாரிடம் அவரை ஒப்படைத்தனர்.

சந்தேக நபரை அனுராதபுரம் பொலிஸார் தீவிர விசாரணைக்குட்படுத்திய போது அவர் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது தனக்கு பணத்தேவைப்பாடு இருந்ததாகவும் அதனால் நண்பனின் வீட்டார் வீடு விற்ற பணத்தை எடுக்கவே அவர்களை கொலைசெய்ததாக சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கடந்த நான்காம் திகதி இரவு நண்பனின் அனுராதபுரத்தில் உள்ள நண்பனின் தாயாருடைய சகோதரியின் வீட்டில் சிறிய பார்ட்டியொன்று இடம்பெற்றுள்ளது. அதிலே சந்தேக நபரான ஜகத்குமாரவும் மது அருந்தியுள்ளார். எல்லோரும் குடிக்கும் போது அதிகமாக குடிக்காமல் சிறிதளவு மது அருந்திவிட்டு தனது இலக்கில் கவனமாக இருந்துள்ளார்.

மது அருந்தியவர்கள் உறங்கியவுடன் சந்தேக நபருக்கு உறக்கமே இல்லை. எப்படி பணத்தை எடுப்பது என்று அங்குமிங்குமாக நடந்துகொண்டு சிந்தித்துள்ளார். அதனடிப்படையில் கடந்த ஐந்தாம் திகதி அதிகாலை இரண்டு மணியளவில் தனது திட்டத்தை செயற்படுத்தியுள்ளார்.

சமயலறைக்குச் சென்ற ஜகத்குமார அங்கிருந்து பெரிய கத்தியொன்றை எடுத்து முதலில் நண்பனின் தாயையும் பின்னர் நண்பனையும் வெட்டிக் கொன்றுள்ளார். பின்னர் ஏனையோரையும் வெட்டிக் கொன்றுள்ளார். அந்த சமயத்தில் பியதாஸ சத்தம் கேட்டு விழித்துக்கொண்டுள்ளார்.

எனவே அவரையும் கத்தியால் சரமாரியாக வெட்டிய சந்தேக நபர் பதற்றத்தில் வீட்டில் இருந்த இரண்டு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பணத்தையும் எடுத்துக்கொண்டு கத்தியை வீட்டின் பின்னால் வீசிவிட்டு துவிச்சக்கர வண்டியொன்றில் தப்பிச் சென்றுள்ளார்.

துவிச்சக்கர வண்டியை இடைநடுவில் கைவிட்டு விட்டு அநுராதபுரம் பஸ் நிலையத்துக்குச் சென்று அங்கிருந்து தம்புள்ளைக்குச் சென்றுள்ளார். பின்னர் கொள்ளையிட்ட பணத்தில் தங்க நகைகள் சிலவற்றை வாங்கிக்கொண்டு ஹசலக்க பகுதியிலிருந்த தனது காதலியை பார்ப்பதற்கு சென்றுள்ளார். அந்த நேரத்திலேயே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதான சந்தேகநபரை கைதுசெய்வதற்கு முன்னர் மஹியங்கனையிலிருந்து பொருட்களை ஏற்றிவந்த லொறியின் சாரதி மற்றுமொரு உதவியாளர் மற்றும் கொலைசெய்யப்பட்ட இந்துமதியின் சகோதரர் ஆகியோரையும் பொலிஸார் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர். ஆனால் பிரதான சந்தேக நபரை கைது செய்து வாக்குமூலங்களைப் பெற்றுக் கொண்டதையடுத்து ஏனையோரை விடுவித்தனர்.

பிரதான சந்தேக நபரை விசாரணைக் குட்படுத்திய அனுராதபுரம் பொலிஸார் கொலைக்காக பயன்படுத்தப்பட்ட கத்தி மற்றும் இரத்தம் படிந்த சந்தேக நபரின் ஆடைகள் போன்றவற்றையும் தப்பி செல்ல பயன்படுத்தப்பட்ட துவிச்சக்கர வண்டியையும் மீட்டுள்ளனர்.

இரண்டு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் பணத்துக்காக ஒன்றாக உண்டு, குடித்த நண்பரின் குடும்பத்தையே கொன்று தீர்த்த முன்னாள் இராணுவ வீரரான சந்தேக நபர் தற்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்.

அதேவேளை சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வட மத்திய மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி விஜேகுணவர்த்தனவின் விசேட ஆலோசனைக்கு அமைய அனுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மட்டக்களப்பில் அதிகரிக்கும்...

பாலியல் துஷ்பிரயோகம், விபச்சார நடவடிக்கை என நிலைமை இருக்கையில், மட்டக்களப்பில் பெண்கள் குளியலைறை போன்ற இடங்களில் படம் பிடிக்கும் கும்பல் ஒன்று நடமாடுவதாக புதிய தகவல் ஒன்றும் வெளியாகியிருக்கிறது. இந்தக் கும்பல் குறித்து அக்கறையுடனும் பாதுகாப்புடனும் இருக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவரும், பிரஜைகள் குழுவினுடைய தலைவருமாகிய வ.கமலதாஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், மட்டக்களப்புக்கு வெளி இடங்களிலிருந்து வந்து விடுதிகள் போன்ற இடங்களில் தங்கியிருக்கும் ஒரு சிலரே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடு கின்றனர. அத்துடன் இவ்வாறான வீடியோக்களை பிடித்துக்கொண்டு பிழையான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன.

அத்துடன் கொள்ளை, பலாத்காரம் போன்றவைகளும் நடைபெறலாம். எனவே குளியலறை போன்ற இடங்களைப் பாவிக்கும்போதும், தனிமையில் கல்வி கற்கும், செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்களும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் பாதுகாப்பான நடைமுறை களைக் கையாள்வதற்கும் பழகிக் கொள்ளவேண்டும். என்றும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இவ்வாறு மட்டக்களப்பில் பாலியல்சார் பிரச்சினைகள் மலிந்து போயுள்ளநிலையில், வாழைச்சேனை, வாகனேரி - குடாமுனைக்கல் பகுதியில் வீதியின் ஓரத்தில் சொப்பிங் பேக்கில் போடப்பட்ட நிலையில் கைக்குழந்தையொன்றின் சடலம் கடந்த வார இறுதியில் மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் குழந்தை குறைமாதத்தில் பிறந்த குழந்தையாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டாலும் உண்மையான காரணம் என்னவென்று இதுவரை தெரியவில்லலை.

பாலியல்சார்ந்த தொழில்களிலும், செயற்பாடுகளிலும் ஈடுபடும்பெண்கள் அதிகரித்து வருகின்றநிலையில் இக்குழந்தை இவ்வாறானதொரு தொடர்பினால் ஏற்பட்டதாகக்கூட இருக்கலாம் என்றும் சந்தேகங்கள் வெளியிடப்படுகின்றன.

மட்டக்களப்பினைப் பொறுத்தவரையில் யுத்தகாலங்கள், சுனாமிக்குப் பின்னரான காலங்களில் படைத்தரப்பினர், அரசசார்பற்ற நிறுவனங்களில் தொழில்செய்பவர்கள் என பலராலும் விபச்சார நடவடிக்கைகளுக்குப் பெண்கள் பயன்படுத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

தற்போதும் தொடரும் கைதுகள் மூலம் இவ் வாறான நிலைமை இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான கலாசார சீரழிவுகளுக்கு பொருளாதாரமும் ஒரு காரணமாக இருக்கிறது. இருப்பினும் சரியான கட்டுப்பாடுகள் தேவை என்பதனையும், நகரமய மாக்கத்தால் ஏற்படும் பிரச்சினைகளையும் இந்த கைதுகளும் சம்பவங்களும் வெளிக்காட்டி நிற்கின்றன என்பதே உண்மையாகும்.




**நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காலம்காலமாக பல்வேறு தரப்பினரால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளார்கள். தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள் என்பது ஒரு கசப்பான உண்மை.**

# மலையக மக்களை வதைக்கும் சந்தா அறவீடு!

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை பற்றியும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அதிகமாக அக்கறையுடன் பேசப்படும் காலம்தான் தேர்தல் காலம். அதற்கு அடுத்தபடியாக அவர்களது சம்பள உயர்வை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தம் நெருங்கும் காலம்.

இந்த இரண்டு பருவ காலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள்மீது அரசியல்வாதிகளும் குறிப்பாக தொழிற்சங்கவாதிகளும் காட்டுகின்ற அக்கறையினை பின்னர் காண முடிவதில்லை.

கடந்த மத்திய மாகாண சபைத் தேர்தலில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு வீடு வீடாக சென்று வாக்குறுதிகளை வாரி வழங்கி வாக்குகளைப் பெற்றுக்கொண்டவர்கள், தேர்தல் முடிந்த கையோடு ஓய்வெடுப்பதற்காக சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் இன்னும் சில நாடுகளுக்கும் ஓய்வெடுப்பதற்காக சென்றார்கள் என்பது பலருக்குத் தெரியாத உண்மை.

தேர்தல் முடியும்வரை எந்த நேரத்தில் யார் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினாலும் உடனடியாக பதிலளிப்பவர்கள் தேர்தல் முடிந்ததும் அப்படி பதிலளிப்பதில் ஏன் அனேகமானவர்களின் கையடக்க தொலைபேசிகள் நிறுத்தி வைக்கப்படும். இதுதான் காலம் காலமாக இடம்பெற்றுவரும் சங்கதி.

இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை பெருந்தோட்ட தொழிலாளர்களது சம்பளத்தை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். இந்த கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களின் சார்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரசும், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் தொழிற்சங்க கூட்டு கமிட்டியும் அங்கம் வகிக்கும் அதேவேளை மறு முனையில் தோட்ட கம்பனிகளின் சார்பில் முதலாளிமார் சம்மேளனமும் அங்கம்வகிப்பர்.

புதிய கூட்டு ஒப்பந்த காலம் நெருங்குகின்றபோது மலையக பெருந்தோட்ட மக்களுக்காக மூலைமுடுக்கில் உள்ளவர்களெல்லாம் குரல்கொடுப்பதும் அறிக்கைகள் விடுவதும் யாவரும் அறிந்த விடயமே. அதேவேளை ஏட்டிக்குப் போட்டியாக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எவ்வளவு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும். இவ்வளவு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று அரசியல்வாதிகளும் தொழிற்சங்கவாதிகளும் குரல்கொடுப்பர்.

இந்தக் கூட்டு ஒப்பந்த காலத்தின் போது ஒப்பந்தத்தில் அங்கம் பெறாத தொழிற்சங்கங்கள் சில ஒன்றுசேர்வதும் இன்றும் சில தனித்து இருந்துகொண்டு கூட்டு ஒப்பந்தத்தை விமர்சிப்பதும் வழமையான விடயம். அதிலும் குறிப்பாக தொழிற்சங்கச் சம்மேளனங்கள் என்று புதிது புதிதாக ஒவ்வொன்றை அமைத்து அதற்கு தலைவர், செயலாளர் என பொறுப்புகளை வழங்குவதும் பின்னர் இருந்த இடம்தெரியாமல் மறைந்துவிடுவதும் யாவரும் அறிந்ததே.

இவ்வாறு கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திட்டவுடன் ஒப்பந்தத்தில் அங்கம்பெறாத தொழிற்சங்கங்கள் சம்பள உயர்வு போதாது என்றும், மீண்டும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டார்கள் என்று அறிக்கைகள்விடுவார்கள். அத்தோடு மலையக மக்கள் மாற்று தலைமையை பற்றி சிந்திக்கவேண்டும் என்பார்கள்.

இவ்வாறு பெருந்தோட்டத் தொழிலாளர்களது சம்பள உயர்வு போதாது. அவர்கள் அன்றாட வாழ்வைக்கொண்டு நடந்த முடியாது தத்தளிக்கின்றார்கள். இப்படியெல்லாம் அனுதாபப்படுபவர்கள், அந்த போதாது என்ற சம்பள உயர்வு வழங்கப்பட்டதும் உடனடியாக தம் சந்தா கட்டணத்தை அதிகரித்து விடுகின்றனர்.

இப்படி சந்தா கட்டணத்தை அதிகரிக்கும்போது ஏன் இவர்களுக்கு பெருந்தோட்ட தொழிலாளர்களது கஷ்டங்கள் என்பது புரியவில்லை.

கூட்டு ஒப்பந்தத்தை விமர்சித்தவர்களும், சம்பள உயர்வு போதாது என்ற தொழிற்சங்கங்களுமே இன்று அதிகமான சந்தா பணம் அறவிடுவதாக சொல்லப்படுகிறது.

பெருந்தோட்ட தொழிலாளர் ஒருவரது நாள் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கையே தொழிற்சங்கங்கள் சந்தா பணமாக அறவிடுகின்றன. சில தொழிற்சங்கங்கள் அதைவிட அதிகம் அறவிடுவதாகவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொழிற்சங்கங்கள் இவ்வாறு சந்தா அறவிடுவதன் நோக்கம் என்னவென்றால், தொழிலாளர்கள் ஏதாவது நிர்வாகரீதியில் பிரச்சினைகள் ஏற்பட்டாலோ அல்லது முதலாளிமார்களால் அநீதி இழைக்கப்பட்டாலோ தொழிலாளர்கள் சார்பாக தொழிற்சங்கங்கள் பேசும். நீதிமன்றங்களுக்குச் சென்றால் தமது உறுப்பினர்கள் சார்பாக சட்டத்தரணிகள் அனுப்பி வாதாடும். இப்படியான விடயங்கள் நடைபெறுகின்றன.

இப்படியான தொழிலாளர் நலன் சார் விடயங்களில் தொழிற்சங்கங்கள் ஈடுபடுகின்றன. ஆனாலும் அநேகமான தொழிற்சங்கங்கள் சந்தா பணம் அறவிடுவதில் காட்டும் முனைப்பை தொழிலாளர் சேவை நலன்களில் காட்டுவதில்லை.

மலையகத்தில் இன்று ஏராளமான தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் சில தொழிற்சங்கங்கள் தமது தொழிற்சங்கத்திற்கு உறுப்பினர்களை சேர்க்கும்போது குறைந்த சந்தா பணம் அறவிட்டு சேர்ப்பதும் பின்னர் படிப்படியாக அந்த தொகையை அதிகரித்துவிடுவதுமான சம்பவங்களும்கூட நடைபெறுகின்றன.

இவ்வாறு தொழிற்சங்கங்கள் தமக்கு சந்தா பணம் செலுத்தும் உறுப்பினர்கள் தொழில்ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் நலன்சார் விடயங்களில் கவனம் செலுத்தும் அதேவேளை, சிறிய தோட்டங்களில் வேலைசெய்யும் சந்தா கட்டாத தொழிலாளர்களது நலன்கள் குறித்து தோட்ட நிர்வாகமோ, தொழிற்சங்கங்களோ கவனத்தில் கொள்வதில்லை. குறிப்பாக அவர்கள் கைவிடப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.


கம்பனிகள் நிர்வகிக்கும் பிரதான தோட்டங்களை தவிர, சில தனியார் நிர்வகிக்கும் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவ்வாறான சில சிறிய தோட்டங்களில் முறையாக சம்பளம் வழங்குவதில்லை. பச்சை தேயிலை கிலோவொன்றை பறிப்பதற்காக மிக குறைந்த சம்பளமே வழங்கப்படுகிறது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தத்தில் இவ்வாறான சிறிய தோட்டங்கள் அடங்குவதில்லை. ஆகையால், அங்கு தொழில்புரியும் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுவதில்லை. அவ்வாறான தோட்டங்களில் வேலைசெய்வோருக்கு சேமலாப நிதிகூட வங்கியிடப்படுவதில்லை.

எனவே இவ்வாறான தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் தொடர்பில் பெரிதாக எவரும் கவனத்தில் கொள்வதில்லை. ஆகையால் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றவர்களாக இருந்தார்கள்.

ஒப்பந்தத்தில் அங்கம் பெறாதவர்களாக இருந்தாலும்சரி, இவ்வாறான தொழிலாளர்கள் நலன் தொடர்பில் கவனம் செலுத்துவார்களா என்பது தொழிலாளர்கள் எழுப்பும் கேள்வியாக உள்ளது. அதேவேளை சம்பள உயர்வு போதாது என்று கூறுபவர்கள் ஏன் சந்தா பணத்தொகையை குறைத்து அறவிடக்கூடாது என்று கேட்கப்படுகிறது. எனவே தொழிற்சங்கங்கள் சந்தா பணம் அறவிடப்படுவதில் காட்டும் அக்கறை போல, தொழிலாளர் நலன் சார்விடயங்களில் காட்டுவார்களானால் அதுவே வரவேற்கத்தக்கது.

## தமிழகத்தில் விருது பெறும் மலையகக் கவிஞர்



வனப்புமிக்க இலங்கையின் வளமான நீர்வீழ்ச்சிகளில் ஒன்றான துன்கிந்தை நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இலங்கையின் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் பல தேயிலை தோட்டங்கள் அமைந்துள்ளன. அதில் ஊவா கட்டவளை எனும் தோட்டத்தில் அந்த தோட்டத்துக்கு வந்துசேர்ந்த தொழிலாளர்களுடன் அவர்களது பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்க வந்த சந்தனசாமி ஆசிரியருக்கும் பரிபூரணம் அம்மையாருக்கும் 1934ஆம் ஆண்டு மகனாக பிறந்தவர் ஜோசப்.

ஊவா கட்டவளை தோட்டத்துப் பள்ளியில் தனது தந்தையையே குருவாகக்கொண்டு கல்வியை ஆரம்பித்தவர் சிலகாலம், தமிழகத்திலும் பின்னர் பதுளை பீட்ஸ் கல்லூரியிலும் கல்வியை தொடர்ந்திருக்கிறார்.

கத்தோலிக்க இறைபக்தி நிறைந்த குடும்ப பின்னணியோடு இல்லறத்தில் பிளோமினா அவர்களை கரம்பிடித்திருக்கும் இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். இன்றும் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளராக தொழிலுக்கு புறப்பட்டுவிடும் இவர், இலங்கையின் சாமான்ய பிரஜைகளில் ஒருவர். சகமனிதர்களோடு, சக மனிதனாக சகஜமாக வாழ்ந்துவரும் இவர் பொதுப் போக்குவரத்தில் சக பயணியாக மக்களோடு மக்களாக வாழ்க்கை பயணத்தில் இணைந்திருப்பவர்.

1963 இல் பதுளை தெளிவத்தை எனும் தோட்டத்தில் ஆசிரியராகவும் பகுதிநேர எழுதுவினைஞராகவும் தொழில் தொடங்கியவர், அப்போதே தமிழகத்தில் இருந்து வெளிவந்த 'உமா பேசும் படம்' கொழும்பில் இருந்து வெளிவந்த கதம்பம் ஆகிய இதழ்களுக்கு எழுதி தெளிவத்தை ஜோசெப் எனும் இலக்கியப்பெயருக்கு சொந்தக்காரரானார்.

1963 ஆம் ஆண்டு வீரகேசரி பத்திரிகை நடாத்திய மலை யக சிறுகதை போட்டியில் 'பாட்டி சொன்ன கதை' என்ற கதையின் ஊடாகத் தன்னை அங்கீகாரம் பெற்ற எழுத்தாளராக மாற்றிக்கொண்டவர். தனது மனைவியின் பிளோமினா என்ற பெயரிலும், தமது பிள்ளைகளான, திரேசா, சியாமளா, ரவீந்திரன், ரமேஸ், போன்ற பெயர்களிலும் ஜேயார், ஜோரு என்கின்ற புனைபெயர்களிலும் சிறுகதை, நாவல், இலக்கிய கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள், வானொலி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்பட வசனம் எனப் பல்வேறு தளங்களிலும் தனது இலக்கிய ஆளுமையை பதிவு செய்திருப்பவர். இலங்கையில் உருவான 'புதிய காற்று' என்ற திரைப்படம் இவரது திரைக் கதை வசனத்தோடு உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.

மலையக சிறுகதை வரலாறு, துரைவி தினகரன் சிறுகதைகள், உழைக்கப்பிறந்தவர்கள் போன்ற படைப்புக்களின் ஊடாக மலையக இலக்கிய வரலாற்றை பதிவுசெய்துள்ளார். சுதந்திர இலங்கையின் ஐம்பது சிறுகதைகள் எனும் தொகுப்பிலும் இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது.

அடிப்படையில் கணக்காளர் என்ற தொழிலின் ஊடகவே தனது வாழ்க்கையை நடாத்திவரும் இவர் இலக்கிய வேட்கையோடு ஆர்வமாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்கும் இவர் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராக இருந்து தனது அடுத்த தலை முறைகளுக்கு வழிகாட்டியாக திகழ்கிறார். இவரது படைப்புகள் குறித்து இலங்கையிலும் தமிழகத்திலும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளனர்.

தெளிவத்தை ஜோசப் அவர்கள் தனது படைப்புகளுக்காக பல்வேறு விருதுகளை வென்றவர். இலங்கை அரச சாகித்திய விருது, கலாபூசணம் விருது, தேசிய இன ஒற்றுமைக்கான சாகித்திய விருது, கம்பன் கழக இலக்கிய விருது ஆகியவற்றோடு 2008ஆம் ஆண்டு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய தமிழியல் விருதினையும் தமிழியல் வித்தகர் பட்டத்தினையும் பெற்றவர்.

அத்தோடு, மலையக சிறுகதை வரலாறு எனும் ஆய்வு நூலுக்காக 2001ம் ஆண்டு பண்டிதமணி சி.கணபதிபிள்ளை நினைவாக வழங்கப்படும் உயர் விருதான சம்பந்தன் விருதினை பெற்றுக்கொண்ட முதல் மலையக எழுத்தாளர் என்ற பெருமை பெற்றவர். தனது 'குடை நிழல்' என்ற நாவலுக்காக தென்னிந்தியாவின் சுபமங்களா பரிசினை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவரது இலக்கிய சேவையை கௌரவித்து பேராதனை பல்கலைக்கழகம் 2007ஆம் ஆண்டு உயர்விருதினை வழங்கியிருக்கிறது. 2011 ஆம் ஆண்டு கொடகே நிறுவனம் வழங்கும் வாழ்நாள் சாதனையார் விருதும், 2013ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழக தமிழச்சங்க விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தின் எழுத்தாளரான ஜெயமோகன் அவர்களின் பிரபலம்பெற்ற படைப்பான விஷ்ணுபுரம் பெயரில் நிறுவப்பெற்றுள்ள விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் இந்த (2013) ஆண்டுக்கான இலக்கிய விருதினை தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு அறிவித்துள்ளது. தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு இம்முறை தமிழகத்தில் வழங்கப்படவுள்ள விஷ்ணுபுரம் விருதினை இதற்குமுன்னர் அ.மாதவன், பூமணி மற்றும் கவிஞர் தேவதேவன் ஆகிய இந்திய எழுத்தாளர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு லட்சம் இந்திய ரூபாவுடன் நினைவுச்சிற்பமும் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 2013 டிசம்பர் மாதம் 22ஆம் திகதி தமிழ்நாடு, கோயம்புத்தூரில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்திரா பார்த்தசாரதி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் தெளிவத்தை ஜோசப் அவர்கள் பற்றிய சிறு கைநூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

கொடகே நிறுவனத்தினரால் 2010 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தெளிவத்தை ஜோசப் அவர்கள் எழுதிய தமிழகத்தின் சுபமங்களா பரிசு பெற்ற குடைநிழல் நாவல், மதுரை எழுத்து பதிப்பகத்தினரால் மறுபதிப்பு செய்யப்பட்டு மேற்படி விழாவில் வெளியிடப்படவுள்ளமை சிறப்பம்சமாகும்.

தலாத்துஓயா கே.கணேஷ் அவர்களுக்கு கனடா நாட்டில் வழங்கப்பட்ட தமிழியல் விருதுக்கு அடுத்ததாக இலங்கைக்கு வெளியே இலக்கிய விருது பெறும் மலையக எழுத்தாளராக தெளிவத்தை ஜோசப் அவர்கள் திகழ்கிறார்.

# ஒரு தீபம் எரிய...

நா.ஜெயபாலன், பிபிலை

**ஐந்து** மணி பஸ்ஸில் ஆனந்தி வந்திறங்கியபோது, "ஊவா தன்னை" எஸ்டேட், "ஸ்டோர் சந்தி"யில் அவ்வளவாகக் கூட்டம் இருக்கவில்லை! இருபது வருடங்களுக்குமுன் செல்லையா முதலாளியின் தேயிலைக் கடை மட்டுமே இருந்த அந்த இடத்தில், இப்போது ஏழுகடைகளுடன் ஒரு பசார் வீதியை உருவாக்கியிருந்தது!

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா.... ஆறடி நிலமே சொந்தமடா.." என்ன நினைத்தாரோ, செல்லையா முதலாளி, சீர்காழி கோவிந்தராஜனின் அந்த இனிய பாடலை முழுவதும் கேட்காமல் ரேடியோவை நிறுத்திவிட்டு வெற்றிலை எச்சிலை துப்புவதற்காக வாசற்பக்கம் வெளியே வந்தார். வந்தவர் கண்கள், ஓர் அபூர்வ காட்சியைக் கண்டு ஆச்சரியத்தில் விரிந்தன!

ஒரு கையில் ட்ரெவலிங் பேக்கையும் மறுகையில் ஐந்து வயதுமகன் திலீபனையும் கூட்டிக்கொண்டு சந்தியிலிருந்து மேல் ரோட்டில் நடக்கமுயன்ற ஆனந்தியை அடையாளம் கண்டுகொண்ட செல்லையா முதலாளி அவளை கைதட்டி அழைத்து, கடைக்குள் அமரச்செய்து அவளுடன் பேச முற்பட்டார்.

"ஆனந்தி! என்னம்மா தெரியாத புள்ள மாதிரி கண்டுக்காம ஓடப்பார்க்கிறாய்? ஓ மூணு வருசமா.. இந்தப் பக்கமே வராம போயிட்டதால... எங்களையெல்லாம் மறந்துட்டியோ...?" என்று கொஞ்சம் கோபமாகவே பேசமுற்பட்ட முதலாளி... தொடர்ந்தும் "இந்தாப்பாரு ஆனந்தி, நீ யாரையும் மறந்துடலாம். ஆனா ஒங்கப்பன மட்டும் மறக்கிறது சரியில்லையம்மா! ஒனக்கு அஞ்சு வயசு நடக்கிறப்போ, ஒங்க ஆத்தா போயிட்டபிறகு, ஒன்ன படிக்க வச்சு ஆளாக்க ஒங்கப்பன் சின்னமுத்து எவ்வளவு கஷ்டப்பட்டான்! நல்ல் புருசனும், நல்ல தொழிலும் கெடைச்சதும் எல்லாமே மறந்து போச்சா..? பெண்ணா பொறந்தவளுக்கு பொறந்தவீடு மறந்துபோகலாம். பொறந்த இடம் மறந்துபோகலாமா..?" செல்லையா முதலாளி பல நாட்கள் ஆனந்தியிடம் கேட்பதற்கு தயாரித்து வைத்திருந்த முதல் கேள்விக்கே ஆனந்தி தடுமாறிவிட்டாள். அவளுக்கு மௌனத்தைத் தவிர வேறு எதனையும் பதிலாகச் சொல்ல முடியவில்லை. அவளது கண்கள் மட்டும் கலங்கி, அழுவதற்குத் தயாராகின! இப்போது முதலாளிக்கு ஆனந்தியைப் பார்ப்பதற்கே பாவமாக இருந்தது! அதனால் ஒரு தகப்பன் நிலையிலிருந்து ஆறுதலாகப் பேசினார்.

"அம்மா ஆனந்தி நீ படிச்சபுள்ள, ஒனக்கு ரொம்ப சொல்ல தேவையில்லை. நடந்ததை எல்லாம் ஒரு கெட்ட கனவாக நெனைச்சு, மறந்துட்டு இப்பவே போய் - பதுளை ஆஸ்பத்திரியில இருக்கும் ஒங்க அப்பனை பாரு! பாவம் சின்னமுத்து. அவனுக்கு உன்மேல உள்ள பாசம்தான் நோயை அதிகப்படுத்திக்கிட்டு இருக்கு!" என்று தொண்டையை கனைத்துக்கொண்டு செல்லையா முதலாளி தொடர்ந்தும் பேசினார், "அப்புறம் அம்மா! இந்த நேரத்துல தனியா நீ மேல் டிவிசனுக்கு நடந்துபோறது சரியில்ல. அந்தா பாரு கடை ஓரத்துல ஒரு பச்சை திரிவீலர் வண்டி நிற்குது, அதுலேயே வீட்டுக்குப்போயி சேரு! என் தம்பி மகன் சேகர்தான் டைவர், அவன் கிட்ட நானே பேசி ஒழுங்குபடுத்துறேன், நீ ரெடியாகு" என்றுபேசிக் கொண்டே பச்சை திரிவீலரை நோக்கி நடந்தார் செல்லையா - முதலாளி.

சேகருடைய அந்தச் பச்சை நிற ஆட்டோ வண்டியில் மகன் திலீபனையும் கூட்டிக் கொண்டு, ஏறி அமர்ந்தாள் ஆனந்தி! ஆட்டோ வண்டி, மலை உச்சியிலிருக்கும் மேல்டிவிசனை நோக்கி மெல்ல.. மெல்ல போய்க் கொண்டிருந்தது. ஆனந்தியின் எண்ணங்களும் அவளை அறியாமலே பின்னோக்கி மெல்லமெல்ல போய்க் கொண்டிருந்தன...!

மெயின் ரோட்டிலிருந்து 'மேல் டிவிசன்' என்று சொல்லுகின்ற அந்த இடத்துக்கு போவதற்கு சுமார் மூன்று கிலோமீற்றர்தான் இருக்கும். அந்தக் காலத்தில் 'எஸ்டேட் லொறி' மட்டுமே, போக்குவரத்து செய்த அந்த மலை ரோட்டில், தற்போது சகல வாகனங்களும் போய்வருகின்றன! மேல் டிவிசனிலிருந்து மெயின் றோட் வருவதற்கு பதினைந்து நிமிடங்களே போதும்! ஆனால் கீழிருந்து மேலே செல்வதற்கு ஒரு மணித்தியாலம் பிடித்துவிடும்! அந்தக் காலத்தில் ஆனைமலை ஏற்றம் என்றால் யானைகளே ஏறத்தயங்குமாம். பச்சைத் தேயிலைச் செடிகளையும் உயர்ந்து வளர்ந்திருக்கும் சவுக்கு மரங்களையும் ஊடறுத்துச் செல்லுகின்ற அந்த மலைப் பாதை பயணம் ஆனந்தியை அவளது இளமைக் காலத்தைக் கொஞ்சம் எட்டிப் பார்க்கத் தூண்டியது!

ஊவாதன்னை "சின்னதப்பு, சின்னமுத்து" என்றால் அந்தக் காலத்தில் பதுளை தோட்டப் புறமெங்கும் பிரசித்தமான பெயர்! நல்லதோ, கெட்டதோ, சாவோ, சடங்கோ எதுவானாலும் சின்னமுத்துவும், சின்னதப்பும் இல்லாவிட்டால் விசேடமே இல்லை. என்பார்கள்! காமன்கூத்து வைபவங்களில் அடிக்கின்ற லாவணி தப்பு, முதல் சடங்கு தப்பு, நலுங்கு தப்பு, பிறட்டு தப்பு, சேதிதப்பு, சாவு தப்பு என்று பல தரப்பட்ட தப்படிகளை, லயம் - தாளம் தவறாமல் சின்னமுத்து அபிநயத்துடன் ஆடி ஆடிக்கும்போது, பார்ப்பதற்கே பரவசமாக இருக்கும். தப்படிப்பு மூலம் தனக்கே ஒரு பாணியை அமைத்துக் கொண்டு, 'தப்படி ராஜா'வாக ஊவாவில் பவனிவந்த அதே சின்னமுத்து, தனது மகள் ஆனந்தி பெரியவளான அன்றே மகளின் கட்டாயத்தின் பேரில் 'தப்படிப்பு' தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டான்!

"டமார்.." கம்பியடி மொடக்கில் சிறிய கல்லு ஒன்றுடன் டயர் தட்டுப்பட்டு "திரிவீலர் நின்றபோது ஆனந்தியின் சிந்தனைகளும் தற்காலிகமாக நின்றன!

டீச்சர், திரிவீலர் ரோதையில, சின்ன கல்லு ஒண்ணு தடுக்கிச்சி! அதான் வண்டி நின்னுடுச்சு! என்று ஆட்டோ நின்றதற்கான காரணத்தை விளக்கினான் டைவர் சேகர்! அப்போது, அங்கே வண்டி மட்டுமா நின்றது ஆனந்தியின் சிந்தனைகளுமல்லவா திடீரென தடைப்பட்டு நின்றன! வண்டியைப் போல் அவளது சிந்தனைகளும் மீண்டும் தொடர்ந்தன!

மூன்று ரோட்டுக்கள் பிரிகின்ற அந்த இடத்துக்கு 'கம்பியடி' என்று பெயர் வந்ததே காரணமாகத்தான்! அந்தக் காலத்தில் மேல்டிவிசன் கம்பியடியிலிருந்து உருக்கு கம்பிகள்மூலம் அனுப்பப்படுகின்ற கொழுந்து மூடை (சாக்கு) இதே கம்பியடியில் வந்து தேங்கி, பின்னர் அங்கிருந்து லொறிகள்மூலம் தேயிலை ஸ்டோருக்கு எடுத்துச் செல்லப் படுவது வழக்கமாம்! இதன்மூலம் மூன்று கிலோமீற்றர் தூரத்தை தோட்ட லொறிகள் சுற்றிவருகின்ற போக்குவரத்துச் செலவு மிச்சப்படுத்தப்பட்டிருந்தது! காலை பத்து மணிக்கும் மாலை நான்கு மணிக்கும் உருக்கு கம்பியினூடாக கொழுந்துக்கூடைகள் செல்வது கண்கொள்ளாக் காட்சிகளாக இருக்கும்! ஒருமுறை கம்பியடி கொழுந்து மடுவத்தில், அப்பா சின்னமுத்துவுடன் வாசற்கூட்டி தொழிலை விடும்படி சண்டை போட்டது, அதன்பிறகு யாருக்கும் தெரியாமல் கம்பியடி மடுவத்தில் வந்து தங்கியது, இரவு எட்டுமணிவரை அச்சமின்றி இருந்தது, அதன் பின் சின்னமுத்து வந்து கெஞ்சிக்கூத்தாடி அழைத்துச் சென்றது, அடுத்த நாளே தன் பேச்சை மதித்து அப்பா 'வாசற்கூட்டி' தொழிலையேவிட்டது. எல்லாமே ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தபோது, அவள் - அப்பா மீதுகொண்ட கோபத்தின் அர்த்தம், போலியானதாக ஆனந்திக்குத் தெரிந்தது!

அதுமட்டுமல்ல, படிக்காத, பழக்கவழக்கம் புரியாத ஓர் ஏழைத் தந்தை, தன் எழுச்சிக்காக - எடுத்துவைத்த ஒவ்வொரு முயற்சியும் அவளது பிஞ்சு உள்ளத்தை, கொஞ்சம் கொஞ்சமாக -குத்திக் கிளறிக் கொண்டிருந்தது. அவளது கண்கள் அவளை அறியாமலே குளமாயின!

கண்களை துடைத்துக்கொண்டு, வெளியே எட்டிப் பார்த்த ஆனந்திக்கு, தூரத்தே தெரிகின்ற சாமிமலை ஆறு மீண்டும் ஒரு சோகக்கதையை நினைவுபடுத்தியது!

அன்று ஆனந்தியின் வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத பொன்னாள்! ஆம், அன்று ஆனந்தி -க.பொ.த. சாதாரண தரம் பரீட்சையில் ஏழு பாடங்களிலும் C விசேட சித்திகள் பெற்றிருந்தாள்! அந்த ஆனந்தச் செய்தியை அருமை அப்பாவிடம் சொல்லி மகிழ்ந்திட பாடசாலையிலிருந்து வீட்டுக்கு ஓடோடி வந்தவளை, சின்னமுத்துவின் நிறைபோதை நிலை அவளை ஏதும் செய்யமுடியாமல் திக்குமுக்காட வைத்தது!



வகுப்புத்தோழிகள், பாடசாலை ஆசிரியர்கள், தெரிந்தவர்கள் என்று பலரிடம் ஓகோ என்று புகழப்பட்டு தன்னிலை உணர்ந்து, தாழ்வுச் சிக்கலில் இருந்து மாறியவளை அப்பனின் போக்கு ஆச்சரியத்தை மட்டுமல்ல அளவற்ற கோபத்தையும் உண்டுபண்ணியது. என்ன செய்வதென்று தோன்றாத அவள், அதே பாடசாலை கவுனுடன் 'சாமிமலை' ஆற்றில் விழுந்துதன் உயிரையே மாய்த்துக்கொள்ளும் வெறியுடன் ஓடியவளை, எதேச்சையாக எதிர்ப்பட்ட செல்லையா முதலாளி கண்டு விசாரித்து, ஆறுதல்சொல்லி ஆனந்தியை அவள் வீட்டில் கூட்டிவந்து ஒப்படைத்துவிட்டு சின்னமுத்துவுக்கும் நாலு சாத்து சாத்திவிட்டு போனார்!

அடுத்த நாள் காலை சின்னமுத்து வழமைக்கு மாறாக ஐந்து மணிக்கே எழுந்து மகளுக்கு குளிப்பதற்காக வெந்நீர் வைத்துவிட்டு, சமையல் வேலையையும் முடித்துவிட்டு இருட்டோடு பிறட்டுக்குக் கிளம்பினான்! அதுமட்டுமல்ல, அன்றுடன், பல வருடங்களாக விடமுடியாமல் இருந்த குடிப்பழக்கத்தையும் ஒரே நாளில் விட்டான் சின்னமுத்து!

"டீச்சர்! டீச்சர்! உங்க வீடு வந்துடுச்சு! திரிவீலரை நிறுத்துறேன். இறங்கிக்கங்கோ..." என்று கனவில் மிதந்த ஆனந்தியை டைவர் சேகர்தான் நிஜ உலகுக்கு அழைத்துவந்தான்!

"தேங்ஸ் தம்பி! இந்தா ஹயர் காசு மீதியை நீயே வைச்சுக்கோ... கோட்டசுக்கு கொஞ்சம் தூரம்தானே, நீ சந்திக்குப் போயிடு!" என்று சேகரை அனுப்பிவிட்டு, தன் பழைய வீடை நோக்கி நடந்தாள் ஆனந்தி...!

பாதை ஓரமாக மேல்புரத்தில் அமைந்திருந்த அந்த ஐந்தாவது கோட்டஸில் ஆனந்தி - தன் மகனையும் கூட்டிக்கொண்டு நுழைந்தபோது, அவளது சின்னம்மா தெய்வானை தான் அவளை வரவேற்றாள்!

"ஓ.. யாரு? ஆனந்தியா..! என்னம்மா இப்போதான் வார்றியா..! சரி, சரி வா. வந்து இரு!" சின்னம்மாவின் அழைப்பை ஏற்று உள்ளே ரூமுக்கள் நுழைந்தாள். உள்ளே நுழைந்த ஆனந்தி இப்போது சின்னம்மாவைப் பார்த்துப் பேசினாள். சின்னம்மா! எப்படி சுகமா இருக்கீங்களா...? சித்தப்பா எங்க..? சின்னத்தம்பி - சின்னத்தங்கச்சி, எங்க போயிட்டாங்க என்று ஆனந்தி வந்ததும் வராததுமாக தன்னையும் தன் குடும்பத்தையும் விசாரித்தது தெய்வானைக்கு என்னவோ போலிருந்தது. இருந்தாலும் அவள் கேள்விக்கு பதிலைத் தேடினாள் தெய்வானை. புள்ள ஆனந்தி! இங்க நாங்கள் எல்லாரும் நல்லாத்தான் இருக்கோம். உங்கப்பாதான் சரி சரி அதை பிறகு கதைப்போம். முதல்ல நீ போயி, மூச்சி மொகத்த கழுவிவிட்டு வா. நான் தேத்தண்ணி ஊத்தி வைக்கிறேன்" என்று ஆனந்தியை குசினியூடாக வெளிப்பக்கம் அழைத்துச் சென்றாள் தெய்வானை. மகன் திலீபனும் சின்னப்பாட்டியுடன் ஒட்டிக்கொண்டான்! ஆடைகளை மாற்றிக்கொண்டு கை, கால், முகம் கழுவிவிட்டு ஆறுதலாகச் சாமி அறையினுள் சென்று எப்போதும்போல் அவளது அம்மாவின் படத்தின் முன் ஐந்து நிமிடம் மௌனம் சாதித்தாள் ஆனந்தி!

ஆனந்திக்கு ஐந்து வயதானபோதே அவளது அம்மா ஆஸ்துமா நோயினால் இறந்துவிட்டாள்! அதன்பிறகு அவளை படிக்க வைத்து, பழக்கவழங்கங்களை சொல்லிக் கொடுத்து மேல்படிப்புக்காக பதுளை, ஹட்டன் போன்ற நகரங்களுக்கு அனுப்பி, படிக்க் வைத்துப்பின் கொட்டகலை ஆசிரியப் பயிற்சி கலாசாலைக்கு அனுப்பி ஓர் ஆசிரியையாக தன்னை வெளியுலகுக்கு அடையாளம் காட்ட உதவிய அன்பு அப்பா இப்போது இல்லாத வெறுமை ஆனந்தியை கல்வரமடையச் செய்திருந்தது!

கொட்டகலை ஆசிரியர் பயிற்சி பாடசாலையில் படிக்கும்போது, ஆனந்தி ஹட்டன் வாலிபன் சுரேஸை காதலித்து திருமணம் செய்து கொண்டாள். கலாசாலையை விட்டு வெளி ஏறியதும் இருவருமே ஹட்டன் பக்கத்திலுள்ள ஒரு தோட்டப் பாடசாலையில் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுக் கொண்டார்கள்!

ஆரம்பத்தில் எந்தவொரு ஏற்றத்தாழ்வுகளையும் பெரிதுபடுத்தாமல் இருந்த ஆனந்தியின் கணவன் சுரேஸ் மகன் திலீபன் பிறந்த பிறகு, அடிக்கடி ஏற்பட்ட கருத்து மோதல்களால் மனைவியை சந்தேகிக்கவும் துவங்கினான். கடந்த முறை வந்து அப்பாவுடன் சண்டையிட்டுச் சென்றவள் இம்முறை அதாவது ஐந்து நாட்களுக்குமுன், "அப்பா ஆஸ்பத்திரியில் இருக்கிறார் உடன்வரவும்" என்று சித்தப்பா தந்தி கொடுத்தபடியால் சகலத்தையும் மறந்து விட்டு, அதறிப்பதறிக்கொண்டு அருமை அப்பாவைப் பார்க்க ஓடோடி வந்திருக்கிறாள் ஆனந்தி! சுவாமி அறையிலிருந்து வெளியே வந்து சோகமாக சோபாவில் அமர்ந்த ஆனந்தியிடம் சித்தி தெய்வானை டீயை நீட்டியவாறு பேசினாள், ஆனந்தி இப்பகூட ஒங்கப்பனை பார்க்க நீ வருவேணு கொஞ்சம்கூட நாங்க எதிர் பார்க்கல, போன தடவ நீ இங்க வந்தப்ப ஒங்கப்பங்கூட சண்டை போட்டுட்டு கடைசியில் ஒங்கப்பனையும் அந்தப் பக்கம் வரவேணான்னுட்டு சொல்லிட்டுபோயிட்டியா. அதன்பிறகு ஒங்கப்பா ரொம்பவும் மாறிப் போயிட்டாரு! எந்த நேரமும் எதையோ பறிகொடுத்தவர் போல இருந்தார்! கொஞ்சக்காலம் கங்காணி வேலையை மட்டும் பார்த்துக்கிட்டு நடைப்பிணமா வாழ்ந்த அவரு போன தடவ அங்க ஒன்ன பார்க்க வந்துட்டுவந்த பிறகு ஓரேயடியாக மாறியே போய்விட்டாரு! ஒரு நீண்ட பிரசங்கத்தை பேசி முடித்தவளைப் போல், பேச்சை நிறுத்தி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட ஆனந்தியின் சித்தி தெய்வானை தொடர்ந்தும் பேசினாள். ஆனந்தி நீ கேட்டுக் கொண்ட படி ஒன்னப் பார்க்க வராத ஒங்கப்பா தன்வைராக்கியம் எல்லாத்தையும் மூட்டைகட்டி வச்சிட்டு, போன கிழமை ஒன்ன பார்க்க வந்துட்டு இங்கு வந்த பிறகு தான் தலைகீழா மாறிப்போயிட்டாரு என்று பேசிக்கொண்டு போன தெய்வானையை இடைமறித்தாள் ஆனந்தி. என்னம்மா சொல்றீங்க, அப்பாவுக்கு என்ன நடந்துச்சு?, ஏன் ஆஸ்பத்திரியில இருக்கிறாரு என்று பதட்டத்துடன் தன்னைப் பார்த்த ஆனந்தியை பார்த்து தொடர்ந்து பேசுகிறாள் தெய்வானை. ஒருகிழமை ஒழுங்கா சாப்பிடாததால இரத்தச்சோகை ஏற்பட்டு நம்ம ஆஸ்பத்திரியில இருந்து பதுளை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிட்டாங்க. சரி நான்தான் கேட்கிறேன்?, ஒங்கப்பா ஒங்க வீட்டுக்கு வந்தப்ப அங்க என்னதான் நடந்துச்சு? ஆளு திடுதிப்புண்ணு இப்படி மாறி போயிட்டாரு என்று ஆனந்தியின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள் தெய்வானை. ஆனந்திக்கு எதுவுமே புரியவில்லை. தான் ஏதும் சொல்லவில்லை, செய்யவும் இல்லை என்று தன்பக்க நியாயத்தை எடுத்துக்கூறிய ஆனந்தியிடம் அவளது தந்தை சின்னமுத்து அவளிடம் கொடுக்கச் சொல்லித்தந்த கடிதம் ஒன்றை மேசைக்கடியிலிருந்து எடுத்து வந்துகொடுத்தாள் தெய்வானை.

மக ஆனந்தி! இது நான் எழுதும் கடைசிக் கடிதமாகவும் இருக்கலாம்! தப்படி சுப்பனாக இருந்த ஒங்கப்பனை குடிகாரனாக வாழ்ந்த ஒங்கப்பனை வாசற்கூட்டியா இருந்த ஒங்கப்பனை ஒரு முழுமனிதனாக ஆக்கிவிட்ட பெருமை முழுக்கமுழுக்க ஒன்னயதான் சாரும்! ஆனா என்ன பயன்; நான் எல்லாம் மாறி ஒரு நல்ல மனுசனாத் தான் ஒன்னையப் பார்க்க நான் வந்தேன். ஆனா நீ இல்லாதப்ப உன் மாமா, மாமி புருசன் மூணுபேரும் பேசிய பேச்சு, ஏசிய ஏச்சு எந்த மானம் உள்ளவனாலும் பொறுக்க முடியாதம்மா. நான் கீழ்ச்சாதியாம்! நான் வாசற்கூட்டியாம், அவன ஏமாற்றி அவன் தலையில ஒன்னையக்கட்டி வச்சிட்டோமா. இனி செத்தாலும் அங்க வரக்கூடாதாம்! அம்மா, ஒரு காலத்துல ஒங்கப்பன் குடிக்காரனாக - கொள்கை இல்லாதவனாக இருந்தது உண்மைதான். ஆனா இப்ப எல்லாம் விட்டு நல்ல மனிசனா மாறிட்டேன்மா. இப்ப போயி இப்படி பேசலாமா என்னை மன்னிச்சிடும்மா. உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். ஆனா இனி அங்கே வரவே மாட்டேன்மா என்னை மன்னிச்சிடு.

இப்படிக்கு,

உன் அப்பா சின்னமுத்து.

கடிதத்தைப் படித்ததும் ஆனந்திக்கு உலகமே சுற்றியது. உடனே அப்பாவைக் கண்டு மன்னிப்புக்கேட்டிடத் துடித்தாள். அதனால் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு தெய்வானையும் மகன் திலீபனையும் கூட்டிக்கொண்டு பதுளை பெரிய ஆஸ்பத்திரிக்குப் போக, வெளியே வந்தவளை கண்ணீரும்கம்பலையுமாக ஓடிவந்த தெய்வானையின் கணவன்- ஆனந்தியின் சித்தப்பா தெரிவித்த செய்தி, ஆனந்தியை அதள பாதாளத்தில் தள்ளியது!

"ஆனந்தி ஒங்கப்பாவைப் பார்க்க நீ கொடுத்துவைக்கலம்மா. இன்னைக்கு காலையில ஒங்கப்பா நம்மையெல்லாம் விட்டுவிட்டு இறைவனடி போயிட்டாரும்மா!" தெய்வானையின் கணவர் ஆனந்தியை பிடித்துக்கொண்டு கதறினார். ஆனந்தி இழவுச்செய்தியைக் கேட்டதும் வாசற்படியிலேயே மயக்கம்போட்டு விழுந்துவிட்டாள்.

ஆனந்தியின் வாழ்க்கைச் சுடர் ஒளி விடுவதற்காக இவ்வளவு காலமும் மெழுகு வர்த்தியாய் இருந்த அவளது அன்புத்தந்தை அவளைக் காணாமலே அவளை விட்டுமல்ல. இவ்வுலகை விட்டுப் போய்விட்டதற்கு அடையாளமாக தூரத்தே, நாய் ஒன்று ஊளையிட்டது! (யாவும் கற்பனை)




ஜோசெப் கிருஷ்ணா

# விளையாட்டு

**ஒரு** விளையாட்டு வீரர் ஓய்வுபெறுவதைப் பற்றி எழுதுவது மிகச் சுலபம். கவிநயத்துடன்கூடிய சில வரிகளைத் தொடுத்து, கூடவே அங்கும்இங்கும் சில புள்ளிவிபரங்களைக் கோர்த்து, சில மறக்கமுடியாத தருணங்களை விபரித்தால், இதோ அர்த்த ராத்திரியில் அச்சேற்றுவதற்கான பிரியாவிடைக் கட்டுரை ஒன்று தயார். ஆனால், சச்சின் டெண்டுல்கருக்கு பிரியாவிடை சொல்லும் கட்டுரை எழுதுவது வித்தியாசமானது. அவரது சாதனைப் புதையல் விவரங்களால் நெகிழ்ந்துபோன எவரும் மிகக்கூடுதல் ஈடுபாட்டைத் தரவேண்டியிருக்கும். அவரது வாழ்க்கை அவருக்கான - சொந்தமான கதை அல்ல. இந்தப் பித்துப்பிடித்த விளையாட்டின்மீது மோகம் கொண்ட ஒவ்வொரு இந்தியனுக்கும் சொந்தமான கதை...

(குணால் பிரதான் - இந்தியா டுடே)


## புதிய நோக்கு



**ஐ**ந்து பேர்கொண்ட தெரிவுக்குழுவில் ராஜ்பாய், சச்சினின் பெயரை முன்மொழிந்தார். ஐந்து பேர்கொண்ட தெரிவுக்குழுவில் இருவர் சச்சின் வயதில் சிறியவராக இருப்பதால் இம்ரான்கான், வாசிம் அக்ரம், வக்கார் யூனுஸ் போன்றோரை சமாளிக்க முடியுமா என்கிற சந்தேகத்தை எழுப்பினார்கள். உடனே இன்னொரு தேர்வாளரான ஆகாஸ்லால், இயன் கிரெக் 17 வயதில், ஹனிப் முகமது 18 வயதில், விளையாட முடியும் என்றால் சச்சின் ஏன் 16 வயதில் விளையாட முடியாது? என்று கேட்டுள்ளார்.

விவாதத்தின் பின் டில்லிக்கு எதிரான ஈரானிய கோப்பை ஆட்டத்தில் 100 அடித்தால் அவன் தெரிவு செய்யப்படலாம் என்று முடிவாயிற்று. ரெஸ்ட் ஒப் இந்தியா அணிக்காக விளையாடிய சச்சின் முதல் இனிங்சில் 39 ரண்களில் ஆட்டம் இழந்தார். இரண்டாவது இனிங்சில் 9 விக்கெட் இழந்து, சச்சினின் 83 ஓட்டங்களுடன் இருந்தபோது குர்சரன் Retired hurt ஆனார். ராஜ்பாய் அவரை நோக்கி, "அந்தப் பையன் சதம் அடிக்கவேண்டும். அவனுக்கு உதவுங்கள்" என்றார். மீண்டும் குர்சரன் மைதானம் சென்று சமாளித்தார்.

## பாகிஸ்தான் சென்ற கதை



குல்சரன் ஒருகையால் சமாளிக்க சச்சின் அவதானமாக ஆடி சதம் அடித்தார். சதம் பெற்றதும் சச்சின் என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு நன்றி என்று கூறினார் என்கிறார் முன்னாள் இந்திய வீரர் குல்சரன்

பல ஆண்டுகளின்பின் நன்கொடை போட்டியொன்றில் விளையாட சச்சினை குல்சரன் அழைத்துள்ளார். உலகின் எந்த மூலையில் இருந்தாலும் வருவேன் என்றார் சச்சின். டில்லியில் கனமழை என்றார் குல்சரன். "இதை உங்களுக்காகச் செய்தே ஆகவேண்டும். எனக்குத் தேவைப்பட்டபோது எனக்காக நின்றீர்கள்; நான் வருவேன்" என்றாராம் சச்சின்.

(கருத்துக்கள் நன்றி: இந்தியா டுடே)

## சச்சின் ஓட்ட வேட்டை

### ஒரு நாள் போட்டிகள்

| | | |
|---|---|---|
| போட்டிகள் | - | 463 |
| ஓட்டங்கள் | - | 18426 |
| கூடுதலாக | - | 200 (ஆட்டம் இழக்காமல்) |
| சராசரி | - | 44.83 |
| சதம் | - | 49 |
| அரைச்சதம் | - | 96 |
| பிடிகள் | - | 140 |
| விக்கெட் | - | 154 |

### டெஸ்ட் போட்டிகள்

| | | |
|---|---|---|
| போட்டிகள் | - | 199 |
| ஓட்டங்கள் | - | 15847 |
| கூடுதலாக | - | 248 (ஆட்டம் இழக்காமல்) |
| சராசரி | - | 53.86 |
| சதங்கள் | - | 51 |
| அரைச்சதம் | - | 67 |
| பிடிகள் | | 115 |
| விக்கெட் | | 46 |





**அ**வருடைய ஆரம்பம் நாம் ரீவியில் பார்த்ததுபோலவே சுவையானது. மரத்தில் இருந்து மாங்காய் திருடியபோது பிடிபட்ட விஷமக்காரச் சிறுவனாக ராம்காந்த் ஆச்சரேகரிடம் அழைத்துச் செல்லப்பட்ட சச்சின் கிரிக்கெட்டில் முதல் சம்பாதித்தது இருபத்தைந்து பைசா.

பயிற்சி நேரம்முழுவதும் ஆட்டம் இழக்காமல் இருந்ததற்காக அதை ஆச்சரேகர் பரிசாகத் தந்தார். அவரது ஸ்கூட்டர் பின்னே அமர்ந்து மைதானம் மைதானமாகச் சென்று ஒவ்வொரு நாளும் நான்கு போட்டிகளில் விளையாடினார். போட்டிக்குத் தயாராவதென்பது அவருக்கு ஈடுபாடுமிக்கதானது. ஒவ்வொரு டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக அவரால் சரியாகத் தூங்கமுடியவில்லை.....

2001இல் ரூபா 100 கோடிக்கான விளம்பர ஒப்பந்தம், 2006 இல் ரூபா 200 கோடிக்கான விளம்பர ஒப்பந்தம் ஆகியவை வேகமாக மாறிக்கொண்டிருந்த தேசம் எதிர்பார்த்த வெற்றிக் கதைகள்....

(நன்றி குணால் பிரதான் - இந்தியாடுடே)

## அடங்கி உயர்ந்தான்

# நெஞ்சம் மறப்பதில்லை




இந்த விடயங்களை வாசிக்கும் இந்நேரம் சச்சின், தனது 200 ஆவதும் இறுதியானதுமான டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்துக்கு தயாராக இருப்பார்.

இவ்வேளையில் அவர் தொடர்பான சில விடயங்களை அசைபோடுவது சுவையாக இருக்கும்.

**1988, பெப்ரவரி 23 - 25 :**

தனது 14ஆவது வயதில் பள்ளித்தோழன் வினோத் காம்ப்ளியுடன் 664 ஓட்டங்களைக் குவிக்கிறார். இந்த எண்ணிக்கையில் 326 ஓட்டங்கள் சச்சின் ஆட்டமிழக்காமல் பெற்றது.

**1988 டிசெம்பர் :**

முதல்தர முதல் போட்டியிலேயே சதம் அடிக்கிறார்.

**1989:**

சச்சினின் டெஸ்ட் பிரவேசம். எதிர்கொள்ளவேண்டிய பந்து வீச்சாளர்கள் இம்ரான்கான், வக்கார் யூனுஸ் வசீம் அக்ரம். சச்சின், வக்கார் யூனுசின் பந்துவீச்சில் மூக்கில் அடிபடுகிறார். இரத்தம் கொட்டுகிறது. தொடர்ந்து ஆடி 57 ஓட்டங்கள் பெறுகிறார்.

**1990, ஓகஸ்ட் 14 :**

சச்சினின் வயது 17. இங்கிலாந்தின் ஓல் டிரபட் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இந்தியா தோல்வியைத் தழுவும் என்ற நிலையில், களமிறங்கி 119 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை சமநிலையாக்கினார். இளம் வயதில் டெஸ்ட் சதம் அடித்த இரண்டாவது வீரர் என்ற சாதனையை நிகழ்த்தினார்.

**1992 அவுஸ்திரேலியத் தொடர் :**

மெக்டேமட், மேர்வ் ஹியூஸ் போன்ற அதிவேகப் பந்து வீச்சாளர்களைச் சமாளித்தார். சிட்னி போட்டியில் ஷேன்வோண் அறிமுகம். இவர்கள் எல்லோரையும் எதிர்கொண்டு சிட்னியில் சதம் அடித்தார். தொடர்ந்து பெப்ரவரியில் உலகின் அதிவேக ஆட்டக்களமாகிய பேர்த் மைதானத்தில் 114 ஓட்டங்கள் எடுத்தார். இந்தப் பையன் இன்னும் என்னென்ன செய்வானோ என்று வியந்தார் அலன்போடர். அடிலெய்ட் டெஸ்டில் மார்க் டெய்லர், அலன் போடர், இருவரையும் அடுத்தடுத்து லெக்ஸ்பின் பந்துவீச்சில் வீழ்த்தியபோது ஜாம்பவான் பில்லோரி இறைவன் இந்தப் பையனை சொர்க்கத்தில் இருந்து அனுப்பியிருக்கிறார் என்றார்.

**1992 நவம்பர் :**

முதல் டெஸ்டில் மின்னல் வேகக் களத்தடுப்பாளர் ஜோன்ரி றோட்சின் மின்னல் எறியில் சச்சின் ரண் அவுட்டானார். அப்போதைய தெ.ஆபிரிக்க பந்துவீச்சு அணி ஜாம்பவான் அலன்டொனல்ட், மெரிக் பிறிங்கிள், மெத்யூஸ், கிரெய்க் மெக்கலன். இரண்டாவது டெஸ்ட்டில் இந்திய அணிபெற்ற மொத்த ஓட்டங்கள் 227. இதில் சச்சினின் பங்களிப்பு 111. இதில் சிறப்பு என்னவெனில் ஜொன்ரி றோட்சுக்கு சவால் விடுவதுபோல பொயின்ட் திசையில் தாறுமாறாக அடித்து நான்குகளைக் குவித்தார். ரோட்ஸ் எதற்கும் அஞ்சாதவர். ஆர்வக் கோளாறால் பீல்டிங்கில் அதிதிறமைகாட்டி காயம் பட்டுவிடுவாரோ என்று அஞ்சிய தலைவர் கெப்ளர் வெசல்ஸ் இவரை இடம் மாற்றி ஸ்குயார் லெக் பகுதியில் நிறுத்தினார். இந்த 111 ஓட்டங்களுடன் பத்தொன்பது வயதில் டெஸ்டில் 1000 ரண்கள் பெற்றவர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

டெஸ்ட் கிரிக்கெட் பிரவேசம். 1992 உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னரே இந்தியாவில் இவர் தனது முதலாவது டெஸ்ட் போட்டியை விளையாடினார்.

**1993 பெப்ரவரி :**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் (சென்னையில் நடைபெற்றது) 165 ஓட்டங்கள் குவித்தார். (24 பவுண்டரிகள், 1 சிக்சர்) இந்தியா, இங்கிலாந்தை இனிங்ஸ் மற்றும் 22 ஓட்டங்களால் வெற்றி கண்டது.

**1994 :** நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் சித்து களமிறங்க முடியாமற்போக முதன்முதலாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்குகிறார். இலக்கு 143 மட்டுமே. சச்சின் 49 பந்துகளில் 82 ரண் குவித்து 17 ஓவர்களில் ஆட்டத்தை வெல்ல உதவினார்.

**1995 ஒக்ரோபர் :**

வேர்ல்ட்ரென் நிறுவனம் இவரை 31.5 கோடி இந்திய ரூபாக்களுக்கு ஒப்பந்தம் செய்ய உலகின் அதிசெல்வந்த கிரிக்கெட் வீரரானார் சச்சின்.

**1996 :**

உலகக் கிண்ணம். 2 சதங்கள், 3 அரைச்சதங்கள் உள்ளடங்க 523 ரண்கள். சராசரி 87.16. ஒரு ஆட்டத்தில் கிளென் மெக்ராவின் ஒரு ஓவரில் 4 பவுண்டரி 1 சிக்சர் அடிக்க கடுப்பானார் மெக்ரா.

**மோசமான காலம் :**

**1996 :**

ஓகஸ்ட் 8, 23 வயதில் இந்திய அணியின் தலைவராகிறார். 1998, ஜனவரி 2ஆம் திகதியுடன் அணித்தலைமை முடிவுக்கு வருகிறது. தொடர்ந்து 5 டெஸ்ட் போட்டித் தோல்வி மொத்தம் 17 டெஸ்ட் போட்டிகளில் 3 இல் மட்டுமே வெற்றி. பல்வேறு காரணங்கள் ஒன்று சேரவே சச்சின் அணித்தலைமையைத் துறக்கிறார்.

**1998:**

அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டி அட்டவணையில் இந்தியா வருகிறது. மும்மைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமான பயிற்சிப் போட்டியில் ஒரே நாளில் 202 ரண்கள் எடுக்கிறார். ஷேன் வோர்ணுக்குப் பலத்த அடி. பின்னர் சென்னை டெஸ்டில் 155 ஓட்டங்கள் எடுத்தார். இந்த ஆட்டத்தில் இந்தியா வென்றது.

இந்தத் தொடரில் முதல் இரட்டைச் சதம் அடித்து இரண்டு சதங்கள், மூன்று அரைச்சதங்கள் என்று ரண்கள் குவித்தார். இந்தியா தொடரை 2-1 என்று வென்றது.

(தொடரும்...)



"காதல் சுடும்"
என்றாள்.
"காதல் சுடுமா?
எனில்
காதல் தீயா?"

தோழி
வினா எழுப்பினாள்.
தேன் எனவும்
தித்திக்கும் தீ எனவும்
சுடும்" என்றாள் குந்தவை!

எப்போது தித்திக்கும்?
எப்போது சுடும்?"
என்று கேட்டாள்.

"சந்திக்கும் போது
தித்திக்கும்!
தனித்திருந்து
சிந்திக்கும்போது
தகிதகிக்கும்!"

"நினைவுகள் இனிக்கும்
என்பார்களே?" தோழி
அனுபவம் அறிய விசாரணை
நடத்தினாள்.

"உள்ளம் இனிக்கும்
உடல் தகிக்கும்
நினைவுகள் சுரக்க
மேனி கொதிக்கும்!

நீராடும் போதும் நீர் சுடும்
காற்றாடும் போதும் காற்று சுடும்
சுடும் சுடும் காதல் சுடும்
சுடும் சுடும் காமம் சுடும்!"

குந்தவை சொன்னதும்
தோழி துருவினாள்
"தீ சுட்ட புண்ணுக்கு
மருந்து உண்டு!
காதல் சுட்ட புண்ணுக்கு
மருந்து உண்டோ?"

"காதல் சுடும் சுட்டாலும்
புண்ணாகாது? காதல்
சுட்டாலும் சுகமே தரும்"
தோழிக்கு புரியவில்லை
புருவத்தை நிமிர்த்தினாள்.

"சங்கு சுட்டாலும்
வெண்மை தரும்
இரும்பு சுட்டாலும்
கூர்மை தரும்!"

விளக்கினாள் குந்தவை
வியந்தாள் தோழி!
பின்னர் ஏன் பிரிவை
எண்ணி பெருமூச்சு!"
"பட்டறையில் இரும்பை



# சுடும் சுடும்

சூடாக்கி அடிப்பது ஏன்?
வாளாக்க வேலாக்க.
கூராக்கி பதமாக்க!"

"பிரிவு என்பதும்
உலைக்களம் தானடி.
நினைவால் சூடாக்கி
நினைவால் அடிபட்டு

பதமான மேனி பார்த்திருக்கும்
வழிமேல் விழிவைத்து!"

"போருக்கு சித்தமான வாள்போல
கூடல் போருக்கு சித்தமாகுமோ
உன் தோள்? தோழி குறும்புச்
சரம் தொடுத்தாள்
நீரின்றி கிடந்த நிலம்

மழை கண்டால் என்னாகும்?"

நிலவின்றி கிடந்த வானம்
நிலவு வந்ததும் என்னாகும்?"
அப்படித்தான் தோழி
என் நிலையும் ஆகுமடி!"

"பசித்திருந்த சிங்கத்துக்கு
இரை கிடைத்தால் என்னாகும்
என்று கேட்டாள் தோழி.

"புசிக்க கிடைத்ததை மிச்சம் மீதி
விடாது!" என்றாள் குந்தவை.
பாவமடி நீ – பாயப் போகிறது
சிங்கம் என்றாள் தோழி.

"பயன்தான் வேண்டும்
மாயத்தான் ஆசை! காயத்தான்
வேண்டும் சிலநாள்!

நனையத்தான் வேண்டும்
பல நாள்! காணத்தான்
வேண்டும் அவரை!
பூணத்தான் ஆசை அவரை!"

"குந்தவை நீட்டிக் கொண்டிருக்க
போதுமடி போதும் கேட்கும்
எனக்கே வருகிறது வெட்கம்"

வெட்கம் என்பது
அணைக்கும் வரை மட்டும்!
ஆடை என்பதும்
அணைக்கும் வரை மட்டும்!

அச்சம் என்பதும்
அணைக்கும் வரை மட்டும்!"
விளக்கம் கொடுத்தாள் குந்தவை.

ஐயையோ... வெட்கம்
கெட்டவளே!"
பழிப்பு காட்டினாள் தோழி.
"தொட்டதும் சிலிர்க்கும்
வெட்கத்தில் சிவக்கும் மேனி!

தொடத் தொட மயக்கம்
தொடப்பட விரும்பும் மேனி
கண் சிமிட்டினாள் குந்தவை.

"காமம் கரை மீறினால்
அறியாததை அறிய
துடிப்பதும் உண்டு
அறிந்ததை அறியாதபோல
நடிப்பதும் உண்டு!"

குந்தவை உரைத்தது
தோழிக்கு புதிராகவிருந்தது.
அறியாததைவிடு
அறிந்தும் அறியாதது
எது சொல் தோழி கேட்டாள்.

விரும்பிய காதலர்
வரும்போது
விரும்பின விதமாய்
தொடும்போது!
வெட்கம் என்பதை
அறியாதவர் போல
நாம் நடிப்போம்"

குந்தவை சொன்ன
விளக்கம் திருக்குறளிலும்
உண்டு காண்பீரே!

**"நாணென ஒன்றோ
அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்"**

அதிகாரம்: 126 – குறள்:1257



**சிந்தியா! பொதுநலவாய மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் வராததால் பாதிப்பு யாருக்கு..?**

**ஆர்.தர்சன், மட்டக்களப்பு.**

இலங்கையின் அழைப்புக்கு மன்மோகன் வராதது இலங்கைக்கு பின்னடைவுதான். அதைவிடவும் இந்திய மத்திய அரசுக்கு பொதுநலவாய மகாநாட்டில் கிடைக்கவேண்டிய கௌரவத்துக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பிராந்திய வலிமை மிகுந்த தலைமை என்ற தனது பிரதிநிதித்துவத்தை தனது உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளால் நகைப்புக்கிடமாக்கியுள்ளது.

**சிந்தியா! டேவிற் கமெரூன் இலங்கையின் மனித உரிமை மீறல்களை இலங்கை ஜனாதிபதியிடம் கேட்பதாக தமிழ் சமூகத்திற்கு வாக்குறுதி அளித்துள்ளாரே...?**

**பி.அபிநயன், மன்னார்.**

டேவிட் கமெரூன் இலங்கைக்கு வருவதும், வடக்குக்கு செல்வதும் பாராட்டுக்குரியது. தமிழர் விவகாரம் இந்திய பிராந்தியத்தைத் தாண்டி மெல்ல மேற்கு நாடுகள் நோக்கி நகர்வதற்கான ஆரம்பமாக கெமரூனின் கருத்துக்கள் உணர்த்துகின்றன. இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றி கேள்விகளைக் கேட்பேன் என்றுகூறிய கருத்துக்கள் ஏற்படுத்தியிருக்கும் எதிர்பார்ப்பை போட்டுடைக்காமல் பார்த்துக்கொண்டால் சரிதான்.

**சிந்தியா! பொதுநலவாய மாநாட்டின் மூலம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படுமென மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளாரே...?**

**க.பியந்தி, தெட்டகொட.**

பொதுநலவாய நாடுகளின் முக்கிய நோக்கமும், சவாலும் பொருளாதார முன்னேற்றம்தான். எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையை விடவும் அதிகளவான முதலீட்டாளர்கள் மகாநாட்டை ஒட்டி இலங்கைக்கு வருகைதந்திருப்பதும், இலங்கை சுற்றுலாத்துறையையும், உற்பத்தித் துறையிலும் எடுத்துவரும் முயற்சிகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளதைக் காட்டுகின்றது. இதன் பலாபலன்களை நாடு அனுபவிக்க சில காலம் எடுக்கும்.

**குடி குடியைக் கெடுக்கும். எனது அனுபவத்தில் சொல்லுகின்றேன். குடிகாரர்களைத் திருத்த வழிசொல்லுங்கள் சிந்தியா!**

**எஸ்.அயான், கிண்ணியா.**

உங்கள் அனுபவத்திலேயே திருந்த வழியையும் கூறினால் பொருத்தமாக இருக்கும். குடியைப் பற்றித் தெரியாதவர் வழி சொன்னால் அது உபதேசமாகப் போய்விடும். குடிக்காமல் இருப்பதற்கான நியாயத்தை ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பதே, குடிப்பதற்கான நியாயத்தை எதிர்கொள்ள சரியான வழியாகும்.

**சிந்தியா! கடவுள் மனிதனானால், கடவுளுக்கு வேலையே இல்லையே...?**

**ம.சபிதா, புத்தளம்.**

கடவுள் மனிதனானால் என்பதைவிடவும், மனிதன் கடவுளானால் என்று சிந்தித்தால் மனிதகுலம் மேம்படும். கடவுள் மனிதனானால் அவனும் இன்னொரு கடவுளைத் தேடத்தொடங்குவான். அதுசரி. கடவுள் மனிதனானால் என்று கேட்கிறீர்களே, அப்படியானால் இதுவரை கடவுள் என்னவாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்?

**சிந்தியா! அமெரிக்க அரசு ஒட்டுக்கேட்டதில் உங்கள் தொலைபேசியும், ஈமெயிலும் அடங்கியுள்ளதாமே..?**

**அலாவுடீன் A.L.A.பாபு, திருகோணமலை.**

இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஸ்கைப், பேஸ்புக் என எல்லாவற்றையும் ஊடறுத்து இரகசியம் அறியும் தொழில்நுட்பம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டுதான் இருக்கின்றது. கணினிமூலமாக தகவல் பரிமாற்றம் செய்யும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு இடத்தில் கண்காணிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றோம். கவனம்.

**சிந்தியா! கலியுகத்தில் நல்லவர்களும் தெரிந்துகொண்டே தீமையைச் செய்வார்களாமே...?**

**யோ.டொறின், வவுனியா.**

நன்மையை உணர்த்த சில தீமைகளைச் செய்யவேண்டிய காலம் இது. தீமைகளிலிருந்து நன்மையை தேடித் தெரிந்துகொள்ளும்வரை, நன்மைக்கும், தீமைக்கும் வேறுபாடு தெரியாமல் அதற்குள் தொலைந்துபோய், மீண்டுவருவதுதானே விதி.

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பறிக்கப்பட்ட நிலங்கள்....

இந்த நிலையிலேயே அவர்களின் காணிகளில் மயிலிட்டி, தையிட்டிப் பகுதி மக்களை மீளக்குடியேற்ற முயற்சிக்கப்படுவதை எதிர்த்து அந்த மக்கள் கொதித்துப்போய் இருக்கின்றனர்.

படையினரின் குடியேற்ற முயற்சிகள் ஏற்படுத்தியிருக்கும் குழப்பத்தை வெறும் பார்வையாளராக இருந்து எதிர்ப்பதைவிடவும் தேவையான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென களத்தில் இறங்கிய ஈ.பி.டி.பியினர் யாழ். அரச அதிபருடன் சேர்ந்து மேற்குறிப்பிட்ட கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை அவர்களின் சொந்த மண்ணில் குடியேற்றவும் வலி.கிழக்கில் ஜெ.284 வளலாய் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களையும் தற்போதைய சூழலைப் பயன்படுத்தி மீள்குடியேற்றுவதற்கு முடிவுசெய்துள்ளனர்.

யாழ். சுன்னாகம் பகுதியில் உள்ள ஊரணி, கோணாப்புலம், சபாவதிப்பிள்ளை, பெரிய மதவடி மற்றும் கண்ணகி முகாம்களில் வாழும் மக்களை உடனடியாக சொந்த இடத்தில் குடியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

பொதுநலவாய மகாநாடு நடைபெறுகின்ற பொழுதில் இலங்கை அரசு கபடத்தனமாக சிலரை மீள்குடியேற்ற முயற்சிக்கின்றது என்று விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது. ஆனாலும் அதையும் ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்டு எமது நிலங்களை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு மீட்டு உரியவர்களை மீள்குடியேற்றவும் வேண்டும் என்பதும் நிலத்தை மீட்கும் போராட்டத்தின் ஒரு பகுதி வெற்றிதான்.

இந்த வாய்ப்பை தொடர்ந்தும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்கு மக்களும் திட்டமிட்டவகையில் முயற்சிக்கவேண்டும்.

நிலமீட்பு போராட்டத்தை, வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்வதனூடாகவும், வற்புறுத்தும் பேச்சுவார்த்தைகளுக்கூடாகவும் தமிழ் மக்கள் தொடரவேண்டும்.

எமது நிலம் தொடர்பாக நாமே முடிவு செய்யும்வரை பூர்வீக மண்ணை முழுமையாக பெற்றுக்கொள்ளும்வரை தமிழ் மக்கள் ஓய்ந்திருக்கப்போவதில்லை என்பதை உணர்த்தவேண்டும்.

சொந்த மண்ணை பறிகொடுத்து, உரிமைகள் வாங்குது, கண்ணை விற்று சித்திரம் வாங்குவதுபோலாகிவிடும். அரச காணிகளை ஆளுக்கு ஒரு துண்டாக பகிர்ந்து தரக்கோரும் விடயமல்ல. சொந்தக் காணிகளை மீட்கும் நியாயமான முயற்சி என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும்.

ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன்,
தேச பந்து, கலாநிதி,
பேராசிரியர்,
P.K.சாமி JP ஐயா

**மலையாள மாந்திரிக சக்தி**

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்புக்களுக்கு...


**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13. Tel : 011 2342463/4, 011 2470615
Fax : 011 2344831 E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் உண்மை
உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை"

## முத்துத் தம்பியும் — கந்தசாமியும்



**கா.பூ:-** அடடே! முத்துத் தம்பி அண்ணை. கனகாலத்துக்குப் பிறகு இங்காலப் பக்கம் வந்திருக்கிறியள் போலக் கிடக்கு... இப்பிடி இருங்கோ கொஞ்சம் கதைப்பம்.

**மு.தம்பி:-** ஓம் ஓம். வயசு போனதால முன்னம் மாதிரி அடிக்கொருமுறை வர முடியாதுதானே. அது கிடக்கட்டும். நாட்டின் நிலைமையள் எப்படி இருக்குதெண்டு சொல்லுமன்.

**கா.பூ:-**என்னத்தையண்ணை சொல்லுறது. இப்ப கொஞ்சநாளாய் மாகாணசபை பரபரப்புக்கள் முடிஞ்ச கையோட பொதுநலவாய மாநாடு எண்டு ஒரே பரபரப்பாய் இருக்கு.

**மு.தம்பி:-** ஓம் கந்தசாமி. பொதுநலவாயத்தை கொழும்பில நடத்தவேணும் எண்டு ஒற்றைக்காலில நிண்ட அரசாங்கம் அதில வெற்றி பெற்றிட்டுது.

**கா.பூ:-** (குறுக்கிடுகிறார்) நடத்திற விஷயத்தில பட்டபாட்டைவிட, மாநாட்டுக்கு மன்மோகன் ஐயாவைக் கொண்டுவந்து இறக்கிற விசயத்திலதான் எங்கடை ஆக்கள் சரியாய் மண்டையைப் பிசைய வேண்டிக்கிடக்கு. வருவாரா?, வரமாட்டாரா? எண்டுறதுதான் இப்ப கொஞ்சநாளாய் 'கொட் ரொப்பிக்'

**மு.தம்பி:-** அதுசரி தெரியாமத்தான் கேட்கிறன் மன்மோன் ஐயா! வாறத்தால என்ன இலாபம்? வராம விடுறத்தால என்ன நட்டம்? எண்டு நீர் நினைக்கிறீர்?

**கா.பூ:-** அண்ணை இதக் கொஞ்சம் மேலோட்டமாய்ப் பாக்கேக்க, மன்மோகன் ஐயா வாறது இலங்கை அரசாங்கத்துக்கு வெற்றி போல தெரியுது. அதை வைச்சுக் கொண்டுதான் எங்கடை ஆக்கள் அவர் வந்திடக்கூடாது எண்டு குத்தி முறியினம்.

ஆனால், எங்கட சனத்தைப் பொறுத்தவரையில அவர் வாறதால கூடப் பிரயோசனம் கிடைக்கும் என்கிறத கொஞ்சம் டீப்பாய் பார்த்தால் விளங்கிக்கொள்ளலாம்.

**மு.தம்பி:-** என்ன கந்தசாமி நீர் ஒரே குழப்புக் குழப்புறீர்?

**கா.பூ:-** அண்ணை...! மன்மோகன் ஐயா, எலக்ஷன் வர இருக்கிற நேரத்தில தமிழ்நாட்டில இருக்கிற எதிர்ப்பையும் தாண்டி வந்தார் எண்டா தமிழ் நாட்டு மக்களை தஜா பண்றதுக்காக இங்க சில விசயங்களை உறைப்பாய் சொல்ல வேண்டியிருக்கும். அது எங்கட சனத்துக்கு நல்லதுதானே!

என்ன ஐசே நீர் சொல்லுறீர்? மன்மோகன்சிங் ஐயா வந்து தமிழ் நாட்டுக்காரர் கேட்கிற மாதிரி போர்க்குற்ற விசாரணை சர்வதேச விசாரணை எண்டெல்லாம் பேசுவார் எண்டு நினைக்கிறீரே?

**கா.பூ:-** நோ... நோ... நோ... அங்கதான் பிழைவிடுறியள். ஒருக்காலும் இந்தியா அந்த லைன்ல போகாது. அவையளப் பொறுத்தவரையில இலங்கை அரசாங்கம் தங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கு அமைய 13 பிளசில ஒரு அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வரோணும் எண்டுதான் வலியுறுத்துவினம். அது நல்லதுதானே.

**மு.தம்பி:-** என்ன சொல்லுறீர் கொஞ்சம் விளக்கமாய் சொல்லுமன்.

**கா.பூ:-** அண்ணை...! எங்களுக்கு ஆருமே தாம்பூலத்தில வைச்சு அரசியல் தீர்வைத் தூக்கித் தாறதுக்கு தயாராய் இல்லை என்கிறதை நாங்கள் விளங்கிக் கொள்ளவேணும். அதுக்குள்ள உறுமய, ராவணா கொஞ்சக் குறூப் ஒண்டும் குடுக்கக் கூடாது எண்டு வீம்பு பண்ணிக் கொண்டு நிக்குது. இதுகளுக்குள்ளால எங்களுக்கு ஏதாவது கிடைக்க வேணும் எண்டால்' இந்தியாவின்ர பிறசர் ஒண்டு கட்டாயம் தேவை. உதாரணத்துக்கு வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்துறதுக்குக் குடுத்த மாதிரி.

ஆனால் எங்கடை ஆக்கள் சொல்லுறமாதிரி மன்மோகன் வராம ஒதுங்கிக் கொள்ளுவாரா இருந்தா இந்தப் பிறசர் குடுக்கிற சான்ஸ் இந்தியாவுக்குக் கிடைக்காமல் போகும். அது யாருக்கு இலாபம்...?

**மு.தம்பி:-** நீர் பலே கில்லாடிதான். கரெக்டாய் விஷயத்தைப் பிடிக்கிறீர். அப்ப நான் வரட்டே நேரமாகுது...!

### பயோ டேட்டா

| | | |
|---|---|---|
| பெயர் | :- | பொதுநலவாய மா்நாடுகள். |
| தொழில் | :- | மாநாடு நடத்துவது. |
| உப தொழில் | :- | தீர்மானங்களை இயற்றுவது. |
| பொழுதுபோக்கு | :- | உட்பூசல்கள். |
| சாதனை | :- | தீராத பூசல்கள். |
| சோதனை | :- | பூஷல்களை மறைத்துக்கொண்டு சிரிக்க வேண்டியிருப்பது. |
| கூறுவது | :- | நடுநிலை. |
| நாடுவது | :- | சார்புநிலை. |
| நம்புவது | :- | கடனுதவிகளை. |
| நம்பாதிருப்பது | :- | உறுப்பு நாடுகளை. |
| கலந்திருப்பது | :- | வறுமையும் செல்வமும். |
| வளர்ந்திருப்பது | :- | தீராத பிரச்சினைகள். |
| அபிவிருத்தி | :- | ஒன்றையொன்று சுரண்டி ஏப்பம் விடுவது. |
| எதிர்கால இலட்சியம் | :- | இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மாநாடு நடத்துவது. |

## இலக்கிய இராட்சசன்



ஒருசமயம் பிரபல நாவலாசிரியரான டுமாஸைப் பார்க்க ஒரு ரசிகர் பாரிஸ் நகர் தேடி ஓடிவந்தார். டுமாஸை அவர் கண்ட நிலை எப்படித் தெரியுமா? அவரைச் சுற்றிலும் கட்டழகிகள்! ஒருத்தி அவர் மடியில் உட்கார்ந்திருந்தாள். இன்னொருத்தி அவர் காலடியில் நெளிந்து கொண்டிருந்தாள். அவர் நாற்காலிக்குப் பின்னாலிருந்து வளைந்து அவரது பருத்த உதட்டில் முத்தம் கொடுக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள். ஒரு சிங்காரி. இந்தப் பெண்களின் உடலில் ஒரு சிறு குருவியின் இடையிலே கட்டுமளவுக்குக்கூட துணி கிடையாது! டுமாஸின் நண்பர்கள் , தங்கச் சுரங்கம் காண, அவர் பணத்தை எல்லாம் கரைத்து , அவரை ஓட்டாண்டியாக்கி ஓடிவிட்டார்கள். டுமாஸ் தன் வயோதிகத்தை வறுமையிலும் தனிமையிலும், எல்லோராலும் வெறுக்கப்பட்டவராகக் கழித்தார். குடிக்கூலி கொடுக்கக்கூட வகையில்லாமல் தன் மேலங்கியை அடகுவைக்கும் படியானநிலை ஏற்பட்டது. இவர் மகன் இவரது கடன்களை அடைக்க முன் வரவில்லையானால் அகோரப் பசியுள்ள இவர் உணவின்றியே இறந்திருப்பார்.

டுமாஸ் இறப்பதற்குச் சில நாள் முன்னதாக ஒரு நாள் அவர் மகன், அவர் அறைக்குள் நுழைந்தான். அவர் தனது 'திரீ மஸ்கடீர்ஸ்' நாவலைப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் 'நாவல் எப்படி அப்பா இருக்கிறது?' என்று கேட்டான்.

"ரொம்ப நன்றாக இருக்கிறது; நல்ல நாவல்!" என்றாராம். தான் எழுதிய நாவலைப் படிக்கும் சந்தர்ப்பம் பாவம் அவருக்கு அப்போதுதான் கிடைத்தது! அவர் சொன்னதுபோல அது நல்ல நாவல்தான். டுமாஸ் அதை எழுதிய பிறகு எத்தனையோ பேர் எத்தனையோ நாவல்களை எழுதிவிட்டார்கள். ஆனால் காலத்தோடு அவைகளும் கரைந்துவிட்டன. ஆனால், இன்றிலிருந்து இன்னும் இருநூறு வருஷங்களுக்குப் பிறகும் டுமாஸின் நாவல்களை நமது பேரனுக்குப் பேரனுக்குப் பேரனும்கூட உற்சாகத்தோடு படித்து மகிழ்ந்து பரவசமடையத்தான் போகிறார்கள்.

**(முற்றும்)**

# இந்தவாரம் உங்கள் பலன்

(14.11.2013 தொடக்கம் 20.11.2013 வரை)

### மேடம்

காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருக்கவும். புதிய வீடு மற்றும் நிலங்கள் வாங்குவீர்கள். அரசியல்வாதிகளால் ஆதாயம் உண்டு. மூத்த சகோதரரால் பொருட் செலவுகள் ஏற்படும். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வேற்று மதத்தவரால் ஆதாயம் உண்டு. தேவையற்ற மனச்சஞ்சலமும் குழப்பங்களும் குடும்பத்தில் வரக்கூடும். உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமாகிய தொல்லைகள் வந்துபோகும். சுயதொழில் செய்வதற்கான முயற்சிகளில் சற்றுக்காலதாமதம் ஏற்படலாம். விவசாயம் செய்வோர்கள் புதிய முறை விவசாயங்களில் கவனமுடன் செயற்படவும். விசா பிரச்சினைகள் தீர்வதற்கான வாய்ப்புகள் உள்ளது.

### இடபம்

பிள்ளைகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் பணவரவு உண்டு. திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்க்கவும். இரும்பு, பழைய பேப்பர் மற்றும் பிளாஷ்டிக் சம்பந்தமான பொருட்களின் வியாபாரிகள், விஞ்ஞானத் துறையை சார்ந்தவர்கள், மதபோதகர்கள், மீன், முட்டை மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்கள் நல்ல இலாபம் பெறுவார்கள். புதிய வீடு, நிலம், வாகனம் போன்றவற்றை மற்றவர்களின் உதவிகளோடு வாங்குவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### மிதுனம்

விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சி உண்டாகும். உத்தியோகத்தில் இட மாற்றம் ஏற்படும். விவசாயம் செய்வோர்கள் விவசாயத்தில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது, பெண்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். பொருளாதாரம் சுமாராக காணப்படும். விஞ்ஞானத் துறையைச் சார்ந்தவர்கள், கழிவுப்பொருள் ஏற்றுமதி இறக்குமதிகளை செய்வோர்கள், வட்டி தொழில் செய்வோர்கள், போன்ற தொழில்செய்வோர்கள், பழைய இரும்பு, பழைய இயந்திரம், இரசாயன சம்பந்தமான தொழில்செய்வோர்கள் ஆகியோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள்.

### கடகம்

ஒரு சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படலாம். கண்களில் கவனம் தேவை. நண்பர்களால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகும். பிறருக்காக உழைப்பதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். பெண்கள் கவனமாக இருக்கவேண்டிய காலமாகும். விளையாட்டுத்துறையைச் சார்ந்தவர்கள் வெற்றியீட்டுவார்கள். தென்திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். தந்தையின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். காதலர்களுக்கு நல்ல யோகம் உண்டு. பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.

### சிங்கம்

சகோதர சகோதரிகளுடன் காரணமில்லாத சச்சரவுகள் வந்துபோகும். கண்களில் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் நீங்கி உறவுகள் பலப்படும். விவசாயம் செய்வோர்கள் மிகுந்த கவனமுடன் இருக்கவும். தொலை தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லதாகும். உடம்பில் வாதம் வாயு மற்றும் எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். சொத்துக்கள் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்த நல்ல முடிவுகள் கிடைக்கச் இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். கூட்டுத்தொழில் சம்பந்தமான புதிய முயற்சிகளில் வெற்றி உண்டாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### கன்னி

புதிய வீடு நிலம் வாங்குவது சம்பந்தமான முயற்சிகளைச் சற்றுக் கால தாமதமாகச் செய்வது நல்லது. கைவிட்டுப்போன பொருட்கள் திரும்பக் கிடைக்கும். முன்கோபத்தை தவிர்ப்பது நல்லதாகும். உறவினர்களின் வரவால் பொருட்செலவுகள் உண்டாகும். தாயின் உடல்நிலை பாதிப்பால் மருத்துவச் செலவுகள் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரும். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை. கணவன் – மனைவிக்கிடையில் ஒற்றுமை மேலோங்கும். தந்தையால் பொருள்வரவு உண்டு. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### துலாம்

செய்தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். அடுத்தவர்களின் விசயத்தில் தலையிட்டு மனநிம்மதியை இழக்கவேண்டாம். காதல் விசயங்களில் எதிர்பார்த்திருந்த நல்ல செய்திகள் கிடைக்கக்கூடிய காலமாகும். ஒரு சிலருக்கு புதிய வீடு மற்றும் வாகனம் வாங்க வாய்ப்பு உள்ளது. புதிய ஆடை அணிகலன்கள், ஆடம்பர அலங்கார பொருட்களை வாங்குவீர்கள். பூமி, நிலம் சம்பந்தமாக வெகுகாலமாகத் தடைப்பட்டு வந்த காரியங்களில் நல்ல முடிவுகள் கிடைக்கும். விவசாயிகளுக்கு நல்ல இலாபம் பெறுவர். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### விருச்சிகம்

பழைய கடன்கள் அடைபடும். பிறருக்காக ஜாமீன் போடுவது சம்பந்தமான விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக் கொள்ளவேண்டாம். தந்தை–மகன் உறவில் சிற்சில பிரச்சினைகள் வரலாம். குலதெய்வ வழிபாட்டிற்காக வெளியூர் செல்லுவீர்கள். இரும்பு, இயந்திரம், இரசாயனம் சம்பந்தமாகிய தொழில்களை செய்வோர்கள், பலசரக்கு, எண்ணெய் சம்பந்தமான வியாபாரிகள், பழைய பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர்கள், மாமிச உணவுகளின் வியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன்களை அடைவார்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### தனுசு

கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளில் இருந்துவந்த தடைகள் நீங்கித் திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது. தேவையற்ற விசயங்களில் தலையிட்டு மன நிம்மதி இழக்க வேண்டாம். நீண்டகாலமாக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த கடன் உதவிகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ள காலமாகும். விபரீதமான எண்ணங்களை விட்டுக் காரியத்தில் கவனமாய் இருங்கள். நீண்டதூரப் பயணங்களால் மனநிம்மதி ஏற்படாது. சகோதரர்களால் பொருள்வரவு உண்டாகும்.

### மகரம்

மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச்செலவுகள் வந்துசேரும். வீடுகளில் பணம், பொருட்கள் திருட்டுப்போக இருப்பதால் எச்சரிக்கை தேவை. வடதிசையில் இருந்து எதிர்பாராத தனவரத்துகள் உண்டு. வேண்டாத மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு பிரச்சினைகளை விலைக்கு வாங்கி மனநிம்மதியை இழக்கவேண்டாம். விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். அடுத்தவர் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும்.

### கும்பம்


நெடுநாட்களாக வராத கடன் கொடுத்த பணம் திரும்ப கைவந்து சேரும். தெய்வத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்வீர்கள். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் குறையும். வீடுகளைத் திருத்திக் கட்ட எண்ணுவீர்கள். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். உறவினர்கள் மற்றும் நண்பர்களால் எதிர்பாராத ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் உண்டாகும். காதலர்களுக்கு நன்மையான செய்திவந்து கிட்டும். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங்களை வாங்குவீர்கள். விவசாயிகள் நன்மை அடைவார்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மீனம்

மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. காதல் விசயங்களில் வெற்றிகிடைக்கும். சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட சுபகாரியங்கள் நடைபெறும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்காக வெகுமுயற்சிகளை செய்து கடனை அடைப்பீர்கள். பெரியவர்களின் நல்லாசிகள் கிடைக்கும். பெண்களால் வடதிசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். ஒரு சிலர் இருப்பிடம் விட்டு வெளியூர் செல்ல வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)





## தீபாவளிக் கொண்டாட்டம்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிஷெல் ஒபாமா, வெள்ளை மாளிகையில் தீபாவளி பண்டிகையை கொண்டாடினார்.

வெள்ளை மாளிகையின் கிழக்கு அறையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நடன நிகழ்ச்சிக்கு நியூயோர்க் நகரில் புகழ்பெற்ற அமெரிக்க - இந்திய இசைக்குழுவான கோல்டு ஸ்பொட் குழு வரவழைக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஒபாமாவின் அரசு நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் அமெரிக்க வாழ். இந்தியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, வெள்ளை மாளிகையில் தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தை மிஷெல் ஒபாமா, குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அதன்பின் வேத மந்திரங்களும் ஓதப்பட்டன. இந்த நிகழ்ச்சியின்போது மிஷெல் ஒபாமா கூறியது, உலகின் மிகத் தொன்மையான மதங்களில் ஒன்றான இந்து மதம் சார்பில் கொண்டாடப்படும் பண்டிகை தீபாவளி.

இது அமெரிக்காவில் மட்டுமல்ல உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. ஒபாமாவும், நானும் இந்தியாவிற்குச் சென்றபோது, தீபாவளி கொண்டாடுவதற்கான அவசியத்தை அறிந்துகொண்டோம்.

நமது கடமைகள் குறித்தும், சக மனிதர்களுக்கு நல்வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதற்கும் இந்த நன்னாளில் நாம் சிந்தனை செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

வீதிகளில் சிறுநீர் கழியுங்கள், வாழ்வதற்கு உகந்த நகரை உருவாக்குங்கள் என நெதர்லாந்தின் தலைநகர் ஆம்ஸ்டெடமில் பிரசாரம் செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பசுமையை ஏற்படுத்துவதற்கான தாவரங்களைக் கொண்ட கூரைகளை (லிவிங் ரூப்) உருவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியே இந்த சிறுநீர் கழிக்கச்செய்யும் திட்டம். இதற்காக வழிப்போக்கர்களை சிறுநீர் வழங்க ஊக்குவிக்கும் வகையில் நகரின் சனநெரிசலான பீர்ஸ்பிலீன் சதுக்கத்தில் பல யூரினல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பெறப்படும் சிறுநீரைக் கொண்டு பாஸ்பேட்களைப் பிரித்து வளர்க்கப்படும் தாவரங்களுக்கு உரமேற்ற பயன்படுத்தப்படவுள்ளதாம்.

தாவரம் செழிப்பாக வளர உதவும் நவீன உரங்களிலுள்ள நியூத்திரன், பொட்டாசியம், பொஸ்பரஸ் உள்ளிட்ட அனைத்து ஊட்டச்சத்துகளும் மனித சிறுநீரில் நிறைந்துள்ளதாக வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



## புதுமையான முயற்சி





## கண்காணிப்பு!

வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கும், வாகனப் போக்குவரத்துக்களை அவதானிப்பதற்கும் தற்போது கொழும்பு நகரில் வீதி கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. அப்படித்தான் சீனாவின் ஷங்காய் பகுதியிலுள்ள வீதி ஒன்றில் சுமார் 60 இரகசியக் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவ்வாறு பொருத்தப்பட்டிருக்கும் கமெராக்காளை கீழே உள்ள புகைப்படத்தில் காணலாம்.

எலும்புக் கூடுகளை பரிசோதனைக்
கூடங்களில் பார்த்தாலே எம்மில் பலருக்கு வயிற்றுக் கலக்கம் ஏற்பட்டுவிடும்.
ஆனால் கீழே உள்ள படத்தில் இருக்கின்ற மனிதன் 13 ஆண்டுகளாக
எலும்புக்கூடுகளுடன் வசிக்கும் விசித்திர மனிதர்.
பிரேசில் நாட்டில் Fabio Beraldo Rigo(47) என்ற நபர் 13 வருடங்களாக
எலும்புக்கூடுகளுடன் நிலவறையில் வசித்துவருகின்றார்.
குடும்பத்தினரால் கைவிடப்பட்ட நிலையில் வசிப்பதற்கு வீடு இல்லாததால்
இவ்வாறு வசித்துவரும் இவருடன் 6 எலும்புக்கூடுகள் காணப்படுவதுடன்,
அவற்றினை தனது உற்ற நண்பர்களாக நேசித்தும் வருகிறார்.



## விசித்திர மனிதன்



BMW எனப்படுகின்ற ஜேர்மனி தயாரிப்புக் கார்களுக்கு எப்பவுமே மௌசு அதிகம். அதில் பயணிப்பவர்கள் ஏனையவர்களின் பார்வையில் உயர்ந்த இடத்தில் வைத்து நோக்கப்படுவார்கள். இந்நிலையில் BMW Z4 டிராகன் கார் பாவனையாளர்களையும் வியப்பில் ஆழ்த்த வந்துவிட்டது தங்க நிறத்தில் BMW Z4 டிராகன் கார்.

சீனாவில் தங்க நிறத்தினை உடைய BMW Z4 மொடல் கார் ஒன்றினை ட்ராகனின் உருவத்திற்கு மாற்றியமைத்துள்ளனர்.

இந்த ட்ராகன் காரானது பலரதும் கவனத்தை தற்போது ஈர்த்துவருகின்றது.



## வினோத போட்டி

தாடி வளர்ப்பதை சோகத்தின் அடையாளமாக நோக்குகின்ற ஒரு போக்கு நம்மத்தியில் இருக்கின்றது. ஆனால் மேலைநாடுகளில் தாடியை வைத்து சாகசம் புரிபவர்களும் சாதனை படைப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். தாடி மற்றும் மீசையை அழகான முறையில் பராமரிப்பவர்களுக்கான போட்டி ஒன்று ஜேர்மனியில் இடம்பெற்றுள்ளது. இப்போட்டியில் முதலிடத்தை Patrick Fette, Dan Lawlor, Jeff Langum, Burke Kenny ஆகியோர் பகிர்ந்துகொண்டனர். இதில் 20 நாடுகளைச் சேர்ந்த 300 வரையான போட்டியாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



## உருவாக்கம்